July '49 Regd. No. M. 4975

மஞ்சரி

விரோதி - ஆடி

அமுத வசனம் 1
இந்தியாவில் அந்நியர் மூலதனம் . . . . . மாடர்ன் ரெவ்யூ 2
வரப்போகிற லட்சியப் பெண் . . . . வஸந்த் 9
புதுப் புது மலரும் கனியும் 12
நோயின் அறிகுறி 19
இன்றைய விவாகம் . . . . இந்தியன் உமன் 22
குழந்தையின் பழக்கம் . . . . . . பேரெண்ட்ஸ் மகஸீன் 25
ஸ்வாதித் திருநாள் . . . . பிரபந்த சைத்ரகம் 31
பிச்சைக்காரர் கொடுமை . . . . கர்மவீர் 35
வசந்தப் பறவைகள் . . . . ஸ்டேட்ஸ்மன் 38
கேம்ப்ரிட்ஜ் . . . . பிரிட்டிஷ் இன்பர்மேஷன் 41
கண்ணுக்குத் தெரியாத ஒளி . . . . . . பீப்பிள்ஸ் ஹெல்த் 44
ஒன்றும் ஒன்றும் பத்து 51
வேதமே ஆதாரம் . . . . பாரதி 53
சுதந்தர நேபாளம் . . . . பிரஜாமதம் 60
முன்னேற்ற வழி . . . . சிந்தனை 63
யட்சன் கேள்வி . . . . மகாபாரதம் 68
ஜப்பானில் காந்தி சங்கம் . . . . கதாவளி 71

விசேஷப் பகுதிகள்

பிழையைத் திருத்துங்கள் 8
க்விஸ் 17
பாபுராவ் பதில் சொல்லுகிறார் 29
பரமஹம்ஸர்: வாழ்வும் வாக்கும் 48
கார்ட்டூன் கதம்பம் 58
குழந்தைகள் குறும்பு 66
சிறுகதை : கறுப்புப் பெண் . . . எஸ். எஸ். சேஷகிரி ராவ் 75
புத்தகச் சுருக்கம் : வாழ்க்கையே கலை . . . காகா காலேல்கர் 83

அணா 6

வர்ணப் பதுமைகள்

மண்ணைக் கொண்டுதான் எத்தனை அழகழகான பதுமைகளைச் செய்து கண்ணுக்கு இனிய பல வர்ணங்களைத் தீட்டுகிறான் பொம்மைக்காரன்! மனத்துக்கு இனிய பலவிதப் பொருள்களைத் திரட்டித் தருவது 'மஞ்சரி.'

'ஜப்பானில் காந்தி சங்கம்' (பக். 71) உலகெங்கும் மகாத்மாவின் தத்துவம் பரவுவதற்கு ஓர் அறிகுறி. எல்லாப் பெற்றோருக்கும் 'குழந்தையின் பழக்கம்' (பக். 25) நன்றாகத் தெரிந்திருக்க வேண்டியது அவசியம். ஆங்கிலேயர் ஜயிக்காத 'சுதந்தர நேபாளம்' (பக். 60) பற்றிய விவரங்கள் ரசமானவை.

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்

த. நா. ஸேனாபதி

வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி

சீதா தேவி

கௌரி அம்மாள்

கா. ஸ்ரீ. ஸ்ரீ.

'குமுதினி'

கி. சாவித்திரி அம்மாள்

'ஆர்வி'

மோ. ஸ்ரீ. செல்லம்

ஓவியர்கள்: ஸாமி; சங்கர்; மகான்.

மஞ்சரி. தபால் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதார்களுக்கு மட்டும் ரூ. 4/-. சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள்.

மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 2] [இதழ் ௪

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

அமுத வசனம்

வாழ்க்கையை ஒழுங்குபடுத்திச் செயல்களுக்கு வழி காட்டும் வேலையைச் செய்வது தத்துவ சாஸ்திரத்துக்கு உரியது. உலகத்தில் நிகழும் மாற்றங்களிலும் கிடைக்கும் சந்தர்ப்பங்களிலும் அது நமக்கு வழிகாட்டிக் கொண்டு நிற்கிறது. தத்துவ சாஸ்திரம் ஜீவனுள்ளதாக இருக்குமானால் மக்களுடைய வாழ்க்கைக்குப் புறம்பாக அது இருக்க முடியாது. ஞானிகளின் கருத்துக்கள் அவர்களுடைய வாழ்க்கைச் சரித்திரத்திலே இணைந்திருக்கின்றன. அவர்களைப் போற்றி வழிபடுவதோடு அவர்களுடைய ஆற்றலையும் நாம் பெறவேண்டும்.

வசிஷ்டர், விசுவாமித்திரர், யாக்ஞவல்கியர், கார்க்கி, புத்தர், மகாவீரர், கௌதமர், கணாதர், கபிலர், பதஞ்சலி, பாதராயணர், ஜைமினி, சங்கரர், ராமாநுஜர் என்னும் பெரியோர்களின் திருநாமங்கள் சரிததிரக்காரனுக்குக் கிடைத்த கதைப் பாத்திரங்கள் மட்டும் அல்ல; மகான்களின் வெவ்வேறு வகை உருவங்கள். அவர்களுக்குத் தத்துவ சாஸ்திரம் என்பது அறிவையும் அநுபவத்தையும் ஆதாரமாகக் கொண்டு உலகத்தையே தழுவும் விஷயம்.

கடைசிவரையில் சிந்தித்துப் பார்க்கும் சிந்தனை, வாழ்க்கைச் சோதனையில் ஈடுபட்டுச் சோதிக்கும் சோதனைக்கு உட்பட்டால் அதுவே சமயம் ஆகிறது. தத்துவ சாஸ்திரத்தின் ஒழுங்குமுறையே சமய ஆசாரத்தின் நிறைவாக இருக்கிறது.

—புரொபஸர் ராதாகிருஷ்ணன்

இந்தியாவில் அந்நியர் மூலதனம்

பி. எல். கோல்வால்கர்

> 'அந்நியர் பணம் வருவது கெடுதல்' என்பது சிலர் கட்சி; 'வருவதே நலம்' என்பது வேறு சிலர் கட்சி. இரண்டும் முழுவதும் சரி அல்ல என்பது இந்தக் கட்டுரையின் கருத்து. இதை எழுதியவர் வர்த்தக காமெர்ஸ் காலேஜ் புரொபஸர்.

"இந்தியாவில் முதல் போடுவதற்கு ஐக்கிய அமெரிக்காக்காரர்கள் விரும்புகிறார்கள். தக்க பாதுகாப்புகளுடன் தொழில் நுணுக்கம் தெரிந்தவர்களின் உதவியையும் வழங்க எண்ணுகிறார்கள்" என்று வாஷிங்டனில் இந்தியாவின் தூதராக இருந்த பி. ராமராவ் சமீபத்தில் சொன்னார். இந்தியா சுதந்தரம் பெற்றுவிட்டதனாலும், இனிமேல் தொழில் துறையில் இந்த நாடு முன்னேறுவதற்குச் சந்தர்ப்பங்கள் இருப்பதனாலும் இப்போதெல்லாம் அந்நியர்கள் முதலீடு செய்யும் விஷயத்தைச் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதில்லை. இந்தியாவில் பெரிய பெரிய தொழில்கள் வளரவேண்டுமானால் ஏராளமான முதல் வேண்டும். இந்தியாவில் முதலாளிகள் பணத்தைக் கொடுக்கத் தயங்குவதனால் இந்த நாட்டில் முதலீட்டைச் சேமிக்க இயலவில்லை. ஆகவே, அயலாருடைய பணத்தை வாங்கி முதலீடு செய்வதை யாரும் தடுக்கமாட்டார்கள். தக்க நிபந்தனைகளுடன் அந்த முதலீடு இருக்க வேண்டும்.

இந்தக் காலத்தில் ஒரு தேசத்தின் பாதுகாப்புக்குப் பொருளாதார நிலை உறுதியாக இருக்கவேண்டும். இந்தியாவில் பொருளாதாரம் சீர்ப்பட வேண்டுமானால் தொழில் வளர வேண்டும். இந்த ஏழை நாட்டில் 6 சதவிகிதம் பொது ஜனங்கள் சேமிக்கிறார்கள். இதுவே அதிகம். இப்போதுள்ள விலைவாசிகளைப் பார்த்தால் இதற்கு மேலும் சேர்த்துவைப்பதென்பது நடக்காத காரியம். ஆகவே, தொழில்கள் முன்னேறவும் பொருளாதாரத் திட்டங்கள் நிறைவேறவும் அயலார் முதலீடு இப்போதைக்கு அவசியம். அயலாருடைய பணம் மாத்திரமல்ல; விஞ்ஞான அறிவு, தொழில் நுணுக்க அறிவு, பல தொழில்களைச் செய்யும் முறைகள் முதலிய துறைகளிலும் அவர்களுடைய உதவி நமக்குக் கிடைக்கும்.

வெளி நாட்டாருடைய பணம் இங்கே வருவதற்குமுன் அரசாங்கத்தாருடைய மேற்பார்வையில் இந்த முதலீட்டுக்குச் சட்ட திட்டங்கள் வகுக்கவேண்டும். அப்போதுதான் அந்தப் பணம் நாட்டின் நன்மைக்குரிய துறைகளில் செலவாகும். 'பழைய குருடி கதவைத் திறடி' என்பது போல மீண்டும் அயலாருடைய ஆதிக்கம் வராமல் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இது சம்பந்தமாகப் பிரசிடெண்ட் வில்ஸன் கூறியவை இங்கே ஞாபகத்தில் வைப்பதற்குரியன: "ஒரு நாட்டில் பணம்

காப்பிரைட்: மாடர்ன் ரெவ்யூ (ஆங்கிலம்: ஜுன் '49), கல்கத்தா.

போடுகிறவர்கள் யாரோ, அவர்களுடைய ஆதிக்கம் அந்த நாட்டுக்கு ஏற்படும். அயலாருடைய பணம் உள்ளே வந்து ஆக்கிரமிக்கும் அளவுக்கு அயலாருடைய செல்வாக்கும் புகுந்து பற்றிக்கொள்ளும். ஆகையால், முதலீடு செய்யும் முறையே வெற்றிக்குரிய முறையாகும்.”

இந்தியாவின் பழங் கதையைக் கவனித்தால் இது உண்மையென்று தெரியவரும். 17-ஆம் நூற்றாண்டில் பிரிட்டிஷ்காரர்கள் வியாபாரிகளாக வந்தார்கள்; மெல்ல மெல்ல நாட்டுக்கே அரசர்களாகி, சுமார் இரு நூறு ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்கள். ஆகையால் சுதந்தரம் அடைந்து விட்ட நாம் அயலாருடைய முதல் பணத்தை வரவிடும்போது அந்த முதலீடுகளின் முறைகளை மிகவும் கூர்ந்து கவனிக்கவேண்டும். அதோடு வருகிற பணத்தை நல்ல முறையில் பயன்படுத்தவேண்டும். முதலீடு செய்யும் அயலாருக்கு வேண்டிய சௌகரியங்களும் செய்து கொடுக்க வேண்டும்.

இந்தியாவில் அயலாருடைய பணம் இவ்வளவு இருக்கிறது என்ற புள்ளி விவரங்களைப் பலர் பல சமயங்களில் பலவாறு தெரிவித்திருக்கிறார்கள். 1930-ஆம் வருஷத்தில் அயல் நாட்டாரின் பணம் இந்தியாவில் 700 கோடி பவுன் இருந்தது. 1933-ஆம் ஆண்டில் 1000 கோடி பவுன் இருந்தது. 1945 மார்ச்சு மாதத்தில் 528.52 கோடி பவுன் இருந்ததாகச் சர்வதேச நிதியினர் மதிப்பிட்டிருக்கிறார்கள். இந்த அயலார் பணத்தில் பெரும்பகுதி அரசாங்க ஸ்தாபனங்கள் வாங்கிய கடன்கள். மூன்றில் ஒரு பங்குதான் தனி மனிதர்கள் வாங்கிய கடனாக வந்த பணம். இவற்றையன்றி 240 கோடி பவுனைப் பிரிட்டிஷார் இந்த நாட்டில் முதலாகப் போட்டிருக்கிறார்கள். அதற்கு விவரம் வருமாறு:

வியாபாரம், உற்பத்தி	50%
பாங்கு, இன்ஷ்யூரன்ஸ்	20%
கப்பல், பிற போக்கு வரவுச் சாதனங்கள்	13%
தோட்டங்கள், தேயிலைத் தோட்டம் ...	4%
சுரங்கம்	4%

இந்தியாவில் செல்வத்தைப் பெருக்கும் வழிகள் ஏராளமாக இருக்கின்றன. இங்கே தொழில் முயற்சிகள் ஆரம்பமாகியிருக்கின்றன. சென்ற மகாயுத்த காலத்தில் ஏற்பட்ட வியாபாரக் குழப்பத்தால் நெசவாலைத் தொழில் இங்கே சிறப்பாக நடைபெறத் தொடங்கியது. இப்போது நாட்டின் பாதுகாப்பைக் கோலி நிலைநிறுத்தச் செல்வநிலை வலியதாக இருக்க வேண்டும். இதற்கு அடிப்படையான தொழில்களைத் தேசீயமாக்கி நிலைபெறச் செய்ய வேண்டும். இதுவே இந்தச் சமயத்தில் முக்கியமாகச் செய்ய வேண்டிய காரியம். இதற்கு ஏராளமான முதல் வேண்டும். நாட்டைத் துண்டாக்கியதாலும் அரசியல் குழப்பம், வகுப்புக் கலகம் ஆகியவற்றாலும் சென்ற சில வருஷங்களாக இந்தியாவில் தொழில்கள் வளர முடியவில்லை. உற்பத்தி குறைந்தது. பண வீக்கம் ஏற்பட்டது. அயல் நாட்டிலிருந்து இறக்குமதியாகும் பொருளுக்கு வாயைத் திறக்கவேண்டி நேர்ந்தது. அயல் நாடுகளோடு நாணயப் பரிவர்த்தனை செய்துகொள்ளும் சௌகரியங்கள் குறைந்தன. இவைகளெல்லாம் சேர்ந்ததனால் தனி மனிதர்கள் முதல் போடுவது வர

வரக் குறைந்தது. நம் நாட்டில் தொழில் வளம் உண்டாக ஏற்பாடு செய்ய வேண்டிய காலம் இது. இயற்கைப் பொருள்களைப் பயன் படுத்தி அபிவிருத்தி செய்யப் பல திட்டங்கள் இருக்கின்றன. மின் சாரம் முதலிய சக்திகள், கனிப் பொருள்கள், காடுகள் இவற்றைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்தத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமானால் அயலாருடைய பண மும் தொழில் நுணுக்க அறிவு முத லியனவும் நமக்குக் கிடைக்க வேண்டும். பம்பாய்த் திட்டத்தின் படி இந்தியாவுக்கு வேண்டிய பணம் பதினாயிரம் கோடி ரூபாய். இதில் முக்கால் பாகம் இங்கேயே ஏற்பாடு செய்ய வேண்டும். சுமார் 2,600 கோடி ரூபாயை அயல் நாட்டி லிருந்து கடனாகப் பெறவேண்டும். இந்தியாவில் உள்ள தொழில் நிலை யங்களில் யுத்த காலத்தில் வேலை செய்து பழையதாய்ப்போன யந்தி ரங்களைப் புதுப்பிக்க வேண்டும். இதற்கு முதலாளிகள் ஒன்றும் முன்னேற்பாடு செய்து வைக்க வில்லை. ஆகவே, இதற்கு வேறு பணம் வேண்டும். ஐக்கிய இந்தியா வுக்கு முதல் அமெரிக்க தூதராக வந்த டாக்டர் ஹென்ரி எப். கிரேடி என்பவர் ஒரு கணக்குக் கொடுத்திருக்கிறார். இந்தியாவில் தொழில் வளப்பம் உண்டாக வேண்டுமானால் பதினைந்து வருஷ காலத்துக்கு இருபத்தையாயிரம் கோடி ரூபாய் வேண்டுமென்று மதிப்பிடுகிறார்.

வெளிநாட்டு முதலாளிகள் இங்கே தங்கள் பணத்தைக் கொண்டு வந்து போடவேண்டுமானால், அவர் கள் மனத்தைக் கவரும்படி ஏதாவது இங்கே இருக்க வேண்டும். சர்வ தேச நாணயச் செலாவணித்துறை யில் ஒரு நாட்டுக்கு நல்ல செல் வாக்கு இருப்பது, முதலாளிகளின் மனத்தைக் கவர்வதற்குரிய முதல் விஷயம். அரசியலிலும் வகுப்புவாதத் திலும் பொருளாதாரத்திலும் பலபல குழப்பங்களுக்கு இந்தியா உட்பட்டு நின்றுங்கூட, தென்கிழக்கு ஆசியப் பிரதேசங்களில் இந்தியா ஒன்று தான் நிலையான நாணயச் செலா வணியுடையதென்று பிறர் எண்ணு கிறார்கள். பணச்சந்தையில் இந்தி யாவின் மதிப்பு உயர்வாகவே இருக் கிறது.

ஆசியாவில் உள்ள மற்ற நாடுக ளில் அரசியல் குழப்பங்களும் நாணயச் செலாவணி நிர்வாகத்தில் ஊழல்களும் இருக்கின்றன. அங்கே பணம் போட்டால் அதிக நஷ்டம் அடைய ஏதுவாகும். ஆகையால், அயல் நாட்டு முதலாளி கள் இந்தியாவிலே முதல் போட விரும்புவார்கள். முதல் போடுவ தென்பது லாபத்தில் நோக்கத் தோடு செய்வது. இந்தியாவில் தொழில் வளர்ச்சிக்கு மார்க்கங்கள் விரிவாக இருக்கிறபடியால் இங்கே கிடைக்கும் லாபம் மற்ற நாடுகளில் கிடைப்பதைவிட அதிக மாகவே இருக்கும். உள்நாட்டு வியாபாரம் இங்கே அதிகமாக இருக் கும். போடும் முதலை எடுப்பதிலும் லாபப் பங்கீட்டிலும் போதுமான பாதுகாப்புக்களை ஏற்படுத்தினால் அயல் நாட்டிலிருந்து மூலதனம் இந்த நாட்டுக்குக் கிடைக்கும் என் பதில் சந்தேகமே இல்லை. அதனால் தொழில் பெருகி, பொருள் நிலை உயர்ந்து இந்த நாடு தென்கிழக்கு ஆசியாவில் பலமுள்ள நாடாக நிற் கும் நிலை ஏற்படும்.

ஏப்ரல் மாதம் 6- ஆம் தேதி நம் பிரதம மந்திரி அயல் நாட்டாரின் முதலீட்டைப்பற்றி ஓர் அறிக்

கையை விடுத்தார். இந்திய அரசாங்கத்தின் தொழிலபிவிருத்தித் திட்டத்துக்கு உட்பட்டு அயல் நாட்டுத் தொழில் முதலாளிகளும் இந்திய முதலாளிகளும் ஒத்துழைப்பார்களென்று எதிர்பார்ப்பதாக அவர் சொன்னார். அயல் நாட்டாருடைய பணத்தை எந்த விதத்திலும் கட்டுப்படுத்த அரசாங்கம் விரும்பவில்லை. இந்திய முதலாளிகள் எப்படி லாபம் சம்பாதிக்கிறார்களோ அப்படியே அயல் நாட்டு முதலாளிகளும் சம்பாதிக்கலாம். அந்த அந்தக் காலத்தில் அயல் நாட்டு நாணயப் பரிவர்த்தனைச் சௌகரியம் எப்படி இருக்கிறதோ அதற்கு உட்பட்டு அந்த லாபத்தைச் செலுத்தக்கூடும். தேச நன்மைக்குப் பாதகமில்லாத வகையில் போட்ட முதலை மீட்டுக்கொள்ளும் விஷயத்தில் எந்த நிபந்தனையையும் விதிக்க அரசாங்கம் எண்ணவில்லை. அயல் நாட்டார் முதல் போட்டு நடத்தும் தொழிற்சாலையைத் துரைத்தனம் எடுத்துக்கொள்ளும்படி நேர்ந்தால் சரியான பணத்தை ஈடாக அளித்து அதை அனுப்புவதற்கு வேண்டிய சௌகரியங்களும் செய்து கொடுக்கப்படும். இந்தத் தொழில்களின் நிர்வாகமும் கட்டுப்பாடும் கூடிய வரையில் இந்தியர் கையிலே இருக்க வேண்டும் என்பதைப் பிரதம மந்திரி வற்புறுத்திச் சொன்னார். ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் இந்த நிர்வாகம் அயலார் கையில் இருப்பதில் அரசாங்கத்துக்கு ஒரு தடையும் இராது; ஆனால் அந்த நிர்வாகம் தேச நன்மைக்குப் பாதகம் உண்டாகாமல் இருக்க வேண்டும்; அரசாங்கத்தார் தங்கள் திட்டத்தின்படி நிர்வாக முறையைச் சோதிப்பார்கள். போதுமான பயிற்சி பெற்ற இந்தியர்கள் கிடைக்காவிட்டால் வெளிநாட்டுத் தொழில் நுணுக்க நிபுணர்களை வருவிக்கலாம். ஆனால் தொழிற்சாலைகளில் இந்தியர்களை நியமித்து அவர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டுமென்பது முக்கியமான நிபந்தனையாக இருக்கும்.

இந்தியத் தொழில்களை வளரச் செய்வதே அரசாங்கத்தின் நோக்கம். ஆயினும், பிரிட்டிஷாரின் தொழிலுக்கும் அயல் நாட்டாரின் தொழிலுக்கும் இந்தியாவில் நிரம்ப இடமுண்டென்று பண்டித நேரு சொன்னார். இப்போது அயல் நாட்டார் தொழில்களைக் கெடுக்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் நோக்கமல்ல. தேசீயப் பொருளாதார வளர்ச்சிக்கு அவர்கள் உதவிபுரிய வேண்டுமென்பதே இந்திய அரசாங்கத்தாரின் விருப்பம்.

இந்த அறிக்கையைப் பொதுவாக எல்லாரும் திருப்தியாக ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் சில முதலாளிகள் சில வித்தியாசமான அபிப்பிராயங்களைச் சொல்கிறார்கள். அயல் நாட்டாருடைய உதவியைப் பெறப் பேச்சு வார்த்தை நடத்தும் விஷயத்தில் இந்திய முதலாளிகளுக்குச் சுதந்தரம் இல்லை என்பது முதல் ஆட்சேபம். அயலாருடைய உதவியைப் பெறும் விஷயத்தில் இந்திய முதலாளிகள் எந்தமட்டும் தாங்களே சொந்தமாக ஏற்பாடு செய்து கொள்ளலாம் என்பதை இந்த அறிக்கை தெளிவுபடுத்தவில்லை என்பது இரண்டாவது விஷயம். அயல் நாட்டாருடைய பண உதவியும் தொழில் நிபுணர்களின் உதவியும் பெற முதலில் ஏற்பாடு செய்யும் விஷயம் முழுவதும் அரசாங்கத்தைச் சார்ந்ததா, அல்லவா என்பதுபற்றியும் தெளிவாக அறிக்கை ஒன்றும் சொல்லவில்லை என்பது மூன்றாவது.

பிரிட்டிஷாரைப் பொறுத்தவரையில் அவர்களுக்குப் பூர்ண திருப்தி தான். ஏற்கனவே அவர்களுக்கு இங்கே பிடிப்பு இருக்கிறது; இந்திய வியாபார விவகாரங்கள் அவர்களுக்கு நன்ருகத் தெரியும்.

அமெரிக்க முதலாளிகளோ தங்கள் கருத்தை வெளியிடத் தயங்குகிருர்கள். இந்த மாறுதல் நல்லதுதான் என்று மட்டும் சொல்கிருர்கள். பிரிட்டிஷ் முதலாளிகளும் அமெரிக்க முதலாளிகளும் சேர்ந்து, மேலும் புதிய தொழில்களை ஆரம்பிக்கப் பணம் போடவேண்டியிருக்குமென்றும், அவற்றிலிருந்து லாபம் சம்பாதிக்க நெடுங்காலம் ஆகுமென்றும், ஆகவே நிச்சயமான லாபத்தைக் காட்டும்படி ஏதாவது வேண்டுமென்றும் வற்புறுத்துகிருர்கள். ஆனுல் இந்தியாவுக்கு முதல் வேண்டியிருப்பதால், முதலீட்டுப் பணத்தைத் திருப்பி வாங்கிக் கொள்ளுதல், லாபத்தைச் செலுத்துதல், அரசாங்கம் தொழிலை எடுத்துக்கொண்டால் பணம் கொடுத்து ஈடு செய்தல் ஆகிய விஷயங்களில் பாதுகாப்பு உண்டு என்பதை அறிக்கை சொல்கிறது. அயல் நாட்டு முதலாளிகளின் மனத்தைக் கவரும் அளவுக்கு மேலே இவை இருக்கின்றன. இந்த மூன்று விஷயங்களையும் அரசாங்கம் தெளிவாக்க வேண்டியது ஒன்றுதான் அவசியம்.

அயல் நாட்டிலிருந்து புதிய மூலதனம் வருவதற்கு முன்னே தேசியப் பொருளாதார நிலையின் நன்மையை உத்தேசித்து, இப்போதுள்ள அயலாரின் பணம் எவ்வளவு என்பதற்குச் சரியான கணக்கு எடுக்கவேண்டும். எந்த எந்தத் தொழிலில் எவ்வளவு பணம் ஈடுபட்டிருக்கிறது என்பதை அரசாங்கத்தைச் சார்ந்த ஸ்தாபனம் கணக்கு எடுக்க வேண்டும். ரிஸர்வ் பாங்கு இதைச் செய்வது நலம். ஏற்கனவே உள்ள இந்த முதலுக்கு அரசியல் சலுகை ஏதும் இருக்கக்கூடாது. முதலீடுகளை ஜாக்கிரதையாகக் கவனித்து வரவேண்டும். தக்க நிபந்தனைகளையும் ஏற்படுத்த வேண்டும். இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்தின் பொருட்டு அயல் நாட்டு முதலாளிகளும் உள்நாட்டு முதலாளிகளும் முதல் போடவேண்டும். அயலார் பணம் வேண்டுமென்பது தேசத்தில் சேமிப்புக் குறைவினுல் அன்று என்பதைப் பிரதம மந்திரி தெளிவுபடுத்தியிருக்கிருர். அயலார் போட்டிருக்கும் பணத்துக்குரிய கணக்கு வழக்குகளை ரிஸர்வ் பாங்க் வைத்திருக்கவேண்டும். அவ்வப்போது அறிக்கைகளையும் வெளியிட வேண்டும். வெளி நாட்டாருடைய பணம் பிற நாட்டுச் சாமான்களை வாங்குவதற்காக வேண்டியிருக்கும். ஆகவே, பணம் தரும் முதலாளிகள் ஒரு குறிப்பிட்ட நாட்டிலிருந்து தான் சாமான்களை வாங்கவேண்டுமென்று நிபந்தனை போடக்கூடாது. அப்படிப் போட்டால் ஒரு நாட்டையே எதிர்பார்த்துத் தொங்க வேண்டியிருக்கும். எந்த விதத்திலும் தேசத்தின் நன்மைக்குப் பாதகம் நேராமல் பாதுகாக்க வேண்டும்.

அடிப்படையான தொழில்களிலும் ராஜதந்திர ரீதியில் முக்கியமாக உள்ள தொழில்களிலும் நிர்வாகம் இந்தியர்கள் கையில்தான் இருக்க வேண்டும். மற்றத் தொழில்களின் விஷயத்தில் சில காலம் வரையில் அயலார் நிர்வாகம் இருக்கலாம். அப்போது நிர்வாகக் குழுவினரில் மூன்றில் ஒரு பங்கினர் இந்தியர்களாக இருக்க வேண்டும். டைரெக்டர்களில் ஒரு பகுதி

யினரை அரசாங்கமே நியமனம் செய்ய வேண்டும்.

அயல்நாட்டுப் பணத்தால் நடந்து வரும் தொழில்களைப்பற்றிய வேலை களைக் கவனிக்க ரிஸர்வ் பாங்கில் தனியே ஒரு தொழில் இலாகா ஏற்பட வேண்டும். அயல்நாட்டுப் பணம் எந்த எந்தத் தொழில்களில் எவ்வளவு இருக்கிறதென்ற விவரத் தைத் தொகுத்து அந்த இலாகா அவ்வப்போது வெளியிட வேண்டும். எப்படி எப்படி அந்தப் பணம் உப யோகமாகிறது என்பதையும் தெரி விக்க வேண்டும். இதுவரையில் செய் யாத புதுத் தொழில்களில் இந்தப் பணத்தை ஈடுபடுத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

இந்தியாவில் உள்நாட்டுத் தொழில் முதலாளிகளுக்கு அரசாங் கம் செய்திருக்கும் சௌகரியம் மற்ற நாடுகளில் இருப்பதைவிடத் தாராளமானது. இன்னும் வரி விஷயத்தில் சலுகை காட்டுதல் முதலிய சௌகரியங்களைச் செய்து கொடுக்கலாம். அவர்கள் போது மானபடி முன் வராமல் தயங்கினால் அயலார் பணத்தைக்கொண்டு தொழில் திட்டங்களையும் விவசாயத் திட்டங்களையும் நிறைவேற்றலாம். பணம் படைத்த நாடுகள், 'வறுமை எங்கே இருந்தாலும் உலக சுபிட் சத்துக்கு அது பங்கம் விளைவிக்கும்' என்பதை உணர்ந்து பணத்தைக் கடனாகக் கொடுக்க முன்வர வேண் டும். அப்போதுதான் ஆசியாவில் உள்ள நாடுகளில் கம்யூனிஸம் பரவி வருவதைத் தடுக்கலாம். பொருளா தாரச் சிதைவை நீக்கி உலக அமைதியையும் சுபிட்சத்தையும் உண்டாக்கலாம்.

நடிகர் ஏமாற்றம்

லெக்ஸ் பேகர் என்ற நடிகர் டார்ஸானாக நடிக்க ஒப்புக் கொண்டார். முதல் காட்சியில் ப்ரெண்டா ஜாய்ஸ் என்னும் பிரதம நடிகையை முத்தமிட வேண்டியிருக் கும் என்று கேட்டதும் அவருக்குத் தலைகால் தெரியவில்லை; அவ்வளவு மகிழ்ச்சி. ஆனால் பின்னால் அந்தக் காட்சியைச் சற்று மாற்றிவிட்டார்கள். முதல் காட்சியிலே அவருக்கு அப்படியே முத்தம் கிடைத்தது. ஆனால், அதைக் கொடுத்தது நடிகையல்ல; ஒரு பெரிய வாலில்லாக் குரங்கு. அதைப்பற்றி அவர் ஒரு நண் பருக்கு, "அப்பாடா! இப்படி நடக்கும் என்று நான் எண்ணவே யில்லை. என்னை ரொம்ப ரொம்ப ரொம்ப ஏமாற்றி விட்டார்கள்" என்று வருத்தப்பட்டு எழுதினாராம்.

—மைக் டென்னிஸ்.

ஏன் தாமதம்?

ஒரு மணிநேரம் தாமதித்துக் குமாஸ்தா ஒருவர் ஆபீசுக்கு வந்து சேர்ந்தார். அவர் உடையெல்லாம் கிழிந்து உடம்பு முழு தும் சிராய்த்திருந்தது. தாம் நேரங்கழித்து வந்ததற்குச் சமா தானமாக எஜமானரிடம், "புறப்படுகிற சமயம் ஜன்னலிலிருந்து தவறிக் கீழே விழுந்துவிட்டேன், ஸார்!" என்றார்.

எஜமானர்: அதற்கு ஒரு மணி நேரமா பிடித்தது?

—ஹாரி ஹெர்ஷ்பீல்டு.

பிழையைத் திருத்துங்கள்

கீழே உள்ள ஒவ்வொரு பகுதியிலும் எழுத்து, சொல், பொருள், வாக்கியப் பிழை ஏதாவது ஒன்று இருக்கும். அதைக் கண்டு பிடித்துத் திருத்துங்கள்.

1. வருஷம் முன்னூற்றறுபது நாளும் அலைந்துகொண்டே இருக்கும் மனிதர்களுக்கு மனம் ஒய்ந்து அமைதி பெறுவதென்பது அரிது.

2. அலைந்துகொண் டிருந்தாலும் மனத்தில் ஒரு வகையான சாந்தி நிலவும்படி இருப்பவன், கோடையின் வெம்மையைத் தன்னளவில் போக்கிக்கொள்ளக் கொடை பிடிப்பவனைப்போல இருக்கிறான்.

3. நிலவு எரிக்கும்போது அதன் தண்மையை உணராது வருந்தும் காதலர்களுக்கு, உள்ளத்தில் அமைதி இல்லாமையால் தாபம் உண்டாகிறது.

4. போகும் இடங்களில் எல்லாம் நல்ல கிரகங்கள் இருந்தாலும், தங்குவதற்கு வசதி இருந்தாலும், மனம் அல்லற்படுகிறவர்களுக்கு அந்த மனைகளில் தங்குவதால் மட்டும் அமைதி வந்துவிடாது.

5. நாகப்பழத்தின் புறம் கறுப்பாக இருந்தாலும் அகம் சிவப்பாக இருப்பது போல, ஞானம் கைவரப் பெற்றவர்களின் புறத் தோற்றம் எப்படி இருந்தாலும் அகத்தே அமைதி நிலவும்.

6. செவ்வாய் தன் ரிஷப வாகனத்திலிருந்து விழுந்தாலும், மற்றக் கிரகங்கள் நிலைமாறினாலும் அந்த மாதிரி உள்ளம் படைத்தவர்கள் எதற்கும் அஞ்சாத் திண்மையோடு இருப்பார்கள்.

7. அப்பப்போது வரும் துன்பங்களுக்கு அஞ்சாமல் காலனுக்கும் எதிர்நிற்கும் தைரியம் அவர்களுக்கு உண்டு.

8. சோழ அரசருடைய இராசதானியாகிய புகாரிலும், காவிரிப் பூம்பட்டினத்திலும், பாண்டியனது தலைநகராகிய மதுரையிலும் ஜீவன் முக்தர்கள் பலர் இருந்தார்களாம்.

9. பத்துப்பாட்டு, நெடுந்தொகை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு முதலிய சங்க நூல்களில் உள்ள செய்திகளைக் கொண்டு பார்த்தால், பழங்காலத்திலும் இந்த மனநிலையைக் கொண்டவர்கள் இருந்திருக்கிறார்கள் என்பது தெரியவரும்.

10. ஆண்டாளும், மீராவும், தருதத்தும் இந்துமதத்தின் விளக்குகளாகத் திகழ்ந்து உன்னதமான உணர்ச்சிகளைக் கவிகளாகப் பாடியிருக்கிறார்கள்.

11. வடமொழியில் உள்ள திரிபிடகம் என்ற பௌத்த மதநூல்களிலும் இந்த உயர்ந்த கருத்துக்களைப்பற்றிய செய்திகள் விரிவாக உள்ளன.

12. வேதாந்த மதங்களாகிய சைவம், வைஷ்ணவம், அத்வைதம் முதலியவற்றிலும், மனிதன் மனத்தை வென்று அச்சமின்றி வாழும் வாழ்க்கைக்கு என்ன வழி என்பதைக் காணலாம்.

(24-ஆம் பக்கத்தில் பிழைகளின் விளக்கத்தைக் காணலாம்.)

புதுமைப் பெண் யார்? பழமைப் பெண் யார்? விவாதத்திலே விளங்குவது என்ன?

வரப்போகிற லட்சியப் பெண்

கமலாபாய் டிளக்

பாட்டியம்மா, பழங் காலத்து முட்டாள்களான உங்களை விட, புதுமைப் பெண்களான நாங்கள் லட்சம் மடங்கு மேல். பொழுது சாய்ந்ததும் வீட்டிலே விளக்கு ஏற்றுவது, நாலு வேளையும் ஓயாமல் அடுப்படியில் கண்ணையும் மூக்கையும் கசக்கிக்கொண்டு சமைத்துப் போடுவது, ஒரு நாளைக்கு ஐம்பது தடவை இலை போட்டு எச்சில் புரட்டி இடுப்பொடிவது - இதெல்லாம் செய்தால் நீங்கள் 'இல்லக் கிழத்திகள்' ஆகிவிட்டீர்களாக்கும்! நம் வீட்டிலே வந்து விழும் பொருள்கள் எங்கிருந்து எப்படி வருகின்றன, விலைவாசியில் ஏற்றமும் இறக்கமும் எப்படி, ஏன் உண்டாகின்றன, எந்தப் பொருளை அதிகமாக உபயோகிக்க வேண்டும், எதைக் குறைவாக உபயோகிக்க வேண்டும்? - என்ற விஷயங்களைத் தெரிந்துகொள்ள உங்களுக்கு மூளை ஏது? அறுபது நாழிகையும் உழைத்துவிட்டு ஒரு மூக்குத்திக்காக அடம் பிடித்து அகமுடையானிடம் வசவு கேட்பது தானே உங்கள் சுபாவம்? பையன் இங்கிலீஷில் இரண்டு எழுத்துப் படித்துவிட்டால், "இந்த அம்மாவுக்கு ஒன்றுமே தெரியவில்லையே!" என்று உங்களை இடித்துக் காட்டுவான். வெளியிலிருந்து காலணாவுக்குக் காய்கறி வாங்கி வரவேண்டியிருந்தாலுங்கூட, துணை இல்லாமல் போகும் தைரியம் உங்களுக்குக் கிடையாது. வீட்டிலுள்ள ஆண்களுக்கோ குழந்தைகளுக்கோ அறிவு வளர்ச்சியைப் பொறுத்த மட்டில் உங்களால் துளியும் பிரயோஜனமில்லை. உங்களைக் கண்டால் அவர்களுக்குக் கிள்ளுக்கீரை! ஆகையால் வேறு பொழுதுபோக்குகளில் மனம் செலுத்தி ஆண்பிள்ளைகள் தங்கள் வாழ்க்கையையும் பணத்தையும் வீணாக்கினார்கள். உங்கள் முட்டாள்தனத்தினால் வீடு குட்டிச்சுவராயிற்று.

'உங்கள் முட்டாள்தனத்தினால் வீடு குட்டிச் சுவராகிறது.'

இந்தக் காலத்துப் பெண்களான நாங்கள் இப்படிச் சதா காலமும் வீட்டில் அடைபட்டிருப்பதில்லை. வீட்டுக் கடமைகளை நாங்கள் உங்களை விடப் பொறுப்போடு பார்த்துக் கொள்கிறோம். வீட்டு வேலைகளைப் போலவே வெளி வேலைகளையும் அமைதியாகச் செய்து, ஆண்களின்

காப்பிரைட்: வஸந்த் (மராட்டி: ஜூன் 49), பம்பாய்.

பாரத்தைக் குறைக்கிறோம். கடைகண்ணிகளுக்குப் போவது, ரேஷன் சாமான்கள் வாங்கிவருவது, குழந்தைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புவது, விளையாட வைப்பது, நோய் வந்தால் வைத்தியமும் பணிவிடையும் செய்வது ஆகிய எந்த வேலையையும் இன்று ஆண்கள் கவனிக்கவேண்டியிருப்பதில்லை. நாங்கள் அவர்களுக்கு உண்மையான 'அர்த்தாங்கி'களாக இருக்கிறோம். வீட்டில் நாங்கள் நல்ல தாய்மாராகி இருப்பது மட்டுமல்ல; நாங்கள் படித்தவர்களாதலால் குழந்தைகள் எங்கள் பேச்சைக் கேட்கிறார்கள். நீங்கள் குழந்தைகளை அடித்துப் புடைத்து அவர்களுடைய மன வளர்ச்சியைக் கெடுத்தீர்கள். எங்களுக்குக் குழந்தை மனத் தத்துவம் தெரியும். ஆகையால் எங்கள் குழந்தைகளின் மனம் தெளிவாக இருக்கிறது. நீங்கள் உங்கள் அறியாமையினால் குழந்தைகளைச் செல்லம் கொடுத்துக் கெடுத்து நோயாளிகளாக்கினீர்கள். எங்கள் குழந்தைகளுக்கு ஆரோக்கிய முறையில் உணவும் நல்ல தேகப் பயிற்சியும் ஒழுக்கமும் கிடைக்க நாங்கள் பாடு படுகிறோம். உங்களைப் போல எந்நேரமும் விரதம் இருப்பதும், ஊர் வம்பு அளப்பதும் எங்கள் வேலையல்ல. அறிவிலும் கல்வியிலும் நாங்கள் ஆண்களுக்குச் சமமாக இருப்பதனால், அவர்களுடைய மன நிலையை அறிந்து அவர்களுக்கு ஊக்கமளித்து உதவி செய்கிறோம். குடித்தனத்தில் நாங்கள், லட்சியப் பெண்களாக விளங்குகிறோம் என்பதில் சந்தேகம் என்ன?

சரிதாண்டி, எல்லாம் தெரியும்! சுகம் வேண்டும் என்று பாடுபடுகிற நீங்கள் பழங்காலத்துப் பெண்டுகளைப்

'படிப்பு, விளையாட்டு, தோழி, சினிமா என்று சொல்லிக் கொண்டு ஊர் சுற்ற வேண்டியது.'

பற்றிப் பேசவே தேவையில்லை. தானாக முன்வந்து, சுகத்தையெல்லாம் துறந்து, குழந்தைகளை வளர்ப்பதற்காகவும், ஆண்களுக்கு வேளையில் நல்ல ஆகாரம் போடுவதற்காகவும் வீட்டுக்குள்ளே புகுந்து கொண்டு உழைப்பது சுலபமான வேலையல்ல. அதற்கு மனத்தை அடக்க வேண்டும்; உடலை ஒடுக்க வேண்டும். இந்தக் காலத்துப் பெண்களான நீங்கள் எதற்கும் யாருக்கும் கட்டுப்பட மாட்டீர்கள். படிப்பு, விளையாட்டு, தோழி, சினிமா, ஹோட்டல் என்று சொல்லிக் கொண்டு ஊர் சுற்றுவதுதானே உங்கள் வேலை! அப்புறம் கிளப், வெளியூர்ப் பிரயாணம், சமூகத் தொண்டு - இல்லாவிட்டால் எங்காவது உத்தியோகம்! குழந்தைகளுக்கோ ஆண்களுக்கோ தேவையான சமயத்தில் வீட்டில் இருக்க மாட்டீர்கள். சிறுவயதில் அம்மா உங்களுக்கு எல்லாப் பணிவிடைகளும் செய்யவேண்டும். இளமையில் மாமியார் உங்களுக்காக வீட்டு வேலைகள் செய்து உங்களை அருமையாக வைத்துக்கொள்ள வேண்டும். அப்புறம் நீங்கள் இங்கே என்ன குடித்தனம் செய்வது? நல்ல தாயாக வாழ்கிறீர்களா? பேஷ்!

நேரு, சர்தார் போன்ற தலைவர்களைப் பெற்ற தாய்களெல்லாம் பி. ஏ.,வும் எம். ஏ.,வுந்தான் பாஸ் செய்தார்களோ? உங்கள் குழந்தைகளுடைய வீரதீர பராக்கிரம மெல்லாம் இனிமேல்தானே தெரியப் போகிறது! ஆண்களுடைய மனநிலையை அறிந்து நடக்கும் செய்தியை என்னிடம் சொல்லாதேடி, பெண்ணே! உன்னைவிட எனக்கு அதில் அதிக அநுபவம் உண்டு. வீட்டில் சமையல் சரியாக இல்லை என்று புருஷன் ஹோட்டலுக்குப் போவான்; மறுநாள் வேறு பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்வான்; உங்களைப் போன்ற தன்னலம் யாருக்கு உண்டு? கிளப்பில் போய், வாய் கிழியப் பேசவேண்டியது, ஹா ஹூ என்று விளையாட வேண்டியது, வீட்டில் குழந்தைக்கு 'ஆயா' வைக்க வேண்டியது- எனக்குத் தெரியாதா உங்கள் சரித்திரம்? கிளப்பில் போய்த்தான் நீங்கள் என்ன புரட்டிவிடுகிறீர்கள்? பெண்டுகளுக்குள் சண்டைதான்! பழங்காலப் பெண்களின் சண்டை வீட்டுப் படியைத் தாண்டிப் போகாது. உங்கள் சண்டை கோர்ட்டு வரைக்கும் போகிறது. வீட்டில் எடுத்ததற்கெல்லாம் வேலைக்காரர்கள் இருந்தால் ஊர் சுற்றுவதற்கு என்ன குறைச்சல்! இந்த அழகுக்கு நீ 'லட்சியப் பெண்' வேறேயா?

இந்த இரண்டு வாதங்களும் சரியல்ல. பழைய தலைமுறை, புதிய தலைமுறை என்ற சொற்களை நாம் உபயோகிக்கும்போது, சமூகத்தின் இடைக்காலத்தை மனத்தில் வைத்துக்கொண்டே பேசுகிறோம். மிகப் பழங்காலத்துப் பெண்கள் இப்படித்தான் இருந்தார்கள் என்று யாருக்கும் தெரியாது; அவர்களுடைய நிலை இப்படி இருந்தது என்று யாரும் நிரூபிக்கவும் முடியாது. அந்தக் காலத்துச் சமூக சரித்திரம் முழு விவரங்களோடு நமக்குக் கிடைக்கவில்லை. இடைக்காலத்து இரண்டுங் கெட்டான் நிலையிலுங் கூடப் பெண்கள் தன்னலத்தைத் துறந்து சமூக முன்னேற்றத்துக்குப் பெரிதும் உதவியிருக்கிறார்கள். உண்மையான புதுமைப் பெண் இனித்தான் தோன்ற வேண்டும். வேதகாலத்துப் பெண் அந்தக் காலத்து லட்சியப்படி இல்லற விளக்காக வாழ்ந்தது போலவே, வருங்காலத்துப் பெண்ணும் லட்சிய இல்லறத்தை நடத்துவாள் என்பதில் சந்தேகமே இல்லை. வருங்காலத்துப் புதுமைப் பெண் தன் வீட்டுக்குத் தலைவியாக விளங்குவதோடு, நாடு முழுவதுக்குமே அன்னையாகவும் சேவிகையாகவும் விளங்குவாள். சமூகம் அவளுடைய பாதையிலே மலரைப் பரப்பாவிட்டாலுங்கூட முள்ளைத் தூவாதிருந்தால் போதும்.

சம்பளமும் செலவும்

ஒருவன்: உன் சம்பளத்தை எப்படிச் செலவழிக்கிறாய்?

மற்றவன்: குடிக்கூலிக்கு 30 சத விகிதமும் துணி மணிகளுக்கு 30 சத விகிதமும், சாப்பாட்டுக்கு 40 சத விகிதமும் வேடிக்கை விளையாட்டுக்களுக்கு 20 சத விகிதமும் செலவழிக்கிறேன்.

ஒருவன்: அப்படியானால் 120 சத விகிதமா செலவழிக்கிறாய்?

மற்றவன்: ஒவ்வொரு சம்பளத் தேதி வந்ததும் அதுதானே என் பாடு திண்டாட்டம்!

—'எக்ஸ்சேஞ்ச'

வருஷம் ஜப்பானிலிருந்து வந்த நாற்றுக்களில் ஒன்று அது. உலகத்தில் பல இடங்களில் இந்த ப்ளம் பரவியது. பசிபிக் கரையில் இது ஏராளமாகப் பயிராகிறது.

1885-ஆம் வருஷம் இந்த ப்ளம் இனத்தை அவர் கண்டுபிடித்தார். அதன் பிறகு ஆயிரக்கணக்கான விதைகளை விதைத்துப் பார்த்தார். மொத்தம் 135 இனங்களை அவர் புதிதாகக் கண்டுபிடித்தார். கலிபோர்னியா முதலிய மாகாணங்களில் ஏராளமாக ப்ளம் உற்பத்தியும் வியாபாரமும் நடக்கின்றன. இதற்குக் காரணம் அவர் முயற்சியே. அவர் உண்டாக்கிய நாற்றுக்களிலிருந்து விளைந்த மரங்களின் மூலம் அநேகர் லட்சக்கணக்கான டாலர்கள் சம்பாதிக்கிறார்கள்.

பழ மரங்களின் புதிய இனங்களை விரைவிலே உண்டாக்க, பர்பாங்க் ஒட்டு முறையை மேற்கொண்டார். நாற்றுக்களின் ஒட்டுத் துண்டுகளைப் பழைய மரங்களோடு ஒட்டுப் போட்டார். ஒரு ப்ளம் செடியைத் தானாகவே வளரவிட்டால் அது மரமாகிப் பழம் தர ஏழு எட்டு வருஷங்களுக்குமேல் பிடிக்கும். ஆனால் செடியிலிருந்து மரத்தோடு ஒட்டுப் போட்டால் இரண்டாவது வருஷத்தில் பலன் காணலாம்.

இப்போது கிடைக்கும் பழ மரங்களும் மலர்ச் செடிகளும் பழைய காலத்தில் மனிதன் பயிரிடாமல் விதையிலிருந்து தாமே வளர்ந்த செடிகளாக இருந்தன. பொன் ஆப்பிள் என்ற மரம் ஆதிகாலத்தில் மேற்கு வர்ஜீனியாவில் ஒரு தோட்டத்தில் தானே வளர்ந்த செடி. பழங்களிலும் மலர்களிலும் இப்போது வந்துள்ள புதிய இனங்களில் பல, பல செடிகளிடையே அபூர்வமாகக் கண்டு பிடித்த சில செடிகளிலிருந்து உண்டானவையே.

புதிய இனங்கள் விருத்தியாவதற்குக் காரணமான இரண்டாவது விதத்தைக் கவனிப்போம். சாறுள்ள ஆப்பிள் மரத்தின் ஒரு கிளையில் 'ஸ்டார்க்கிங் டெலிஷஸ் ஆப்பிள்' என்ற வகை உண்டாயிற்று. மற்றப் பழங்களுக்கும் அந்தக் கப்பில் பழுத்த பழங்களுக்கும் வித்தியாசம் இருந்தது. இதற்குக் காரணம் தெரியவில்லை. இந்த மாதிரி புதிய இனங்கள் உற்பத்தியாவது உண்டு.

சேர்க்கை முறையால் புதிய இனங்களை உற்பத்தி செய்வது மூன்றாவது விதம். பழங்காலத்தில், இரு வேறு இனங்களில் ஒன்றின் மகரந்தப் பொடியை மற்றொன்றின் பூவோடு சேர்த்து இணைக்க முடியாது என்று எண்ணியிருந்தார்கள். ஆனால் அந்த எண்ணம் தவறு என்பதைப் பர்பாங்க் நிரூபித்தார். 'பல இனங்கள் இணையும்; மிகவும் உபயோகமான புதிய வகைகளை உண்டாக்குவதற்கு இனத்தோடு இனம் இணையச் செய்வதே சிறந்த வழி' என்று பர்பாங்க் பல முறை சொல்லியிருக்கிறார். இந்தச் சேர்க்கைக்கு அதிகப் பொறுமை வேண்டும்; அதிக காலம் செலவிட வேண்டும்; செலவிட்டாலும் தகும். அது சுலபமான முறை. ஒரு மலரின் மகரந்தப் பொடியை மற்றொரு மலருக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பதுதான் நாம் செய்ய வேண்டிய காரியம். ஒரு பூவின் சூல் பையில் அதன் சொந்த மகரந்தப் பொடி சேர்வதற்கு முன்பே இதைச் செய்யவேண்டும். மிகவும் ஜாக்கிரதையாக இதைச் செய்யும் வழி ஒன்று உண்டு. ஒரு பூவை அது

மலர்வதற்கு முன் இதழ்களை வலிய மலர்த்தவேண்டும். கேசரங்கள் மகரந்தம் வெளியேறும்படி விரிந்திராவிட்டால் அவற்றைக் கத்தரித்துவிடவேண்டும். சூல்தண்டானது பசையுள்ளதாக இருந்தால் அது மகரந்தத்தை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் உடையதாகும். அதன் மேல் மகரந்தம் பட்டால் ஒட்டிக்கொள்ளும். சூல்தண்டு பக்குவப்படாமல் இருந்தால் இதழ்களை மூடிவிடவேண்டும்; அல்லது இதழ்களைப் பொருத்திக் காகிதப் பையால் மூடிவிட வேண்டும். அதில் வேறு மகரந்தப் பொடி வந்து சேரக்கூடாது.

சூல்தண்டு பசையுடையதாகி விட்டால் வேறு செடியிலிருந்து ஒரு மலரை எடுத்துச் சென்று சூல்தண்டின்மேல் இந்த வேற்று மலரின் மகரந்தத்தை உதிர்க்க வேண்டும். அந்த மலர் சுயமகரந்தச் சேர்க்கை இல்லாததாக இருக்க வேண்டும். அதற்குப் பிறகு அந்த மலரைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் இல்லை. ஒரு முறை மகரந்தச் சேர்க்கை சூல்தண்டில் உண்டாகிவிட்டால் வேறு மகரந்தம் வந்து சேர்ந்து அந்தச் சேர்க்கையை மாற்ற முடியாது. சூல்தண்டின் அடியிலுள்ள சூல்பையில் மகரந்தம் கருவாகி முதிரத் தொடங்கிவிடும். அப்பால் வேறு எந்த மகரந்தமும் அந்த மலருக்குப் பயன்படாது.

ரோஜா முதலிய மலர்களில் இந்தமாதிரி மகரந்தச் சேர்க்கையால் அற்புதமான பலன்கள் உண்டாகியிருக்கின்றன. சுய மகரந்தச் சேர்க்கையுள்ள செடிகளில் மிகவும் ஜாக்கிரதையாக இணைப்பைச் செய்யவேண்டும். அது எளிதல்ல.



ஒரு சுய மகரந்தப் பூவின் பகுதிகளைக் காட்டும் இந்த உருவம் 'கலைக் களஞ்சியம்' மாதிரிப் பிரதியிலிருந்து எடுத்தது: (1) கேசரம் (ஸ்டாமென்)(2)மகரந்தம்(போலன்); (3)சூல்தண்டு (ஸ்டைல்); (4) சூல்முடி (ஸ்டிக்மா)(5)சூல்பை (ஓவரி).

விதை விதைத்து நாற்றுக் கிளம்பினால் அடுத்தபடி செய்ய வேண்டியது நல்ல நாற்றுக்களைப் பொறுக்கி யெடுப்பது; மற்றவற்றை அழித்துவிடவேண்டும். உபயோகம் இல்லாத செடிகளை அழித்துவிடுவது கஷ்டமாகத்தான் இருக்கும்.

விதையிலிருந்து தாயைப் போலவே இனம் பெருகும் செடிகளில், பொறுக்கி எடுத்து எடுத்துத் தான் புதிய இனங்களை விருத்தி செய்யவேண்டும். பர்ப்பாங்கிடம் எம்ப்ஸன் கானிங் கம்பெனிக்காரர் புதிய வகையான பட்டாணி ஒன்று வேண்டுமென்று 'ஆர்டர்' கொடுத்தார்கள். பெரிய பெரிய காயாக இருக்கவேண்டும்; உள்ளே சிறிய பட்டாணி விதைகளாக இருக்க வேண்டும்; ஒரே சமயத்தில் காய்க்கொத்து முழுவதும் முற்ற வேண்டும். இப்படி இருந்தால்

வியாபாரிகளுக்கு நல்ல லாபம் உண்டாகும். ஒரே சமயத்தில் யந்திரங்களைக் கொண்டு காய்களை அறுவடை செய்துவிடலாம். இந்த வேண்டுகோளைக் கம்பெனிக்காரர்கள் விடுத்தார்கள். செடிகளின் இரண்டு மூன்று தலைமுறைகளில் லூதர் பர்பாங்க் புதிய வகையான பட்டாணியை உண்டு பண்ணிவிட்டார். அதற்கு 'எம்ப்ஸன் பட்டாணி' என்று பெயர்.

தேர்ந்தெடுத்துப் பொறுக்கிப் பயிர் செய்வதால் சோளம், ஓட்ஸ், பார்லி, கோதுமை முதலிய தானியங்களில் உயர்ந்த ரகங்களை உற்பத்தி செய்யலாம். நல்ல செடிகளை மாத்திரம் வைத்துக்கொண்டு மற்றவற்றை அழித்து விடுவது மிகவும் முக்கியம்.

நாம் ஒரு புதிய இனத்தை உற்பத்தி செய்தால், இப்போது உள்ளதை விட உயர்ந்ததாக இல்லாவிட்டாலும் அதனிடத்தில் நமக்கு அபிமானம் ஏற்பட்டு விடுகிறது. அந்த அபிமானம் இருக்கலாகாது. பொறுமையோடு காத்திருந்தால் தக்க பருவத்தில் சிறந்த இனங்கள் கிடைக்குமென்பதை பர்பாங்க் நிரூபித்தார். புதிய இனத்தைக் கண்டுபிடித்தால் வியாபாரிக்கு அதை நல்ல விலைக்கு அவர் விற்று விடுவார். அந்த இனத்தினால் வியாபாரி பெறும் விலையில் ஒரு பகுதியை ராயல்டியாகவும் பெற இடம் உண்டு.

"புதிய இனங்கள் இயற்கையில் எப்போதும் உண்டாகிக்கொண்டே இருக்கின்றன. மகரந்தச் சேர்க்கை செய்து இயற்கையை நாம் தூண்டலாம். நல்ல செடிகளைத் தேர்ந்தெடுக்கவேண்டும். உயர்ந்த ரகமான புதிய பழமும் மலரும் நமக்கு வேண்டும். இந்தச் செடி அபிவிருத்திக் கலையில் எத்தனை பேர் ஈடுபட்டாலும் தீமை உண்டாகாது" என்று பர்பாங்க் சொல்லுவார்.

உயிருடன் இருந்தால்-?

ஒரு காரியாலயத்தில் உத்தியோகத்துக்காக மனு எழுதிக் கொண்டு வந்திருந்தான் ஓர் ஆள். மனு விண்ணப்பத்தில், 'தந்தையின் வயது, உயிருடன் இருந்தால்..,' 'தாயின் வயது, உயிருடன் இருந்தால்..' என்று குறித்துள்ள இடங்களுக்கு நேரே 111, 107 என்று போட்டிருந்தது. மனுவைப் பரிசீலனை செய்யும் குமாஸ்தா அதைப் பார்த்துவிட்டு ஆச்சரியத்தோடு, "இத்தனை வயதான பெற்றோர்களா இருக்கிறார்கள் உனக்கு?" என்று கேட்டார்.

"இல்லை; அவர்கள் எப்போதோ போய் விட்டார்கள். இப்போது உயிருடன் இருந்தால் அவர்களுக்கு இத்தனை வயது ஆகியிருக்கும்" என்று பதில் கிடைத்தது.

—டபிள்யூ. இ. கோல்டன், காரொனெட்.

பெரியதும் சிறியதும்

தரும தேவதை: ஏண்டியம்மா, என்னவோ மாதிரி இருக்கிறாயே; உனக்கு என்ன கவலை?

சமாதான தேவதை: பெரிய தேசங்கள் அற்ப நோக்கங்கள் கொண்டிருக்கின்றனவே, அதைப்பற்றித்தான் கவலை.

—டப்ளின் ஒபினியன்.

க்விஸ்

[நமக்கு மிகவும் தெரிந்த விஷயங்களில்கூடச் சில சமயம் திட்டமான விவரங்கள் ஞாபகம் இருப்பதில்லை. இதோ சில கேள்விகள்: எங்கே, உங்கள் கவன சக்தியைச் சோதித்துப் பாருங்கள். பிறகு, 74-ஆம் பக்கத்து விடையுடன் ஒப்பிட்டுக் கொள்ளுங்கள்.]

சரித்திரம் :

1. தமது பிரசித்தமான திட்டத்துடன் ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் எப்போது இந்தியாவுக்கு வந்தார்?

2. இந்திய வைசிராய் பதவியை லார்டு வேவல் எந்த வருஷம் ஏற்றுக்கொண்டார்?

3. ஜப்பானிய சக்கரவர்த்தி சரணாகதி நிபந்தனைகளை இறுதியாக ஒப்புக்கொண்டது எப்போது?

விஞ்ஞானம் :

1. ஆப்பிள் பழம் விழுவதைப் பார்த்து, பூமியின் ஆகர்ஷண சக்தியை (க்ராவிடி) நியூடன் கண்டு பிடித்தார்—இது சரியா, தவறா?

2. கீழேயுள்ள யந்திர அமைப்பில் 'டிரைவர்' என்று குறிப்பிட்டிருக்கும் சக்கரத்தைச் சுற்றினால் 'கியர்' என்று குறிப்பிட்டிருக்கும் சக்கரம் என்ன செய்யும்?



அ. முன்னும் பின்னும் நகருமா?

ஆ. நகரவே நகராதா?

இ. எதிர்த் திசையில் சுற்றுமா?

ஈ. அதே திசையில் சுற்றுமா?

இவை சரியா, தவறு?

1. இந்தியாவில் மிகவும் கிழக்குத் திசையில் உள்ள துறைமுகம் சென்னை.

2. டில்லிக்கு நேர் வடக்கே இருக்கிறது சிம்லா.

3. கல்கத்தாவுக்கு நேர் தெற்கிலும் சென்னைக்கு நேர் கிழக்கிலும் இருப்பது அந்தமான்.

போது :

1. (அ) தினை, (ஆ) புல், (இ) எள், (ஈ) பருத்திக்கொட்டை இந்தச் சரக்குகளில் எது எதிலிருந்து எண்ணெய் எடுக்கிறார்கள்?

2. தேசபடங்கள் தயாரிப்பவர்கள் நாலே நாலு வர்ணங்களைத்தான் உபயோகிக்கிறார்கள். கணித சாஸ்திரிகளால் நிரூபிக்க முடியாத ஒரு காரணத்தினால் ஐந்தாவது வர்ணம் தேவைப்படுவதில்லை. அந்தக் காரணம் என்ன?

3. சென்னையிலுள்ள முக்கியமான ஒரு தெருவைப் 'பீங்கான் கடை' என்று முன்னே சொல்லுவார்கள். அதற்கு இப்போது என்ன பெயர்?

ஸ்விக்:

இதுவரையில் கேள்விகளுக்கு விடை சொன்னீர்கள். இதோ சில விடைகள் இருக்கின்றன. இந்த விடைகளுக்குப் பொருத்தமான கேள்விகளைத் தயாரியுங்கள், பார்க்கலாம். முடிந்ததா? இல்லையானால் விடைப் பக்கத்தில் பாருங்கள்.

1. 'பாம்பு இல்லா ஊருக்குக் கீரிப்பிள்ளை ஏன்?'
2. திமிலில்.
3. ஒளி வேகத்தை.
4. கண்ணில்.
5. மூக்குக்கு உதவாது.
6. ஐந்தும் இதுவும்.

யுக்தி:

பழம்பொருள் ஆராய்ச்சி நிபுணர் ஒருவரிடம் ஒரு புதிய மனிதர் வந்தார். ஒரு சிறு பையில் இருந்த சில காசுகளை வெளியே எடுத்துப் போட்டார். "இவை கி. மு. 200-ஆம் ஆண்டுக் காசுகள். இவற்றை வாங்கிக் கொள்ளுங்கள்" என்றார்.

அந்தக் காலத்தில் காசுகள் இருந்தது உண்மை. ஆகவே அவற்றை வாங்க நிபுணர் மிகுந்த ஆவல் கொண்டார்; "இவை உண்மையிலேயே அந்தக் காலத்துக் காசுகள்தானா? என்ன அத்தாட்சி?" என்று கேட்டார்.

"என்னை ஏன் கேட்கிறீர்கள்? காசையே பாருங்கள்" என்று சொல்லி நிபுணரின் கையிலே காசைக் கொடுத்தார் வந்தவர். நிபுணர் காசுகளை எடுத்துப் பார்த்தார். அவற்றிலே கி. மு. 200 என்ற தேதி தெளிவாக இருந்தது. நிபுணர் சற்று யோசித்துவிட்டு, "உம்மை என்ன செய்வதென்று தெரியவில்லை. நீர் ஒன்று, மோசக்காரனாக இருக்கவேண்டும், அல்லது ஏமாந்துபோன மூடனாக இருக்க வேண்டும். இது கள்ளக் காசு; கொண்டு போம்" என்று வந்தவரை விரட்டிவிட்டார்.

அவை கள்ளக் காசுகள்தான். இதை நிபுணர் எப்படிக் கண்டுபிடித்தார்? ஆனால் இதற்கு நிபுணத்துவம் தேவை இல்லை; நீங்களும் கண்டுபிடிக்கலாம். எங்கே, என்ன காரணம்?

சிக்கனத்தால் கற்ற பாடம்

"சிக்கனத்தின் மூலம் நான் ஒரு பாடம் கற்றுக்கொண்டேன். சினிமாவுக்குப் போகாமல், புகையிலை, காபிகூடக் குடிக்காமல் பத்து வருஷத்தில் 400 பவுன் சேர்த்துவிட்டேன்" என்றார் ஒரு நண்பர்.

"அந்தப் பணத்தை என்ன செய்யப்போகிறீர்கள்?" என்று கேட்டார் மற்றவர்.

முதல் நண்பர் வருத்தத்தோடு தலையை ஆட்டிக்கொண்டே, "அதைப்பற்றி நான் தீர்மானிக்கவேண்டிய அவசியமேயில்லை. அந்தப் பணத்தை நான் போட்டிருந்த பாங்கி முறிந்துவிட்டது" என்றார்.

—'எவெரிபடீஸ் வீக்லி,' லண்டன்.

நோயின் அறிகுறி

> நோய் வரும்போது அதை நமக்குப் பல விதமாய் முன்னெச்சரிக்கை செய்கிறது உடம்பு. அதை நாம் அலட்சியம் செய்வது தவறு. அதை விளக்கும் இது அமெரிக்க 'லுக்' பத்திரிகையின் கட்டுரை ஒன்றை ஆதாரமாகக் கொண்டது.

பொதுவாக எல்லாருமே தங்கள் உடம்பைக் கவனித்துக்கொள்ளக் கீழே சொல்லியிருக்கும் அபாய அறிகுறிகள் பயன்படும். நீங்கள் வைத்தியராக இருந்தால், ஒவ்வொன்றும் இன்ன இன்ன நோய்க்கு அறிகுறி என்று தெரிந்திருக்கும்; இல்லாவிட்டால் தெரிந்திருக்க நியாயமில்லை.

அதனால் கீழே உள்ள ஜாபிதாவை நன்ருகப் படித்துப் பாருங்கள். அதற்குமேல் அதிகப்படியாக யோசித்து இது இன்ன நோய்க்கு அறிகுறி என்று ஊகம் செய்யாதீர்கள். அது டாக்டருடைய வேலை.

1. வலி: தலையிலோ, வயிற்றிலோ, மார்பிலோ, மற்ற அவயவங்களிலோ வலி எடுப்பது அபாயத்துக்கு முதல் அறிகுறி. ஆனல் இப்படி வலி எடுப்பது நல்லதே. நாம் உடனே கவனித்துச் சிகிச்சை செய்துகொள்ளலாம் அல்லவா? 'இந்தச் சரீரம் அநித்தியம்' என்று வேதாந்தம் பேசி அதைப்பற்றி அசிரத்தையாக இருந்து விடாதீர்கள். இல்லாவிட்டால் வலியை மறக்க அடிக்க அசட்டுப் பிசட்டென்று கண்ட மருந்தையும் சாப்பிட்டு வைக்கப் போகிறீர்கள், ஜாக்கிரதை! வலி கொஞ்சமாக இருக்கலாம்; ஆனல் அது நீடித்தாலும் சரி, அடிக்கடி வந்தாலும் சரி, உடனே கவனிக்கவேண்டும்.

2. சோர்வு: ஒரு காரணமும் இல்லாமல் சில வேளை, 'அப்பாடா! ஓய்ந்து போகிறதே!' என்று சொல்லத் தோன்றும். இதுவும், அவசியம் ஏதோ அபாயத்துக்கு அறிகுறிதான். சோர்வில் பலவிதம் உண்டு: பேசும்போது தடுமாற்றம், இடுப்பு நேரே நிற்காமல் வளைவது, கண் இமை சிவந்து அதைச்சுற்றிக் கருவளையம் இட்டிருப்பது, காலையில் கண்விழித்து எழுந்திருக்கும் போது ஓய்ச்சல், நடுப்பகல் ஆவதற்கு முன்னேயே வேலை செய்ய முடியாமல் இளைப்பு, தமாஷில் விருப்பமில்லாமல் சீறி விழுவது, சாதாரண விஷயத்தைக்கூடப் புரிந்துகொள்ளும் சக்தி குன்றுவது, சோம்பல், பரபரப்பு இப்படி ஏதாவது ஒன்று இருக்கும்.

3. கனத்தில் மாறுதல்: திடீரென்று நம் உடல் கனம் கூடியோ குறைந்தோ இருந்தால் காரணம் என்ன என்று உடனே கவனிக்க வேண்டும். நமக்குப் பிரியமான உடை தொள தொள வென்று ஆகிவிடும்போதும் பழைய நிஜாரோ செருப்போ சுருங்கி விடும் போதும் கவனித்தால் இது தெரியும்.

4. தலைவலி: இதற்குப் பல காரணம் உண்டு. இது நீடித்தால்

ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். கண்ட மருந்தையும் தின்று வலியை மறக்க அடிக்கக் கூடாது.

5. ஜுரம்: உடம்பு என்னவோ மாதிரி இருக்கிறது என்று பட்டால் தெர்மாமீட்டரை வைத்து உஷ்ணம் எவ்வளவு இருக்கிறது என்று பார்க்கவேண்டும்.

6. ரத்தப்போக்கு: மயிர்க்காலிலிருந்தோ, மூக்கிலிருந்தோ, உடலிலுள்ள வேறு துவாரங்களிலிருந்தோ ரத்தம் வந்தால் உடனே கவனிக்க வேண்டும். அஜாக்கிரதையாக இருக்கக் கூடாது.

7. இருமல்: இது நீடித்தால் ஆபத்து. உடனே இது நிற்க ஏதாவது பரிகாரம் தேடுவது அவசியம்.

8. வீக்கம்: மூட்டிகளிலோ காலிலோ உடலில் வேறு எந்தப் பாகத்திலோ வீக்கம் ஏற்பட்டால் முன் ஜாக்கிரதையாக இருப்பது அவசியம்.'

9. அஜீர்ணம்: வயிறு உப்புசமாகவோ அதில் ஏதாவது கோளாறோ இருந்தால், "பைகார்ப் உப்புச் சாப்பிட்டுவிட்டால் போய் விடுகிறது" என்று அலட்சியமாக இருந்துவிட வேண்டாம்.

10. தோல் நிறம் மாறுதல்: காரணம் இல்லாமல் முகம் வெளுத்தாலும் சரி, சிவந்தாலும் சரி, மஞ்சளானாலும் சரி உடனே கவனிக்க வேண்டும்.

11. பார்வையில் மாறுதல்: எதைப் பார்த்தாலும் இரட்டையாகவோ மங்கலாகவோ தெரிந்தாலும் சரி, ஒன்றரைக் கண் வந்துவிடும்போல் இருந்தாலும் சரி, உடனே கவனிக்கவேண்டும்.

12. உடம்பில் கொம்மை அல்லது சதை வளர்ச்சி: இது வரவரப் பெரிதாகிக்கொண்டே வந்தால் இதைக் கவனிக்கவேண்டியது அவசியம்.

13. சுபாவ மாறுதல்: இதுவரையில் இல்லாத பரபரப்பு, கவனக் குறைவு, முன்கோபம், கூச்சம், அழுகை இப்படி ஏதாவது ஏற்பட்டால் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

14. தூக்கமின்மை: தூக்கம் வரவில்லை என்றால் மாத்திரை ஏதாவது சாப்பிட்டு வைக்காதீர்கள்; எதனால் அப்படி இருக்கிறது என்று கவனிக்க வேண்டும்.

15. மூச்சுத் திணறல்: சற்று வேலை செய்தாலும் இது ஏற்பட்டால் உடனே கவனிக்கவேண்டும்.

16. பசியின்மை அல்லது மந்தம்: இது எதனால் ஏற்படுகிறது என்று அறிந்து தக்க பரிகாரம் தேட வேண்டும்.

17. அதிக தாகமும் பது மூத்திரமும்: அளவுமீறித் தண்ணீர் குடிக்கத் தோன்றி அதே மாதிரி அதிகமாக மூத்திரம் வந்தாலும் சரி, மூத்திரம் பெய்யும்போது எரிச்சல் உண்டானாலும் சரி உடனே கவனிக்க வேண்டும்.

18. தலை சுற்றலும் மயக்கமும்: அடிக்கடி உலகமே சுற்றுகிறமாதிரி ஒரு பிரமை ஏற்படும். இது ஏன் என்று கவனித்து முன் ஜாக்கிரதையாக இருப்பது நலம்.

19. தொண்டை கட்டிக்கொள்வது: ஒரு நாளுக்குமேல் இப்படி இருந்தால் அவசியம் கவனிக்க வேண்டும்.

20. மலச்சிக்கலும் சீதபேதியும்: இவை நீடித்தால் ஆபத்து.

ஆரம்பத்திலேயே இந்த அறிகுறிகளைக் கவனித்தால் வைத்தியர் சீக்கிரமாகவே உங்களுக்கு என்ன நோய் என்று கண்டு பிடிப்பார்; அது முற்றுவதற்கு முன்னால் பரிகாரம் ஏதாவது தேட முடியும்.

"இவைகளைக் கொண்டு இன்ன நோய் என்று எப்படித் தீர்மானிப்பது?" என்று நீங்கள் கேட்கலாம். சில உதாரணம்: அடிக்கடி அதிக தாகம் எடுப்பது நீரிழிவுக்கு அறிகுறி. சிறிது வேலை செய்தால் கூட மூச்சுத் திணறினால், அது இருதயக் கோளாறுக்கு அறிகுறி. அடிக்கடி சோர்வு ஏற்பட்டால், அது க்ஷயம் வரப்போவதற்கு அறிகுறி. ரத்தப் போக்கு, கான்ஸர் நோய்க்கு அறிகுறியாக இருக்கலாம். சாதாரண ஜல தோஷம் கடைசியில் நியுமோனியாவில்கூடக் கொண்டு விடலாம். சுபாவத்தில் மாறுதல் ஏற்பட்டால் திடீரென்று ஏதாவது கெடுதல் நேருவதற்கு அறிகுறி. ஆனால் இப்படி இருந்தால் இந்த நோயெல்லாம் நிச்சயமாக வரும் என்று சொல்லிவிடவும் முடியாது; பெரும்பாலும் வராமலேகூட இருக்கும்.

உங்கள் வயது, தொழில், பெற்றோர், உணவு, குடியிருக்கும் இடம், கனம், முன்னால் வந்த நோய்கள், உங்களுக்குப் பிரியமான ஜோலி, பழக்க வழக்கம், நீங்கள் ஆணா பெண்ணா, உங்கள் இயல்பு இந்த விவரமெல்லாம் கவனித்தால் எந்த எந்த விஷயத்தில் முன் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்று தெரிந்துகொள்ளலாம்.

உங்கள் உடம்பு ரீதியைக் கொண்டு இன்ன நோய் வரும் என்று தோன்றினால் முன் எச்சரிக்கையாக இருக்கவேண்டியது அவசியம்.

நீங்கள் பருமனாக இருந்தால் ரத்தக் கொதிப்பு ஏற்படும் என்று ஊகிக்கலாம். ஒல்லியாகவும் நெட்டையாகவும் இருந்தால் க்ஷயம் வரக்கூடும் என்று தெரிந்துகொள்ளலாம். ஆளின் உருவத்தையோ, சுபாவத்தையோ கொண்டு சில நோய்களைக் கண்டுபிடிக்கலாம்: எரிச்சல், பரபரப்பு: இது ஒரு வகை. மேனி வெளுத்தும் மென்மையாகவும் மழமழவென்றும் இருந்து மூக்கு ஒட்டினாற்போல் இருப்பது இன்னொரு வகை. இப்படி எத்தனையோ.

நீங்கள் அதிகமாகச் சுருட்டுக் குடித்துப் பழக்கம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது ரத்த ஓட்டம், ரத்தக் குழாய் எல்லாம் சரியாக இருக்கிறதா என்று அடிக்கடி கவனிப்பது அவசியம். முன் எப்போதாவது விளையாட்டம்மை போட்டிருந்தால் அது மறுபடியும் வரும் என்று கவலை வேண்டாம். சென்ற ஐந்து வருஷத்துக்குள் அம்மை குத்திக்கொண்டிருந்தால் பெரியம்மையைப்பற்றி இனிமேல் கவலை இல்லை.

நம்முடைய வயதுக்கும் பருவத்துக்கும் ஏற்றாற்போல் இந்தமாதிரி கோளாறுகள் பல உண்டாகும். அவ்வப்போது இந்த அபாய அறிகுறிகளைக் கவனித்துத் தக்க பரிகாரம் தேடுவது நலம்.

பெண்ணைப் பெற்றவர்களுக்குப் பெரிய தலைவலியாக இருப்பது—

இன்றைய விவாகம்

ஸி. ஆர். மஞ்ஜேசுவர்

இந்தியாவெங்குமே பெண்களுக்கு வயது ஏற ஏறப் பெற்றோர் பாடு சங்கடந்தான். பெண் பருவம் அடைந்து சற்றுப் பெரியவளும் ஆகிவிட்டால் தாயார் கண்ணைப் பிசைந்துகொண்டே இருப்பாள். தகப்பனாரோ கண்ணெதிரே சரியான பையன் இருந்தாலும் அது தெரியாமல் பல ஜாதகங்களைத் தேடிக்கொண்டு திரிவார். சீமைக்குப் போய்ப் படித்துவிட்டு வந்தவர்கள் கூட இப்படித்தான் என்றால் கேட்பானேன்? புருஷனைத் தேடப் பெண் தானே முந்திக்கொள்ளவும் மாட்டாள். அது பெற்றோர்களின் பொறுப்பு என்று விட்டுவிடுவாள்.

பொதுவாக, நம் நாட்டில் இதுதான் வழக்கம். இருந்தாலும் கூடிய வரைக்கும் தம்பதிகள் ஒத்துப் போய்ச் சுகமாகத்தான் காலங்கழிக்கிறார்கள். 'என்ன செய்வது? எப்படியோ உலகத்தில் வந்தாயிற்று' என்று சாகும்வரை எதற்கும் வளைந்து கொடுத்துக்கொண்டு போகிறார்கள், நம் பெண்மணிகள்.

வாழ்க்கையில் ஒரு லட்சியம் இருக்கவேண்டும். அப்போதுதான் விவாகம் சோபிக்கும். ஒருவித லட்சியமும் இல்லாமல் வாழ்க்கை நடத்துபவர்களுக்கு விவாகம் அர்த்தமற்ற சடங்காகத்தான் படும். விவாகமான புதிசில் தாங்கள் நீடித்த இன்பம் அநுபவிப்பது போல் அவர்களுக்குத் தோன்றலாம்; ஆனால் போகப் போக ஆசை தணிந்து வாழ்க்கையே சாரமற்று விடும். விவாகத்தின் பலன் இதுதானா?

நம்மிடம் உள்ள ஒரு குறையைச் சொல்லித்தான் ஆகவேண்டும்: நம் நாகரிகம் பழமையானது; அது அழிந்துகொண்டே வருகிறது. அன்றாடம் நடக்கும் விஷயங்களில் - காதல், கொலை, பழக்க வழக்கங்களில் கூட - நாம் பழைய முறைகளையே பின்பற்றி வருகிறோம். ஒழுங்கு என்பது நம்மிடத்தில் துளிகூடக் கிடையாது.

ஒரு காலத்தில் விவாகம் என்பது புனிதமான சடங்காக இருந்தது. இந்த உலகத்தில் புருஷனைத் தவிர வேறு தெய்வம் இல்லை என்று நம் நாட்டுப் பெண்மணிகள் நம்பி வந்தார்கள். புருஷன் இறந்ததும் மனைவி உடன்கட்டை ஏறுவது பழைய வழக்கம். இந்தக்

காப்பிரைட: இந்தியன் உமன் (ஆங்கிலம்: மே '49), பம்பாய்.

காலத்தில் பாருங்கள்: மனைவி ரேஷன் கடைக்குப் புறப் பட்டுப் போகிறாள்; ஏன், உத்தியோ கம் பார்க்கவும் கிளம்பி விடுகிறாள். புருஷன் குணம் எப்படி என்று அவ ளுக்கு முன்னைவிட நன்றாகத் தெரிந் திருக்கிறது. இப்போது அவள் அவனைத் தெய்வமாகக் கொண்டாடு வதுமில்லை. இதனால் குடும்பத்தில் ஒற்றுமை இராதே என்று சொல் லலாம். அதற்கு என்ன செய்வது? திடீரென்று நம் நாட்டுப் பெண்மணி களுக்கு விழிப்பு ஏற்பட்டுவிட்டது. அதனால் இந்தக் காலத்துப் பெண்



கள் தங்களுக்கு இயற்கையான நாணத்தைக்கூட விட்டுவிட்டார் கள். வரவர விவாகபந்தம் நீடிப்ப தில்லை; எடுத்ததற்கெல்லாம் விவாக ரத்துதான்! ஆனால் ஒரு நன்மை: பெண்களுக்கும் குடும்பசொத்தில் பங்கு கேட்கும் உரிமை கிடைத் திருக்கிறது. இனிமேல் அவர்கள் இன்னும் அதிக சுயேச்சையாக வாழலாமோ இல்லையோ? 'எப்படி இருந்தாலும் கடைசியில் விவாக ரத்து இருக்கவே இருக்கிறது' என்று இந்த நாளில் பெண்கள் விவாகச் சடங்கை அப்படிப் பிரமாதமாகப் பாராட்டுவதில்லை.

நம் சமூகம் இப்போது குட்டை யாகக் குழம்பிக் கிடக்கிறது. பொரு ளாதார நிலை சரியாக இல்லை.



பெயருக்கு விவாகம் என்று நடக்கி றதே தவிர அதில் ஒரு சுவையும் இல்லை. புருஷன் சம்பாதிக்கிறானா இல்லையா என்றுதான் பெண்கள் முதலில் கவனிக்கிறார்கள். இல்லா விட்டால் அவர்கள் விவாகம் செய்து கொள்ளத் தயாராக இல்லை. பணம் இருந்தால்தானே தங்கள் இஷ் டம்போல் குழந்தை குட்டி பெறாத படியும், வேறு எந்த விதமான தொல்லை இல்லாமலும் வாழலாம்? புருஷர்களுக்கும் வரவர விவாகத் தில் சிரத்தை இல்லை. முதலில் குடியிருக்க வசதி இருந்தால்தானே விவாகத்தைப்பற்றி யோசிப்பதற்கு? வாழ்க்கைத்தரமும் அதோடு செலவும் நாளுக்கு நாள் அதிகரித் துக்கொண்டே போகிறது. இரவு பகல் ரேஷன் வேறு. இந்த நிலையில் வருகிறவள் அழகியாக இருந்தாலும் அவளை வைத்துக்கொண்டு எங்கே வாழ முடியும்? அவளைவிட இருக்க இடந்தான் இப்போது புருஷனுக்கு மிகவும் தேவை. இல்லாவிட்டால், தொட்டில் கட் டக்கூட இடம் இல்லாமல் ஒரே அறையில் இரண்டு தனிக் குடித்த னக்காரர் எல்லாவற்றையும் பணம் கொடுத்து வாங்கிப் பங்கு போட்டுக் கொண்டு இருக்கிறமாதிரிதான் தம்பதிகள் வாழ வேண்டும்; வேறு வழி இல்லை.

இதுதான் பிழை

[8-ஆம் பக்கத்தில் உள்ள வாசகத்தை நீங்களே திருத்திப் பார்க்குமுன் இதைப் படிக்க வேண்டாம்.]

1. முன்னூற்றறுபது என்பது பிழை. முந்நூற்றறுபது என்று இருக்கவேண்டும். மூன்று நூறு, முந்நூறு என்றுதான் வரும்.

2. கொடை என்பது ஈகை என்ற பொருளுடையது. ஆகவே, இங்கே குடை என்ற சொல்தான் இருக்கவேண்டும்.

3. நிலவு எறிக்குமே ஒழிய எரிக்காது.

4. கிரகங்கள் என்பது வானில் உலவும் சந்திரன் முதலிய கோள்களைத்தான் குறிக்கும். வீடு என்ற பொருளில் வரும் சொல் கிருகம்; கிரகம் அன்று.

5. நாகப்பழம் என்பது பேச்சு வழக்கு. நாவற்பழம் என்பதுதான் சரியான பெயர். நாவலந் தீவு என்று பாரததேசத்தைச் சொல்வதை ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள்.

6. செவ்வாய்க்கு வாகனம் மேஷம்; மேஷராசிக்கு உரியது செவ்வாய். ஆட்டை வாகனமாகக் கொண்ட முருகனைச் செவ்வாய்க்கு அதிதேவதையாக நூல்கள் கூறும்.

7. அப்போது அப்போது என்றோ, அவ்வப்போது என்றோ எழுதுவதுதான் சரி; அப்பப்போ, அப்பப்போது என்றெல்லாம் எழுதுவது பிழை.

8. புகார் வேறு, காவிரிப்பூம் பட்டினம் வேறு அல்ல; இரண்டும் ஒன்றே. சோழனுடைய இராசதானி நகரங்கள் காவிரிப்பூம் பட்டினமும் உறையூருமாகும்.

9. நெடுந்தொகையும் அகநானூறும் ஒன்றே. அதிக அடிகளையுடைய பாடல்களின் தொகுதியாக இருப்பதால் நெடுந்தொகையென்றும், அகப் பொருட் செய்யுட்கள் நானூறைக் கொண்டமையால் அகநானூறென்றும் ஒரு நூலுக்கே பெயர்கள் வந்தன.

10. ஆண்டாளும் மீராவும் இந்து மதத்தைச் சேர்ந்தவர்களாகையால், அவர்களை இந்து மதத்தின் விளக்குகள் என்று சொல்லலாம். ஆனால் தரு தத் கிறிஸ்தவ சமயத்தைச் சார்ந்த பெண்மணி யாதலால் அவளை அவ்வாறு சொல்வது சரியன்று.

11. பௌத்தர்களின் சமய நூலாகிய திரிபிடகங்கள் பாளி பாஷையில் இருக்கின்றன; வடமொழியில் அல்ல.

12. சைவத்தை வேதாந்த மதங்களில் ஒன்றாகச் சொல்வதில்லை. சித்தாந்தம் என்றும், சைவசித்தாந்தமென்றும் சொல்வதுதான் மரபு.

குழந்தைகளைப் பெற்றுவிடுவதால் ஒருத்தி தாய் ஆகிவிட மாட்டாள்.

—ஏ. ஷெட்

பெற்றோருக்குக் கிலி தருகின்றன, குழந்தையின் சில பழக்கங்கள். அவைகளைப் போக்குவது எப்படி?

குழந்தையின் பழக்கம்

ஸிட்னி எல். க்ரீன்



குழந்தைக்கு ஏற்படும் சில பழக்கங்களைப்பற்றிப் பெற்றோர்கள் கவலைப்படுவார்கள். ஒரு குழந்தை வாயில் விரல் போட்டுக் கொள்ளும்; ஒன்று உணவை முகம் முழுவதும் பூசிக்கொண்டு தலையை மோதிக்கொண்டு அழும்; ஒன்று ஆணிகளைப் பொறுக்கும்; ஒன்று தவறாமல் படுக்கையில் நீர் விட்டு விடும். இந்த மாதிரி பழக்கங்களைக் கண்டு பெரியவர்கள் கலவரம் அடைவது சகஜம். ஆனால் வளர்க்கத் தெரியாத குற்றத்தினால்தான் குழந்தைக்கு இப்படியெல்லாம் கெட்ட பழ்க்கங்கள் ஏற்படுகின்றன என்று பெற்றோர்கள் கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை. வளரும் பருவத்தில் குழந்தைக்கு எவ்வளவோ விதமான பழக்கங்கள் ஏற்படுவது இயற்கை. பெற்றோர் கண்ணுக்கு அவை தவறாகத் தோன்றுகின்றன. அவர்கள் படும் கவலையைக் கண்டுதான் குழந்தை தன் பழக்கத்தை விடாமல் பற்றிக் கொள்ளுகிறது. இல்லாவிட்டால் அது நீடிக்காது.

ஏதோ பெரிய காரியம் செய்வதாய் எண்ணிக்கொண்டே குழந்தை மேலே சொன்னபடி எல்லாம் நடக்கிறது. பத்து மாதக் குழந்தை, உணவை எடுத்துக் கை, கால், முகங்களில் அப்பிக்கொண்டவுடன் உணவின் வாசனை, ருசி இதெல்லாம் தானாக அதற்குத் தெரிகிறது. இதனால் அது சந்தோஷமாய்ச் சாப்பிடுகிறது.

சிறு வயதில் இருந்த பழக்கங்களை வயதான பிறகும் விடாமல் கைக்கொள்ளும் குழந்தையும் உண்டு. தன்னைப்பற்றிப் போதிய தைரியம் அதற்கு இல்லாததுதான் காரணம். தன் வயதுக்கேற்ற காரியங்களைத் தன்னால் செய்ய முடியும் என்ற நம்பிக்கை குழந்தைக்கு இல்லாமல் போய்விடுகிறது.

படுக்கையில் நீர் விடும் பழக்கத்தை எடுத்துக் கொள்வோம். மூன்று அல்லது நான்கு வயதுக்குப் பிறகும் இந்தப் பழக்கம் ஒரு குழந்தைக்கு நீடித்துவிடுகிறது. தாயைத் தவிர வெவ்வேறு செவிலிமார், உறவினர் ஆகியவர்களும் குழந்தையை வளர்ப்பார்கள்.

காப்பிரைட்: பேரெண்ட்ஸ் மகஸீன் (ஆங்கிலம்: ஏப்ரல் '49), சிக்காகோ, ஐக்கிய அமெரிக்கா

இதனால் குழந்தைக்கு யார் சொல்வதைக் கேட்பது என்ற கலக்கம் ஏற்படும். படுக்கையில் நீரே விடாத ஒரு குழந்தைகூட, தங்கையோ, தம்பியோ பிறந்த பிறகு அந்தப் பழக்கத்தைக் கற்றுவிடும். படுக்கையில் நீர் விடாத குழந்தைக்குச் சில சமயம் ஏதாவது கோபம், துக்கம் காரணமாக அந்தப்பழக்கம் ஏற்பட்டுவிடலாம். ஆனால் அது சீக்கிரமே மாறி விடும். வீடு மாற்றிய கலவரத்தில் குழந்தைக்கு இந்தப் பழக்கம் வந்திருந்தால், ஒரு வாரம் அல்லது பத்து நாளில் மீண்டும் எல்லாம் சரியாகிவிடும்.

வாயில் விரல் போட்டுக்கொள்ளும் பழக்கத்தை எல்லாச் சிறு குழந்தைகளிடமும் காண்கிறோம். வாயில் எது பட்டாலும் உடனே தானாகவே குழந்தை அதை நக்கி ருசி பார்க்கும். பிறந்து சில மாதம் ஆனவுடன் குழந்தையின் கண்ணுக்கு அதன் கை கால்களும் சுற்றிலுமுள்ள வஸ்துக்களும் தென்படுகின்றன. உடனே அது தன் விரல்களை வாயில் வைத்துக் கொள்வதோடு, கையில் அகப்பட்ட எந்த வஸ்துவையும் வாய்க்குக் கொண்டுபோய் விடுகிறது. இதில் அதற்கு ஒரு திருப்தி. தாயும் தகப்பனும் தன்னிடம் அன்பாக இருப்பதைப்பற்றிச் சந்தேகம் இல்லாமல் குழந்தை சந்தோஷமாய் வளர்ந்தால், வாயில் விரல் போட்டுக்கொள்ளத் தோன்றாது. இரண்டு வயதுக் குழந்தைகூட மிகவும் மன வேதனைப்படும் சமயத்தில்தான் வாயில் விரல் போட்டுக்கொள்ளும். மூன்று வயது நிரம்பிய குழந்தை பெரும்பாலும் தூங்கும்போது வாயில் விரல் போட்டுக்கொள்ளுகிறது. விரலில் கசப்பு மருந்தைத் தடவி, அதட்டி மிரட்டினால் குழந்தையின் இந்தப் பழக்கம் அகன்றுவிடும். ஆனாலும் இந்த முறைகள் அதற்குத் தீமையை விளைவிக்கும். இரண்டு வயதுக்குப் பிறகு குழந்தை எப்போதும் வாயில் விரல் போட்டுக்கொண்டால், பெற்றோர்கள் அதைப்பற்றிக் கவலைப் படுவதைவிட அந்தப் பழக்கம் ஏற்பட்ட காரணத்தைப்பற்றி யோசிப்பது நலம். ஒரு விதமான பயமும் தன்னிடம் நம்பிக்கைக் குறைவும் குழந்தைக்கு இருப்பதே இதற்குக் காரணம். அந்த வயதில் பிறர் உதவி இல்லாமல் தானே தன் காரியங்களைச் செய்துகொள்ள வேண்டும் என்று அதற்குத் தோன்றும். சரியாகச் செய்யத் தெரியாவிட்டாலும் தன்னைப் பிறர் கொண்டாட வேண்டும் என்று அதற்கு ஆசையிருக்கும். இடை இடையே பெற்றோர்கள் தன்னைக் கட்டி முத்தமிட்டுக் கொஞ்ச வேண்டும் என்றுகூட ஆசை உண்டாகலாம். இந்த ஆசை நிறைவேறாதபோது வாயில் விரல் போட்டுக்கொள்ளும். காரணம் என்ன என்பதை நாம் சரியாய் ஆராய்ந்து நடந்தால், அந்தப் பழக்கம் அடியோடு ஒழிந்துவிடும்.

நகத்தைக் கடிப்பது, துணியைக் கடிப்பது போன்ற பழக்கங்கள் தைரியமும் தன்னம்பிக்கையும் இல்லாததால் ஏற்படுகின்றன. அவற்றைத் தடுக்கப் பெற்றோர்கள் முயற்சி செய்யும்போது அவை இன்னும் உறுதி யாகிவிடுகின்றன. சிறு குழந்தை தன் கோபத்தையும் பிடிவாதத்தையும் இந்த வழியில் வெளியிடுகிறது. குழந்தை நகத்தைக் கடித்தால், கோபத்தினால்தான் அப்படிச் செய்கிறது என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். தாயையோ தங்கையையோ கடிக்க முடியுமா?

முடியாது. அதற்குப் பதிலாகத் தன் நகத்தையே கடித்துக்கொள்கிறது. இப்படித் தன் கோபத்தையும் ஆத்திரத்தையும் தீர்த்துக் கொண்டாலும், அதன் மனத்தாங்கல் நீங்காது.

கத்திக் கதறி அழும் பழக்கத்தை அலட்சியமாய் விட்டுவிட்டால், அது வெறியாக மூண்டு விடப்போகிறதே என்று அநேகம் பெற்றோர்கள் கவலைப்படுவார்கள். குழந்தை எந்த வயதில், எந்த ஸந்தர்ப்பத்தில் அப்படி அழுகிறது என்பதைச் சரியாகப் புரிந்துகொண்டால், அது வெறியாக மாறாது. பிறந்து இரண்டு மூன்று மாதம் வரையிலும் குழந்தை பசியோடு இருக்கும்போதும நீர் விடும்போதும் அழும். வயிற்றுவலி இருந்தாலும் கையில் அகப்படாமல் கதறும். குழந்தை பசியினால் அழுவதற்கும், நீர்விடும்போது வேதனையுடன் கதறுவதற்கும், வயிற்றுவலி தாங்காமல் வீரிடுவதற்கும் உள்ள வித்தியாசம் தாய்க்குச் சீக்கிரம் தெரிந்துவிடும். பசி என்று தோன்றினால் குழந்தையை எடுத்துப் பால் கொடுக்கவேண்டும். குழந்தையின் சொக்காயை மாற்றி மடியில் வைத்துச் சிறிது சீராட்டவேண்டும். அப்போதுதான் தனக்கு வேண்டியதை அன்புடன் கவனித்துச் செய்யத் தாய் இருக்கிறாள் என்ற தைரியம் அதற்கு உண்டாகும். இதுவே குழந்தை எப்போதும் கவலையில்லாமல் நிம்மதியாக இருப்பதற்கு வழி. குழந்தையைத் தூங்க வைக்கும்போது அது தனக்குத் தூங்க விருப்பமில்லை என்பதைக் காட்டுவதற்காகக் கத்துவதுண்டு. இதுபற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. சீக்கிரமே இந்தப் பழக்கம் நீங்கிவிடும்.

குழந்தைக்கு அழுக்கு அசிங்கம் என்றால் தெரியுமா? வெளிக்குப் போனால் அதைத் தொட்டுவிடும். மேலே அப்பிக் கொள்ளும். குழந்தை கொஞ்சம் பெரிதானபின் வேறு விஷயங்கள் அதன் கண்ணில் படும். அப்போதுதான் இந்தப் பழக்கத்தைத் தாய் மெதுவாகக் கண்டிக்க வேண்டும். உணவைக் கண்டாலும் குழந்தைக்கு அதைக் கையில் எடுத்து மேலே பூசிக் கொள்ள வேண்டும் என்றே தோன்றும். பெற்றோர்கள் சொல்வதைப் புரிந்துகொண்டு கை கால்களை இஷ்டப்படி உபயோகிக்கும் பருவத்தை அடைந்துவிட்டால், இதெல்லாம்தானாகவே நின்றுவிடும்.

கண்ட கண்ட வேளைகளில் நீர் விடுவது, வெளிக்குப் போவது என்ற பழக்கங்கள் நாளடைவில் மாறிவிடும். ஆனால் குழந்தைக்குத் தானாக உட்காரும் சக்தி ஏற்பட்ட பிறகுதான் இந்த விஷயங்களில் அதற்கு ஸ்வாதீனம் உண்டாகும். வெளிக்குப் போகும் வேலையை முதலில் ஒழுங்குபடுத்திவிடலாம். பிறகு, பகல் வேளையில் நீர் விடுவது ஒழுங்கு படும். அதன் பிறகு இரவில் நீர் விடுவது நிற்கும். நோய் நொடி இல்லாமல் சௌக்கியமாக இருக்கும் குழந்தை மூன்று வயதான பிறகும் சரியான வேளைகளில் இந்தக் காரியங்களைச் செய்யவில்லை என்றால், ஏதோ ஒரு காரணத்தினால்தான் அது இப்படிச் சிறு குழந்தையாகவே இருக்கும் நிலைமையை விரும்புகிறது என்று நாம் ஊகித்துக்கொள்ள வேண்டும். குழந்தைக்குச் சிங்காரித்து விட்டு அதைக் கலைக்காமல் இருக்கும் பழக்கத்தை அது சீக்கிரம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று பெற்றோர் ஆசை கொண்டால், இப்படி

நேரலாம். குழந்தைக்கு வராத காரியத்தைச் செய்யச் சொன்னால், அதனால் எப்படிச் செய்ய முடியும்? எவ்வளவோ தடவை முயன்றும் பயன் இல்லாமல் போகிறது; அதனால் குழந்தைக்கு நம்பிக்கை, தைரியம், புதிதாய் ஏதேனும் செய்து பார்க்க வேண்டும் என்ற ஆசை இவை அடியோடு ஒழிந்துவிடும்.

சில குழந்தைகள், கை கால் தலை இவைகளைச் சதா ஆட்டும்; முகத்தைக் கோணிக் கொள்ளும்; பேந்தப் பேந்த விழிக்கும். இந்தச் செய்கைகளைக் கண்டு பெற்றோர்கள் கவலை கொள்வார்கள். ஆனால் இப்படி அடிக்கடி செய்யாமல் குழந்தை உற்சாகமாக இருந்தால், கவனிக்காமல் விட்டு விடுவதே நல்லது. யாரையாவது பார்த்து அவர்கள் செய்கிற மாதிரி எப்போதாவது குழந்தை இப்படிச் செய்வதும் உண்டு. ஆனால் இந்தப் பழக்கங்கள் சீக்கிரமே மாறிவிடும். நான்கு வயதுப் பெண் குழந்தையின் தாய் ஒருத்திக்கு, இளம் பிள்ளை வாதத்தின் பயனாகக் கால் சிறிது ஊனமாயிருந்தது. குழந்தை தாயைப் பார்த்துத் தானும் அப்படியே நடக்க வேண்டுமென்று விரும்பி வெகுநாள் வரையிலும் நொண்டி நொண்டி நடந்துகொண்டிருந்தது. ஆனால், எவரும் அதைக் கவனிக்காததுபோல் இருந்து விட்டார்கள். மூன்று நான்கு மாதத்தில் அந்தப் பழக்கம் தானே நின்று விட்டது. "ஏன் நொண்டுவதை நிறுத்திவிட்டாய்?" என்று அப்புறம் கேட்டதற்கு, அந்தப் பெண் குழந்தை, "அம்மாவைப்போல் எனக்குக் கால் நொண்டி இல்லை. எப்போதும் நொண்டி நொண்டி நடந்தால் மற்றவர்களுடன் ஓடி விளையாடக் கஷ்டமாக இருக்கிறது" என்று அது பதில் சொல்லியது. ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் என்ன செய்வதென்று தெரியாமல் தத்தளிக்கும் போதுதான் குழந்தையிடம் இந்த மாதிரி சேஷ்டைகள் உண்டாகின்றன. தன்னைத் தைரியப்படுத்திக்கொள்வதற்காகவே அது இந்தச் செயல்களைச் செய்கிறது.

ஒவ்வொரு குழந்தைக்கும் தானே தன் காரியங்களைச் செய்துகொள்ள வேண்டும் என்று தோன்றும். பெற்றோர்கள் அதற்கு உதவியாக இருந்து குழந்தை தானே தன் காரியங்களைக் கவனித்துக் கொள்ளும்படி விடவேண்டும். ஒவ்வொன்றையும் புதிதாய்க் கற்றுக்கொண்டு செய்யும் போது குழந்தைப் பருவத்தின் பழக்கங்கள் நாளடைவில் குறைந்து, சரியாய் நடந்துகொள்ளும் பழக்கம் தானாக அதற்கு ஏற்படும். கவலைப்படுவதற்குப் பதிலாகப் பெற்றோர்கள் எந்தப் பழக்கம் குழந்தையின் வளர்ச்சிக்கு நல்லது என்பதை அறிய முயலவேண்டும். குழந்தைக்கும் வேண்டியது, வேண்டாதது என்று உண்டு; தானே நல்ல வழியில் வளர்வதற்கு அதுவும் எவ்வளவோ பாடுபடுகிறது. இதைப் பெற்றோர் தெரிந்துகொள்ள வேண்டும். அப்படிப்பட்டவர்கள், தம் குழந்தைகளைப்பற்றியாவது தம் குறைகளைப்பற்றியாவது அதிகம் கவலை கொள்வதில்லை. வேண்டியதைச் செய்து குழந்தையின் வளர்ச்சிக்குத் தாங்களும் உதவுவதே சிறந்த அநுபவம் என்பதை அவர்கள் கண்டுகொள்வார்கள்.

பாபுராவ் பதில் சொல்லுகிருர்

இந்திய ஸினிமாப் பத்திரிகை உலகத்திலே ஒரு புரட்சி உண்டாக்கியவர் பாபுராவ். வழவழவென்ற ஆர்ட் காகிதத்தில், சுடச் சுட ஸினிமா விஷயங்களை எழுதுகிருர். 'பிலிமிண்டியா'வில் கேள்விகளுக்கு அவர் எழுதிவரும் பதில்கள் நகைச்சுவையும் விறுவிறுப்பும் மிகுந்திருக்கின்றன. ஸினிமாபற்றி மட்டுமல்ல; வேறு விஷயங்கள்பற்றியும் அருமையாகப் பதில் தருகிருர்.

கேள்வி: தேள் கொடுக்குக்கும் மங்கையரின் நாக்குக்கும் வித்தியாசம் என்ன?

பதில்: தேளைக் கொன்றுவிட்டு அது கொட்டாமல் நம்மைப் பாதுகாத்துக்கொள்ளலாம்.

* * *

கே: பைத்தியக்காரன் காதல் புரிய முடியுமா?

ப: காதலும் பைத்தியமும் இரட்டைக் குழந்தைகள்.

* * *

கே: நேரு நன்ருக நீந்துவாரா?

ப: நீந்துவார்; ஆனல் நடு ஆற்றில் மூச்சுத் திணறும்போது அவரைக் கரை சேர்க்க ஸர்தார் படேல் வரவேண்டும்.

* * *

கே: வாத்தியாரம்மா யாரை யாவது பார்த்தால் உங்களுக்கு என்ன தோன்றுகிறது?

ப: கடிக்க ஒருவரும் இல்லாமல் படுக்கையில் தனியே ஊரும் மூட்டைப் பூச்சியைப் போலத் தோன்றுகிறது.

* * *

கே: அமெரிக்காவுக்கு நீக்ரோக்கள் எப்படிப் போனர்கள்?

ப: ஆரம்பத்தில் பருத்தித் தோட்டங்களில் வெள்ளைக்காரனுக்காக நெற்றி வேர்வை நிலத்தில் விழும்படி உழைக்கும் பொருட்டு இறக்குமதியானர்கள்.

* * *

கே: காலேஜ் மாணுக்கன் காணும் கனவு எப்படி? பிச்சைக்காரன் காணும் கனவு எப்படி?

ப: பிச்சைக்காரன் கனவு காலணுக் காசளவில் நிற்கிறது. மாணுக்கன் கனவோ உலகம் முழுவதுமே வியாபிக்கிறது.

* * *

கே: பசித்த மனிதன் உணவைத் திருடினல் அது குற்றமா?

ப: குற்றமாக எண்ணக் கூடாது; ஆனல் நம்முடைய ஒழுக்கம் உண்ணும் உணவையும் உறங்கும் படுக்கையையும் சார்ந்ததாக இருக்கிறதே.

* * *

கே: கலைஞர்களைக் காட்டிலும் அரசியல்வாதிகளுக்கு அதிக மதிப்பு இருக்கிறதே; ஏன்?

ப: யாரிடம் பயம் இருக்கிறதோ அவர்களிடம் நாம் மரியாதையாக இருக்கிறோம். அரசியல்வாதிகள் நம்முடைய சென்ற காலம், நிகழ்காலம், வருங்காலம் மூன்றுக்கும் பாதுகாப்பாளர்களாக இருக்கிருர்கள்.

காப்பிரைட்: பிலிமிண்டியா (ஆங்கிலம்: ஜூன் '49), பம்பாய்.

கே: நம் தேசத்துத் தொழிலாளர் இயக்கத்தைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: குறைந்த வேலை, குறைவான கட்டுப்பாடு, அதிகப் பணம், அதிக அடாவடித்தனம் - இவைகளுக்காக அந்த இயக்கம் நடைபெறுகிறது.

* * *

கே: பேய்க்கும் பெருங்கடலுக்குமிடையே நீங்கள் அகப்பட்டுக் கொண்டால் எதை நீங்கள் சார்வீர்கள்?

ப: பேயைத்தான். அதோடு பேசிச் சமாதானம் செய்து கொள்ளலாமே.

* * *

கே: சட்டம் எதற்காக இருக்கிறது?

ப: போலீஸ்காரனுக்கும் வக்கீலுக்கும் ஜட்ஜுக்கும் வேலை கொடுக்க.

* * *

கே: என் இப்போதெல்லாம் ரோஜாச் செடிகளைப் பிடுங்கி எறிந்துவிட்டு முட்டைக்கோசைப் பயிர் செய்கிறார்கள்?

ப: ரோஜா மறைய மறைய வாழ்க்கை தன் பழைய நறுமணத்தை இழந்து வருகிறது. முட்டைக்கோசுடன் கம்யூனிஸமும் வளர்ந்துகொண்டிருக்கிறது. பட்டினி கிடக்கும் லட்சக்கணக்கான ஜனங்களுக்குச் சாப்பாட்டின் மணமே சிறந்த நறுமணமாக ஆகிவருகிறது.

* * *

கே: ஓய்வும் சும்மா இருப்பதும் ஒன்று?

ப: யார் உழைக்கிறார்களோ அவர்களுக்கு ஓய்வு அவசியம் வேண்டும். சும்மா இருக்கும் சோம்பேறிகள் வேலையிருந்தும் 'டபாய்க்'கிறார்கள்.

கே: உங்கள் கருத்தின்படி இந்தக் காலத்து வாழ்க்கையில் எது மிகவும் சோகமானது?

ப: ஜெயில் யாத்திரை செய்தவர்கள் ஆட்சி புரிவதில் சிறந்தவர்களாக இருப்பார்கள் என்ற நம்பிக்கை.

* * *

கே: நான் பத்திரிகைத் தொழிலில் புக நினைக்கிறேன். உங்கள் புத்திமதியை நாடுகிறேன்.

ப: உங்களுக்கு எது மனமாரத் தோன்றுகிறதோ அதை எழுதுங்கள்; காதில் விழுகிறதை மறந்து விடுங்கள். தொழிற் பயிற்சி உங்களுக்கு வந்துவிடும்.

* *

கே: வேதாந்திகள் பாதிப் பைத்தியங்கள் என்று ஜனங்கள் சொல்லிக்கொள்கிறார்களே!

ப: ஜனங்கள் முழுப் பைத்தியங்கள் என்று வேதாந்திகள் நினைக்கிறார்கள்.

* *

கே: பெண் அடுக்களை ராணியானால் ஆண் எப்படி இருக்க வேண்டும்?

ப: அந்த ராணி அடுக்களையில் தொடர்ச்சியாக இருந்து வரவேண்டுமானால் அவன் சாப்பாட்டு ராஜா ஆகவேண்டும்; புருஷன் உண்டால்தான் பெண் சமைக்க விரும்புவாள்.

* *

கே: மூன்றாவது உலக மகா யுத்தம் வந்தால் இளம் பெண்களுக்கு என்ன புத்திமதி சொல்வீர்கள்?

ப: "யுத்தத்துக்குப் போய் வீர மரணம் அடையுங்கள். அதனால் இங்கே தொட்டில்கள் குறையும்; சோற்றுக்கு நிற்கும் ஜனங்களும் குறைவார்கள்" என்று சொல்வேன்.

பிச்சைக்காரர் தொல்லை பெரிய தொல்லை. நமக்கு மட்டுமல்ல; எத்தனை குழந்தைகள் வேறே கூனும் குருடும் ஆகிறார்கள்!

பிச்சைக்காரர் கொடுமை

சுரேந்திரர்

சாது, பைராகி, கூன், குருடர், பிச்சைக்காரர் இவர்களைப் பார்த்து, 'ஐயோ பாவம்' என்று சொல்வது நமக்குச் சர்வ சாதாரணம். அதனால் பிச்சை வாங்கும் பழக்கத்தோடு சோம்பேறித்தனமும் வேர் ஊன்றி வளர்ந்துவிட்டது. அதோடு போகிறதா? கற்பனா சக்தி, சுறுசுறுப்பு, மனிதத்தன்மை எல்லாமே போய்விடுகிறது இந்தப் பிச்சைக்காரர்களுக்கு. நாளாக ஆக இவர்கள் ரத்தத்தில் இதெல்லாம் ஊறிப் பிச்சை எடுப்பதும் பிறர் காலில் விழுந்து கெஞ்சிப் பிழைப்பதும் தங்கள் ஜாதி தர்மம் என்று எண்ணுகிறார்கள். இதற்கு வறுமைதான் காரணம் என்று சொல்ல முடியாது. அதற்கும் மேலே சோம்பேறித்தனம் வளர்வதுதான் முக்கியம். இவ்வளவு சோம்பேறிகளாகத் தங்களுக்கு அங்கவீனம் இல்லையே என்று சிலர் வருத்தப்படுவது உண்டு. குழந்தைகள் மொண்டி முடமாகப் பிறந்தால் இவர்களுக்கு அதைவிடச் சந்தோஷம். தெய்வாதீனமாய்க் குழந்தை நோய் நொடியின்றிப் பிறந்துவிட்டால் இவர்கள் கையில் சிக்கி என்ன பாடு படுகிறது பாருங்கள்! இவர்களில் குறவர்தான் முதல் ரகம். இவர்களையும் தூக்கி அடிக்கிறது இதில் ஒரு திருட்டுக் கூட்டம். ஒரு நாள் இதைப்பற்றி 'ஹ்யூமன் ஆபீஸ்' என்ற பத்திரிகாசிரியருடன் பேசிக்கொண்டிருந்தேன். அவர், "இந்தக் கூட்டம் என்ன செய்கிறது தெரியுமா? சிறு குழந்தைகளைத் திருடிக்கொண்டு ஓடுவதுதான் இதன் முதல் வேலை. வேண்டிய அளவுக்குக் கிடைத்ததும் அநாதை விடுதி போல் ஒன்றை ஆரம்பிக்கிறார்கள். அதை ஒரு பள்ளிக்கூடம் போல் நடத்தி, அதில் எப்படி எல்லாம் பிச்சை எடுக்க வேண்டும் என்பதைச் சொல்லிக் கொடுத்து நல்ல தேர்ச்சி பெறும்படி பழக்கி விடுகிறார்கள். அநாதைகளைச் சேர்த்து அவர்களை முன்னுக்குக் கொண்டு வருகிறோம் என்று நம்மை ஏமாற்றிப் பணம் பிடுங்கி விடுவார்கள். இப்படிப் பழக்குவதில் குழந்தைகள் எவ்வளவோ சித்திர இம்சைக்கு ஆளாக வேண்டியிருக்கிறது. சில குழந்தைகள் லேசில் கீழ்ப்படிய மாட்டார்கள். அந்தக் குழந்தைகளின் அங்கத்தை ஊனமாக்கி விடுவது அவர்கள் வழக்கம். இதைத் தவிர வேறு ஓர் எண்ணமும் உண்டு, அவர்களுக்கு. மொண்டி முடம் என்றால் நாம் அதிக இரக்கம் காட்டுவோம் என்று நம்பிக்கை. இப்படி லாபம் அடைந்து பணம் சேமித்து வைக்கிறார்கள்" என்றார். இதைப் பற்றி அவர் பத்திரிகையிலும் எழுதுவதாகச் சொன்னார்.

காப்பிரைட்: கர்மவீர் (கன்னடம் 2-8-'49), ஹுப்ளி.

ஒரு நாள் பிரபல எழுத்தாளரும் ராஜதந்திரியுமான கே. எம். முன்ஷியுடன் பேசிக்கொண்டிருக்கும்போது, "இப்படிக் குழந்தைகளை விற்பதை என் கண்ணால் பார்த்திருக்கிறேன். குருடான குழந்தையை 5 ரூபாய்க்கும், அங்கவீனர்களை இரண்டு ரூபாய்க்கும் விற்று விடுகிறார்கள். இவர்களை வாங்கவும் தகுந்த ஆட்கள் இருக்கிறார்கள். இந்த ஏழைக் குழந்தைகளைப் பிச்சை எடுக்கத் தயார் செய்வதுதான் சகிக்கவில்லை. ஒரு நாள் கால்நடையாகப் போய்க்கொண்டிருந்தேன். தபால் பெட்டி ஒன்றுக்குப் பக்கத்தில் சிறு பையன் ஒருவன் - சுமார் ஆறு வயது இருக்கும் - தனக்குச் சொல்லிக் கொடுத்தபடி பிச்சை கேட்டுக்கொண்டிருந்தான். பையன் எங்கேயாவது சோர்ந்து போய்விடப் போகிறானே அல்லது விளையாடப் போகிறானே என்று அவனுக்கு ஒரு காவல். அதுவும் மற்றவர் கவனிக்காதபடி, கொஞ்ச தூரத்தில் ஒரு தடியன் கையில் எப்போதும் ஒரு பீடியுடன் உட்கார்ந்திருந்தான். கொஞ்ச நேரத்துக்கு ஒரு தடவை பையனின் முதுகில் எரியும் பீடியால் சூடு கொடுத்துக்கொண்டே இருந்தான், அந்தத் தடியன். சுரீலென்று நெருப்புப் படும்போது பையன் அலறி அலறிப் பிச்சை கேட்டுக்கொண்டிருந்தான். உடனே அவர்களைப் பிடித்து வரும்படி போலீஸிடம் சொல்லிவிட்டு வந்தேன். தொம்பக் கூத்தாடி ஒருவனைப் பார்த்தேன். ஒரு வயதுக் குழந்தையைக் கழுத்தில் கயிறு மாட்டித் தொங்கும் வித்தைக்குப் பழக்கிக்கொண்டிருந்தான். ஒரு பையன் ஊமைபோல் நடிக்கப் பாடம் படித்து வந்தான். அவனை எடுத்து வந்து குழந்தைகள் சங்கத்தில் சேர்த்துப் போஷித்த சில நாட்களிலே அவனுக்குக் காது வந்தது. ஊமை என்றவன் பேசத் தொடங்கினான். குழந்தைகளை வைத்துக்கொண்டு இப்படியும் ஒரு வியாபாரமா? இது யார் கண்ணில் பட்டாலும் உடனே தெரிவிக்க வேண்டும். பொது மக்கள் செய்யும் உதவி இது தான். மங்களூர், கோவா இந்த இடங்களிலிருந்து சிறுவர்களையும் சிறுமிகளையும் பம்பாய் முதலிய பெரிய பட்டணங்களுக்கு சில துஷ்டர்கள் எப்படியோ அழைத்து வந்துவிடுகிறார்கள். அங்கே நடக்கும் அக்கிரமம் கொஞ்ச நஞ்சமல்ல. சிறுவர்கள் இரண்டு மூன்று ரூபாய் சம்பளத்துக்கு எவ்வளவு கொடுமையைச் சகித்துக் கொள்கிறார்கள், பாவம்! சொன்னபடி கேட்காவிட்டால் உடம்பில் வெந்நீர் ஊற்றி அடிக்கிறார்கள், அந்தத் துஷ்டர்கள். நான் இதை நேரில் பார்த்திருக்கிறேன். சிலபேர் சிறுமிகளிடம் மிருகத்தனமாக நடந்து கொள்வதும் உண்டு" என்று சொல்லி வருத்தப்பட்டார் முன்ஷி.

மனிதத் தன்மையே இவர்களிடம் இருப்பதில்லை. இவர்களைச் சர்க்கார் கவனித்து ஏதாவது செய்தாக வேண்டும். மற்றவர்களும் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும்.

காந்திஜீயின் ஆசிரமத்தில்கூட ஒரு சமயம் இப்படி நடந்தது. காந்திஜீயைத் தேடிக்கொண்டு ஒரு பிச்சைக்காரி வந்தாள். காந்திஜீயிடம் போனால் வயிறு நிறையச் சோறு கிடைக்கும் என்று யாரோ சொன்னார்களாம். காந்திஜீயை வாழ்த்தி, தனக்கு ஒரு திக்கும் இல்லை, எப்படியாவது காப்பாற்ற

வேண்டுமென்று அவள் வேண்டிக் கொண்டாள்.

அவர் சிரிப்புடன், "அப்படியா உனக்கு ஏதாவது வேலை செய்யத் தெரியுமா?" என்று கேட்டார்.

அதற்கு அவள், "பிச்சை எடுக்கும் எனக்கு என்ன வேலை தெரியப் போகிறது, மகாராஜ்? பிச்சை எடுத்துத்தான் பிழைக்கிறேன்" என்றாள்.

"அப்படியானால் உனக்கு என்ன வேண்டும்?"

"ஏதாவது ரூபாய் கொடுத்தால் போதும்."

"ஐந்து ரூபாய் தருகிறேன் என்று வைத்துக் கொள். அதை வைத்துக்கொண்டு என்ன செய்துவிட முடியும் உன்னால்?"

"ஒன்றும் செய்ய முடியாது. ஒரு வாரம் காலந் தள்ளுவேன்."

"அப்புறம்?"

"இப்படி உங்களைப் போல் யாராவது புண்ணியவான் இருக்க மாட்டாரா?"

"என்னிடமே இருந்து விடுகிறாயா?"

கிழவி ஒப்புக்கொண்டாள். காந்திஜீ அவளுக்கு எவ்வளவோ, புத்தி சொல்லி நூல் நூற்கக் கற்றுக் கொடுத்தார். இரண்டு மூன்றேநாள் தான்; சோம்பலிலேயே ஊறியவள் எப்படி வணங்கி வேலை செய்வாள்? அவள் காந்திஜீயைத் திட்ட ஆரம்பித்தாள். "என் முதுகை ஒடிக்கிறார்! நல்ல மகாத்மா! இவரா எல்லாரும் புகழும் மனிதன்!" என்று சொல்லிச் சத்தியாக்கிரகம் கூடச் செய்ய ஆரம்பித்தாள். காந்திஜீயா இதற்கெல்லாம் மசிகிறவர்? தாமே வந்து அவள் கையைப் பிடித்து ஆசிரமத்துக்கு வெளியே கொண்டுபோய் விட்டுவிட்டு வந்தார்.

பாவம் என்று ஜேபியில் கை போட்டுக் காலணா எடுத்துப் போடுவதற்குமுன் சற்று யோசனை செய்துவிட்டுத் தக்க பரிகாரம் தேடினீர்களானால், சுமார் 5 லட்சம் சோம்பேறிகளில் சிலரையாவது மனிதர்கள் ஆக்கலாம். இப்படி நாம் ஒவ்வொருவரும் கொஞ்சம் சிரத்தை காட்டினால் சர்க்காரும் ஏதாவது பரிகாரம் செய்ய முடியும்.

வீடு காலியா?

நான் ஒரு சிநேகிதியைப் பார்க்கப் போயிருந்தேன். அவள் வீட்டு வாசலில், 'அறைகள் வாடகைக்கு விடப்படும். குழந்தைகள் இருக்கக்கூடாது' என்று விளம்பரம் ஒட்டியிருந்தாள். யாரோ கதவைத் தட்டிய சத்தம் கேட்டது. திறந்ததும் ஐந்து வயதுள்ள ஒரு சிறுவன் உள்ளே வந்தான். அவன் முகம் கவலை தோய்ந்திருந்தது. கம்பீரமாக வணங்கிவிட்டு, "அம்மா, உங்கள் வீட்டு ஜன்னலில் உள்ள விளம்பரத்தைக் கண்டேன். அறைகள் இன்னும் காலியாகத்தான் இருக்கின்றனவோ, என்னவோ; அறியேன். காலியாக இருந்தால், எனக்கு விடுவீர்களா? எனக்குக் குழந்தை குட்டி இல்லை. நானும் வயது வந்த என் பெற்றோருந்தான் இருக்கிறோம்" என்றான்.

அவனுக்குப் பின்னால் நம்பிக்கை தளர்ந்து மனம் சோர்ந்து நிற்கும் வயது முதிர்ந்த அந்தக் கிழத் தம்பதிகளைக் கண்டோம். அவர்களுக்கே அந்த அறைகள் கிடைத்துவிட்டன.

—டொலொரீஸ் நெவேர், 'ரீடர்ஸ் டைஜெஸ்ட்'

வசந்தப் பறவைகள்

'எஸ்'

இளவேனில் வந்ததும் அநேகம் பறவைகள் தம் சொந்த இடத்துக்குக் கூட்டமாகப் பறந்து போகும். 'நூற்றுக்கணக்கான மைல்களைக் கடந்து நேராக இமாலயத்திலோ திபேத்திலோ துருக்கிஸ்தானத்திலோ உள்ள குறிப்பிட்ட ஓர் இடத்துக்கு அவை எப்படிப் போய்ச் சேருகின்றன? - அவைகளுக்கு வழி காட்ட அதிசயக்கிரணம் ஏதாவது இருக்கிறதா?' - இது தான் பெரிய மர்மமாக இருக்கிறது. இதை இன்னும் யாரும் கண்டுபிடித்த பாடில்லை.

ஆனால் எல்லாப் பறவைகளுமே இந்தமாதிரி புறப்பட்டுப் போகும் என்று சொல்லுவதற்கில்லை. நம் வீட்டுத் தோட்டத்திலுள்ள சாதாரண மைனாவை எடுத்துக் கொள்ளலாமே; அது வருஷம் முழுதும் நம்மோடுதான் வசிக்கிறது. காடு, வீடு எதுவாக இருந்தாலும் அதற்கு ஒத்துப்போய்விடும். காடு முழுதும் சுற்றி அலைந்து விட்டு, வீட்டுக் கூரையில் வந்து கூடு கட்டிக்கொண்டு அது வாழும். அப்புறம் அந்த இடத்தில் எதையும் நெருங்கவிடாது. நடுப் பகலில் வெயில் தாங்காமல் வீட்டு இறைவானத்தில் அது ஒதுங்கி யிருக்கும்போது கவனியுங்கள். பேடை இருந்தால் அதோடு மெதுவாகக் கொஞ்சிக் குலாவும்; இல்லாவிட்டால் தனக்குத்தானே பேசிக்கொள்கிற பாணியில் கத்திக்கொண் டிருக்கும்.

ஏழைகளை யார் கவனிக்கிறார்கள்? அதே மாதிரி நம்மோடு இருக்கும் காக்கையை நாம் மதிப்பதில்லை, பாவம்! அது செய்கிற குறும்பு கொஞ்ச நஞ்சமா? வீட்டுக்காரர் அதன் இரைச்சல் தாங்காமல் அதட்ட வரும்போது ஏளனம் செய்கிறமாதிரி கத்தி அது ஆட்டம் காட்டுவதைப் பார்க்கவேண்டும்! இந்த வகையில் அண்டங் காக்கைக்குத்தான் அதிக பலம்; துணிச்சலுங்கூட. அது எந்த வீண் ஜோலிக்கும் போகாது; ஆனால் வலுச் சண்டைக்கு வந்தாலும் சும்மா விடாது.

அடுத்தபடி மரங்கொத்தி, வாலாட்டிக் குருவி, செம்போத்து இந்தமாதிரி பறவைகள் எப்போதும் நம்மோடேயே இருப்பவை.

கோடைக்காலம் நெருங்கியதும் குயில் இனத்தைச் சேர்ந்த பறவைகள் வர ஆரம்பிக்கும். அப்புறம்

மூலம்: ஸண்டே ஸ்டேட்ஸ்மன்,

வானத்திலேதான் எவ்வளவு வண்ண வண்ண
மான பட்சிகள்! அவைகள் வசந்தத்தின்
அழகுக்கு அழகு செய்கின்றன.

கீதம் இசைக்கும் அசல் குயிலே வந்து சேர்ந்து விடும். 'கூ கூ' என்று மேலே மேலே அது தீன சுரத்தில் கத்திக்கொண்டு போகும்போது நமக்குச் சகிக்காது. சட்டென்று அதன் குரல் உடைந்து சாரீரம் தடைப்படும். 'அப்பாடா! அதன் தொண்டை அடைத்தது' என்று நாம் எண்ணிக்கொண் டிருப்போம். உடனே மறுபடியும் பழையபடி கத்த ஆரம்பித்துவிடும். அஸ்ஸாம் தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர் அதைப்பற்றி ஒரு கதை சொல்லுவார்கள்: ஒரு மாமியார் தன் மருமகளைப் படாத பாடு படுத்தி வைத்தாளாம். அது தாங்காமல் மருமகள் தற்கொலை செய்துகொண்டாளாம். அவள் தான் அடுத்த ஜன்மத்தில் இப்படிக் குயிலாகப் பிறந்து, "பாப் கர் ஜாபோ, பாப் கர் ஜாபோ (அப்பா வீட்டுக்குப் போகவேண்டும், அப்பா வீட்டுக்குப் போகவேண்டும்)" என்று கத்துகிறாளாம்!

சமவெளியில் வசிப்பவர்களுக்கு இன்பம் தருவது சரத்காலம். கோடை போய் மழையும் ஓய்ந்து மலர்கள் குலுங்கும் காலம் அது. மணிப்புறா குர் குர் என்று கூவும். அது என்ன பிரமாதம்? தேன் உறிஞ்சியும் அந்த இனத்தைச் சேர்ந்த பறவைகளும் பாட ஆரம்பித்தால் எவ்வளவு ஆனந்தமாக இருக்கும் தெரியுமா?

புல்புல் பறவை வகையில் வெவ்வேறு நிறம் உண்டு. அதில் ஒரு சாதிக்குக் கன்னம் சிவப்பு; ஒன்றுக்கு வெளுப்பு; இன்னொன்றுக்கு வெள்ளைப் புருவம்; வேறொன்றுக்கு வாலின் கீழ்மட்டும் செந்நிறம் தெளித்திருக்கும். ஆனாலும் எல்லாம் ஒரே மாதிரி கவலை இல்லாமல் நாள் முழுதும் பாடிக்கொண்டிருக்கும். இன்னும் தலையில் மட்டும் ஆரஞ்சு நிறம் தீட்டிய பறவைகள், செந்நீலமான கன்னத்தோடு சில பட்சிகள் - இப்படி எத்தனையோ பார்க்கலாம்.

ஆனால் எல்லாவற்றையும்விட அழகு, ஈ பிடிக்கும் ஒரு வகைப் பறவைதான். அதில் ஒரு சாதிக்கு உடம்பு கருநீலம். தோள்பட்டையில் லேசான நீலம்

(ஆங்கிலம்), கல்கத்தா.

நீட்டியிருக்கும். இன்னொரு சாதி பச்சையும் நீலமும் கலந்தாற்போல் இருக்கும். ஆனால் இதற்குள்ளேயே உயர்ந்த சாதி ஒன்றில் பெட்டை, வெள்ளை கவுனும் சிவப்புக் கோட்டும் போட்டுக்கொண்ட மாதிரி காட்சி அளிக்கும். ஆண் இன்னும் நேர்த்தியாக இருக்கும். உடம்பு வெள்ளை நிறமாய்ப் பளபளவென்று ஜொலிக்கும். வாலிலிருந்து அரை கஜத்துக்கு இரண்டு நாடா வேறு தொங்கும்.

மழைநாளில் தோப்புக்களுக்குச் சோபை அளிக்கும் ஒரு வகைப் பறவையைப் பார்க்கலாம். அந்த இனத்தில் வயது வந்த ஆண் பறவை கறுப்பும் சிவப்பும் நீட்டி மழுமழுப்பாக இருக்கும். இந்தச் சாதியில் பெட்டையும் ஆண் குஞ்சுகளும் அப்படி அழகில் சேர்த்தியில்லை. சிவப்பும் வெளுப்பும் மஞ்சளும் கலந்த மாதிரி இருக்கும். வயது வந்த ஆண் அழகாக இருப்பதால் பெட்டைக்கு அதன் மேல்தான் மோகம் ஏற்படுமாம்; இளம் ஆண் நெருங்கினாலும் பெட்டை அதைக் கவனிக்காதாம். ஆனால் ஆணின் கர்வத்தைக் குலைப்பதுபோல் இயற்கை இந்த விஷயத்தில் ஒரு சூழ்ச்சியும் செய்திருக்கிறது. இந்தப் பறவைகளுக்கு எதிரி பைரி; ஆணில் சின்னதாவது நிழலில் பதுங்கித் தப்பித்துக் கொள்ளலாம்; வயது வந்த ஆண் சுலபமாகச் சிக்கிப் பைரிக்கு இரையாகிவிடும்.

மழைநாளில் வேலிகளில் கொண்டையோடு சில சிட்டுக்களைப் பார்க்கலாம். அவை சற்று நேரங் கூடச் சும்மா இருக்கமாட்டா. உதயத்திலிருந்து அஸ்தமனம் வரை கிக் கிக் என்று கத்திக்கொண்டே அப்படியும் இப்படியும் தத்திக் குதித்துப் பல்டி அடித்துக்கொண்டிருக்கும்.

சிலை வேண்டாம்

ராஸ்ஸினி என்ற இத்தாலிய சாகித்திய கர்த்தாவிடம் மிகுந்த அன்புகொண்ட பிரெஞ்சுப் பணக்காரர் சிலர், அவரைப் பெருமைப்படுத்துவதற்காக ஒரு சிலை அமைக்க விரும்பினார்கள்.

"அதற்கு எவ்வளவு பணம் பிடிக்கும்?" என்று கேட்டார் சாகித்தியகர்த்தா.

"ஒரு கோடி பிராங்க் பிடிக்கும்" என்று பதில் வந்தது.

"ஒரு கோடி பிராங்கா? என்னிடம் அதில் பாதி கொடுங்கள், போதும். சிலை வைக்கப்போகிற பீடத்தில் நானே ஏறி நின்றுவிடுகிறேன்" என்றார் ராஸ்ஸினி.

—பென்னெட் ஸெர்ப்.

மின்னலின் அளவு

வானத்தில் தோன்றும் ஒரே ஒரு மின்னல் ஐந்து மைல் நீளம் இருக்கலாம்; நூறு கோடி வோல்ட் சக்தி உள்ளதாக இருக்கலாம்; ஒரு செகண்டில் ஆயிரத்தில் ஒரு பகுதி நேரம் நீடித்திருக்கலாம்.

வாயும் நோயும்

இதுவரைக்கும் தெரிந்தமட்டும், மனிதனுக்கு வரும் வியாதிகளில் நூற்றுக்கு எண்பது, அவன் வாய் வழியாகவே உடம்பில் புகுந்துகொள்கின்றன.

—'ஸயின்ஸ் டைஜெஸ்ட்'

கேம்ப்ரிட்ஜ்

புரொபஸர் எச். எஸ். பென்னெட்

கலை, விஞ்ஞானம், இலக்கியம் இவைகளை வளர்ப்பவை சர்வகலாசாலைகள். உலகத்துச் சர்வகலாசாலைகளைப்பற்றிய இந்தத் தொடரில், முன் தடவை ஆக்ஸ்போர்டு பற்றிய கட்டுரையை வெளியிட்டோம். அதுதான் இங்கிலாந்தில் மிகப் பழமையானது. காலக்கிரமத்தில் அதற்கு அடுத்தது கேம்ப்ரிட்ஜ். பிரிட்டிஷ் மந்திரிகளில் பலரும் பல பிரபலஸ்தர்களும் காலஞ்சென்ற ஸரோஜினி தேவியும் இன்றைய நம் பிரதம மந்திரி நேருவும் இதில் பயின்றவர்கள்.

கேம்ப்ரிட்ஜ் சர்வகலாசாலை 1225-இல் தோன்றியது. முதலில், ஆர்வமும் ஆற்றலும் பெற்ற சில ஆசிரியர்கள் சேர்ந்து அங்கே கல்வி கற்பிக்கத் தொடங்கினார்கள். பல மாணுக்கர்கள் வந்து சேர்ந்தார்கள். இதன் பயனாக 1284 - இல் பீடர் ஹௌஸ் என்ற இடத்தில் ஒரு காலேஜ் எழுந்தது. 13, 14 - ஆம் நூற்றாண்டுகளில் பின்னும் பல நிலையங்களும் தோன்றின. 1596 - ஆம் ஆண்டுக்குள் 16 காலேஜுகள் முளைத்து விட்டன. அதன் பிறகு டௌனிங் காலேஜ் என்னும் ஆண்களின் காலேஜ் ஒன்றே ஒன்று மாத்திரம் யூனிவர்ஸிடியோடு இணைந்திருக்கிறது. அந்தக் காலேஜ் 1800-ஆம் வருஷம் தோன்றியது. 19 - ஆம் நூற்றாண்டில் பெண்கள் காலேஜ் இரண்டு ஏற்பட்டு யூனிவர்ஸிடிப் பிரசங்கங்களுக்கு மாணுக்கியர் வந்து கேட்டார்கள். ஆனாலும் 1946 லிருந்துதான் கேம்பிரிட்ஜில் பெண்கள் பூர்ண அங்கத்தினர்களாகும் உரிமை பெற்றார்கள்.

மத்தியகாலத்தில் கேம்ப்ரிட்ஜில் காலேஜ்களோடு பல ஹாஸ்டல்கள இருந்தன. பட்டம் பெறப் படிக்கும் மாணுக்கர்களுக்கு உறைவிடமாகவும், ஒன்று கூடிப் பயின்று பாடம் கற்றுக்கொள்ளும் இடமாகவும் அவை இருந்தன.

மாணுக்கர்களின் கூட்டம் அதிகமாகவே, ஒழுங்கு முறையில் சிக்கல்கள் ஏற்பட்டன. இதனால் கொஞ்சங் கொஞ்சமாக மத்திய இடத்து அதிகாரமும் நிர்வாகமும் வரவேண்டியது அவசியமாயிற்று. சான்ஸலர், பிராக்டர் முதலிய

காப்பிரைட்: பிரிட்டிஷ் இன்பர்மேஷன் ஸெர்விஸ், ஈஸ்டெர்ன ஹௌஸ் ரோடு, புது டில்லி.

வர்கள் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்கள். காலேஜ்கள் தோன்றத் தோன்றச் சட்ட திட்டங்களுக்கு ஆதரவளித்தார்கள்; காலேஜ்களுக்குள் தங்களுக்கு இயைந்த விதிகளையும் சம்பிரதாயங்களையும் ஏற்படுத்தி வற்புறுத்தினார்கள்.

வரவர ஏற்பட்ட சீர்திருத்தங்களால் இப்போது பிரசங்கங்களை ஏற்படுத்தல், பாடங்களைப் போதிக்க ஏற்பாடு செய்தல் என்பவற்றை யூனிவர்ஸிடி கவனிக்கிறது. காலேஜ்களோ மாணுக்கர்களின் உறைவிடம், உணவு, தினசரி வாழ்க்கைமுறை, நியமம் இவற்றைக் கவனிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு மாணுக்கனும் ஒவ்வோர் ஆசிரியருடைய நேரான மேற்பார்வையில் இருந்து வருகிறான். சங்கடம் வந்தால் மாணுக்கன் அந்த ஆசிரியரை அணுகி அதைப் போக்க வழி தேடுகிறான். அவனைப்பற்றிய ஏதாவது குற்றச்சாட்டு வந்தால் அதை ஆசிரியர் விசாரித்துத் தக்கது செய்கிறார். மாணுக்கனுடைய படிப்பு விஷயத்தில் துணைபுரிய மற்றோர் ஆசிரியரைக் காலேஜ் நியமிக்கும். ஒவ்வொரு வாரமும் ஒரு மணி நேரம் இருவரும் சந்திப்பார்கள். மாணுக்கன் தான் எழுதிய கட்டுரையைப் படித்துக் காட்டித் திருத்திக் கொள்வான். அது சம்பந்தமான விஷயங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்வான். அதோடு, யூனிவர்ஸிடிப் பிரசங்கங்களின் விஷயத்திலும் அவர் உதவியைப் பெறலாம்.

யூனிவர்ஸிடியில் உள்ள சொற்பொழிவாளர்கள் பெறுக்கான ஆசாமிகள். தங்கள் துறையில் நன்றாகக் கற்று ஆராய்ச்சி செய்யும் நிபுணர்கள். புதிய புதிய விஷயங்களெல்லாம் அவர்கள் ஆராய்ச்சிக்கு உட்படும். ஆகவே, அவர்கள் பிரசங்கத்தில் ஜீவன் இருக்கும். ரூதர்போர்டு, எட்டிங்டன், பார்கிராப்ட் முதலிய மேதாவிகள் மாணுக்கர்களோடு நெருங்கிப் பழகி ஆராய்ச்சி செய்கிறார்கள்.

திட்டமிட்ட பாடங்களோடுகூட வேறு வகையாகவும் அறிவு பெற வசதிகள் இருக்கின்றன. மூன்று வருஷகாலம் மாணுக்கர்கள் இங்கே வசிக்கிறார்கள். அடிக்கடி அவர்கள் கூடி விருந்துண்டும் கலந்து பழகிப் பேசியும் வருகிறார்கள். இப்படிப் பல ஊர்களிலிருந்து வந்து பல துறையில் பயிற்சி பெறும் மாணுக்கர்கள் ஒன்றுபட்டுப் பழகிப் பேசுவதனால் அவர்களுக்கு அறிவு விசாலமாகிறது; இந்தப் பழக்கத்தால் உண்டாகும் நன்மையை இவ்வளவுதான் என்று வரையறுத்துச் சொல்ல முடியாது. இது கேம்ப்ரிட்ஜின் சிறப்பு.

லண்டனிலிருந்து ஒருமணி நேரப் பிரயாண தூரத்தில் கேப்ப்ரிட்ஜ் இருக்கிறது. ஆகவே, மந்திரிகளும் பார்லிமெண்டு அங்கத்தினர்களும் தொழில் முதலாளிகளும் மதத் தலைவர்களும் தொழிலாளர் தலைவர்களும் பிறரும் இங்கே வந்து பிரசங்கம் செய்ய வசதியாக இருக்கிறது. இந்தப் பிரசங்கங்கள் பொதுவாகவோ, குறிப்பிட்ட சங்கத்தின் சார்பிலோ நடைபெறும். இந்தக் கூட்டங்களினால் நடைமுறை உலகத்தலைவர்களின் அபிப்பிராயங்களைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு மாணுக்கர்களுக்கு ஏற்படுகிறது. அரசியல், இலக்கியம், கலை முதலிய துறைகளில் அந்தத் தலைவர்களின் கருத்தை உணர்ந்துகொள்கிறார்கள். மாணுக்கர்களுக்

குத் தாங்களாகவே சிந்தித்துப் பார்க்கவும், கூட்டம் கூட்டவும், சமுதாய வாழ்க்கையில் சிறப்புறவும் ஊக்கம் உண்டாகிறது.

வீட்டை விட்டுச் சென்று, பெரியவர்களின் கட்டுப்பாட்டினுல் தடைபுருமல் ஒழுங்கான வாழ்க்கை முறையில் ஈடுபடுவதனுல், மாணுக்கர்கள் சுதந்தரமாக நிற்கும் நிலை பெறுகிருர்கள். வெறும் கல்வியறிவு பெறுவதோடு நில்லாமல் பல வகையிலும் வளர்ச்சி அடைகிருர்கள். இங்குள்ள கணக்கற்ற விளையாட்டுக்களிலும் பந்தயங்களிலும் ஈடுபடுகிருர்கள். கேம்ப்ரிட்ஜை விட்டு நீங்கும் மாணுக்கன் அறிவு வளத்தோடு பிற வளங்களும் பெற்று வெளிவருகிருன்.

விசேஷச் செய்தி!

ஒரு ரெயில்வே கம்பெனியின் மேலதிகாரி, 'ஸ்டேஷன் மாஸ்டர் ஒவ்வொருவரும் எந்தச் சின்ன விபத்து நேர்ந்தாலுங்கூட உடனுக்குடனே தெரிவிக்க வேண்டும்' என்று ஓர் அறிக்கை விடுத்தார். ஒரு நாள் கீழ்க்கண்டபடி ஒரு ஸ்டேஷன் மாஸ்டரிடமிருந்து முதல் செய்தி வந்தது:

"வண்டி போய்க்கொண் டிருக்கும்போது எஞ்சினுக்கு முன்னுல் ஓர் ஆள் விழுந்துவிட்டான்."

மேலதிகாரி மேலே என்ன செய்தி வரப்போகிறது என்று வெகுநேரம் காத்திருந்தார்.

மறுபடியும் அதைத் தொடர்ந்து வந்த செய்தி இதுதான்:

"எல்லாம் சரியாகப் போய்விட்டது. யாருக்கும் காயமில்லை. வண்டி பின்பக்கமாகப் போயிற்று; அவ்வளவுதான்."

—'ஹஸ்மார்', ஸ்வீடன்.

தந்திர வாழ்வு

இந்தப் பக்கத்தில் ஒரு மைனு இருந்தது. அது ஒரு வேலையும் செய்யாது. சும்மாத்தான் உட்கார்ந்திருக்கும். ஆனுலும் பூசணிக்காய்மாதிரி கொழுத்து இருக்கும். நடுப்பகல் ஆனதும் ஒரு சாமான் பட்டறைக்குப் பறந்து போகும். அங்கே வாசற்படிக்கு மேலே உள்ள அடுக்கில் சிலந்திக்கூடு ஒன்று இருந்தது. அதில் செத்த ஈ, எறும்பு இன்னும் என்ன என்னவோ பூச்சியெல்லாம் நிறையக் குவிந்திருக்கும். அவைகளை இந்த மைனு வயிறு புடைக்கத் தின்றுவிட்டு மறுபடியும் இங்கே வந்துவிடும்.

வர வரச் சிலந்திக்கூடு பெரிதாயிற்று; உள்ளே என்ன இருக்கிறது என்று தெரியாதபடி ஒட்டடை அதிகமாகிவிட்டது. ஒரு நாள் காலை வழக்கம் போல் மைனு அங்கே பூச்சி பிடிக்கப் போயிற்று: அப்போது ஒரு கறுப்புப்பூனை கப்பென்று பின்புறமிருந்து பாய்ந்தது. மைனுவின் தந்திர ஜீவனமும் ஒழிந்தது.

—'காயின மெஷின ஜர்னல்'

கண்ணுக்குத் தெரியாத ஒளி

டி. என். எஸ். ராகவாசாரி

நம் கண்ணால் பார்க்க முடியாததையெல்லாம் கண்டுவிடக் கூடிய அதிசயக் கிரணம் எக்ஸ்-ரே. அதைப்பற்றிய ரஸமான பல விவரங்களை இந்தக் கட்டுரை கூறுகிறது.

எக்ஸ்-ரே என்றதும், 'நமக்குப் புரியாத ஏதோ வித்தை' என்று பல பேர் எண்ணுகிறார்கள். ஆனால் உண்மையில் அது அப்படி ஒன்றும் பிரமாதமான விஷயம் அல்ல. பெரும்பாலும் ஆஸ்பத்திரிகளிலும் மற்ற வைத்தியசாலைகளிலும் மட்டுமே அதை உபயோகிப்பதால் அதைப்பற்றிப் பொது ஜனங்களுக்கு அதிகமாகத் தெரியவில்லை.

ஜெர்மனியில் உள்ள வர்ஸ்ட்பர்க் யூனிவர்ஸிடியின் பௌதிகப் பகுதியில் வில்ஹெம் கோன்ரட் ராண்ஜன் என்பவர் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தபோது இந்த அதிசயமான கிரணத்தைக் கண்டு பிடித்தார். ஓர் அமெரிக்க டாக்டர் அந்த விவரத்தை ரசமாக எழுதியிருக்கிறார்:

"1895 நவம்பர் 8-ஆம் தேதி. வர்ஸ்ட்பர்க் யூனிவர்ஸிடிக் கட்டிடத்திலுள்ள ஓர் இருண்ட அறையில் சுமார் ஐம்பது வயதான ஒருவர் ஏதோ ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார். அவர்தான் ராண்ஜன். உள்ளே காற்றுக்கூட இல்லாமல் சூன்யமான கண்ணாடி பல்பு ஒன்று அங்கே இருக்கிறது. பாட்டரியுடன் இணைத்த 'இண்டக்ஷன் காயிலை'ச் சேர்ந்த கம்பிகளை அந்த பல்போடு பொருத்தியிருக்கிறது.

எக்ஸ்-ரே கண்டுபிடித்த ராண்ஜன்.

இவைதான் அவரிடம் உள்ள கருவிகள்.

"இண்டக்ஷன் காயிலிலிருந்து பல்புக்குள் மின்சாரம் பாயும்போது மஞ்சளும் பச்சையும் கலந்த ஒரு வித ஒளி பரவுகிறது. கண்ணாடி முழுதும் பல வர்ண ஜாலங்கள் பொலிகின்றன. இந்த மாதிரி பல்புக்கு 'க்ரூக்ஸ் ட்யூப்' என்று பெயர். பேரியம் பிளாடினோ ஸயனைடு போன்ற உலோக சம்பந்தமான உப்பை ஒரு காகிதத்தின் மேல் பூசி இந்த பல்பிலிருந்து

காப்பிரைட் : பீப்பிள்ஸ் ஹெல்த் (ஆங்கிலம் : மே '49), சென்னை.

எக்ஸ்-ரே கருவி படம் எடுக்கும் விதம் இது. மேலே உள்ளது ட்யூப். கழித்தல் குறியிட்ட கம்பி வழியாக ட்யூபுக்குள் கரண்ட் சென்று கதோட் கிரணங்களை வெளியிடுகிறது. அந்தக் கிரணங்கள் புள்ளிக் கோடுகள் குறிப்பதுபோல் ஒரு முனைப்பட்டு, 'பி' என்ற தட்டில் தாக்குகின்றன. அதிலிருந்து எக்ஸ்-ரே கிரணங்கள் கிளம்பி வெளியே வந்து, கை வழியாகப் பாய்ந்து, கைக்குக் கீழே உள்ளே 'ஸி' பிளேட்டில் படுகின்றன. அதில் அப்படியே படம் விழுந்துவிடுகிறது.



வீசும் ஒளியில் காட்டினால், அந்தக் காகிதம் புதுவிதமாக ஒளிரும். ராண்ஜன் சற்று நேரம் அந்தக் க்ரூக்ஸ் ட்யூபையே பார்த்துக் கொண்டிருக்கிறார். பிறகு மின்சார ஓட்டத்தை நிறுத்திவிட்டு க்ரூகஸ் ட்யூபின்மேல் கறுப்பு அட்டை போட்டுச் சிறிதுகூட வெளிச்சம் வெளியே வராதபடி அதை மூடுகிறார். மறுபடியும் மின்சாரம் இயங்குகிறது. க்ரூகஸ் ட்யூபின் பக்கம் ஒரே இருட்டாக இருந்தும் அறையில் எங்கிருந்தோ ஒளி வீசுவது போல் அவருக்குத் தெரிகிறது. திரும்பிப் பார்க்கிறார். பேரியம் பிளாடினோ ஸயனைடு பூசிய காகிதம் மேஜைமீது கிடந்ததே, அதுதான் அப்படி ஒளி வீசுகிறது. அந்தக் காகிதத்தைத் தொலைவில் கொண்டு போய்ப் பார்க்கிறார். க்ரூக்ஸ் ட்யூபை மூடுவதற்கு முன் வீசினது போலவே இப்போதும் காகிதத்திலிருந்து ஒளி வீசிக்கொண்டிருக்கிறது. 'கண்ணுக்குப் புலப்படாத ஏதோ ஒரு கிரணம் கறுப்பு அட்டை போட்ட க்ரூக்ஸ் ட்யூபிலிருந்து வந்து உலோக உப்புப் பூசிய அந்தக் காகிதத்தின்மேல் விழுகிறது' என்ற உண்மை அப்போதுதான் அவருக்குத் தெரிகிறது. எதிர்பாராதபடி ஓர் அதிசயத்தை அவர் கண்டுபிடித்து விட்டார்! பிறகு கனத்த உலோகத் துண்டு ஒன்றை அந்தக் காகிதத்தின் முன் பிடித்துக்கொண்டு பார்க்கிறார். அதன் நிழல் காகிதத்தின் மேல் விழுகிறது. ஒரு புஸ்தகத்தையும் அப்படியே பிடித்துப் பார்க்கிறார். சற்று மங்கலாக நிழல் விழுகிறது. தம் கையைக் காகிதத்தின் முன் வைத்துப் பார்க்கிறார்; முன் பின் பார்க்காத அற்புதமாயிருக்கிறதே! இதென்ன, அவருடைய கை விரல் எலும்புகளின் நிழல் அங்கே தெரிகிறது!"

இந்தக் கிரணத்தைக் கண்டுபிடித்த பின் இரவு பகல் விடாமல் ராண்ஜன் பரிசோதனை செய்து

வந்தார். கண்ணுக்குத் தெரியா விட்டாலும் இந்தக் கிரணம் போட்டோ பிளேட்டுகளேயும் பில்ம்களேயுங்கூடப் பாதிக்கும் என்று தெரிந்தது. இந்தமாதிரி ஆராய்ச்சியில் க்ரூக்ஸ் முதலிய விஞ்ஞானிகள் முன்னே ஈடுபட்டிருந்தபோது போட்டோ பிளேட்டுகள் கெட்டுப் போனதற்கு இது தான் காரணம். ராண்ஜனைப் போல் அவ்வளவு கற்பனுசக்தி இல்லாததனுல் முன்னுலேயே அவர்களுக்கு இது புரியாமல் போயிற்று.

1895 - இல் கிறிஸ்துமஸ் விடுமுறையின்போது ராண்ஜன் இந்தப் புது விதக் கிரணத்தைப் பற்றி ஒரு கட்டுரை எழுதினுர். அதை அங்கே உள்ள விஞ்ஞான சங்கத்தில் படிப்பதென்று தீர்மானித்தார். ஆனுல் அதற்கு முன்னேயே, 1896 ஜனவரி 6-ஆம் தேதி உலகம் முழுதும் இந்தச் செய்தி எப்படியோ தந்தி மூலம் பரவி விட்டது.

உடனே சில பேர் ஒன்றுக்குப் பத்தாக விஷயத்தைப் பிரமாதப் படுத்திக் கதை திரித்துவிட்டார்கள். 'இனிமேல் எக்ஸ்-ரே புகாதபடி புதிய ஆடை கண்டுபிடித்தால்தான் பெண்களின் மானம் தக்கும்', 'காலேஜ் படிப்பு இனிமேல் சுலபந்தான். பிள்ளேகள் எவ்வளவு மூடர்களாயிருந்தாலும் பரவாயில்லே. அவர்கள் மூளேயில் எக்ஸ்-ரேயைச் செலுத்திப் பாடம், படம் எதை வேண்டுமானுலும் புகுத்தி விடலாம்' என்றெல்லாம் தாறுமாறுகச் சில பத்திரிகைகள் எழுதின. இதைப் படித்து விட்டு, 'எந்த இடத்திலும் எந்தச் சமயத்திலும் இந்தக் கிரணத்தைச் செலுத்திப் படம் எடுத்துவிட முடியும்போல் இருக்கிறது' என்று ஜனங்களுக்குள் ஒரு தப்பபிப்பிராயம் பரவிவிட்டது. அதிகமாகக் கூச்சப்படும் சில பெண்கள் இதைக் கேட்டு நடுங்கினுர்கள். இதுதான் சமயம் என்று அப்போது இங்கிலாந்திலுள்ள ஒரு துணி வியாபாரி எக்ஸ்-ரே புகாத உள்ளங்கிகள் தம் கடையில் கிடைக்கும் என்று விளம்பரம் செய்தார். ஐக்கிய அமெரிக்க நாட்டில் சில மாகாணங்களிலே, 'நாடகக் கொட்டகையில் பைனுகுலர் வைத்துக்கொண்டு பார்க்கும்போது அதில் எக்ஸ்-ரே செலுத்தக்கூடாது' என்று ஓர் அசட்டு மசோதாகூடக் கொண்டு வந்தார்களாம். இது நடிகைகளின் மானத்தைக் காப்பாற்றவா, பார்ப்பவர்கள் கெட்டுப்போகாமல் இருப்பதற்கா, எதற்கு என்றுதான் நமக்கு விளங்கவில்லே.

இந்தச் சமயத்தில் சில அறிவாளிகள் ஒன்று கூடி, 'உடலில் மறைந்துள்ள பல கோளாறுகளே அறிந்து கொள்ள இதை உபயோகிப்பது நல்லது' என்று தீர்மானித்தார்கள்.

ஒவ்வோர் ஆஸ்பத்திரியிலும் இந்த முறை அமலுக்கு வந்தது. முதலில் இப்படிப் படம் எடுக்க வெகுநேரம் பிடித்தது. சில வேளே ஒரு மணி நேரங்கூட ஆகுமாம்; அப்போது உடலின் உஷ்ணம் தாங்காமல் பில்மின்மேல் உள்ள பூச்சு உருகிக்கூடப் போய்விடுமாம். ஆனுல் நாளடைவில் அதிக அளவு மின்சார சக்தி, சிறந்த ட்யூப்கள், டிரன்ஸ்பார்மர்கள், எக்ஸ்-ரே ஒளியின் சக்தியை மிகுதியாக்கும் 'ஸ்க்ரீன்' முதலிய சாதனங்களின் உதவியால் இந்தக் கஷ்டத்தையெல்லாம் சமாளித்துவிட்டார்கள். உடலில் உள்ள எந்தப் பாகத்தையும் - மூளேயைக்

கூட - இப்போது மிகவும் விரைவில் தெளிவாய்ப் படம் எடுத்து விடலாம். ஆனால், அதோடு பரந்த அநுபவமும், உடலின் அமைப்பைப் பற்றிய ஆழ்ந்த அறிவும் இருந்தால் தான் அதைச் சரியானபடி புரிந்து கொள்ள முடியும்.

ஆரம்பத்தில் முறிந்த எலும்பு, உடலுக்குள் புகுந்த துப்பாக்கி ரவை இவைகளைக் கண்டுபிடிக்க எக்ஸ் - ரேயை உபயோகித்து வந்தார்கள். இப்போது வியாதிகளைக் கண்டு பிடித்துக் குணப்படுத்தவும் அது பயன்படுகிறது; சுவாசகோசம், இருதயம், பித்தப்பை, குலை, குடல், மூத்திரப்பை, மூளை, பிரசவம் ஆகாமல் வயிற்றில் இருக்கும் குழந்தை இந்த மாதிரி நுட்ப மான அமைப்பு எதையும் வைத்தியர்கள் ஆராய முடியும். முன்பெல்லாம் நோய் முற்றி வலி தாங்க முடியாமல் போன பிறகுதான் வைத்தியனைக் கூப்பிடுவது வழக்கம். ஆனால் வரவர ஜனங்களுக்கு முன் ஜாக்கிரதையாக இருந்து உடம்பைக் கவனித்துக் கொள்ள வேண்டு மென்று புரிய ஆரம்பித்திருக்கிறது.

தற்கால வைத்திய முறையைப் பெரும்பாலும் எக்ஸ் - ரே ஆராய்ச் சியை ஆதாரமாகக் கொண்டுதான் நிர்ணயித்திருக்கிறார்கள். ஆகவே, நம் உடல்நிலை சரியாக இருந்தா லும் வருஷத்துக்கு ஒரு தரமாவது தகுந்த வைத்தியரிடம் காட்டி உடம்பைப் பரிசோதித்துக் கொள் வது நலம். அந்தச் சமயத்தில் சுவாசகோசம், பல் இவைகளை எக்ஸ் - ரே படம் எடுத்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

பல காரியத்துக்கு உதவும் உப்பு

சாதாரண உப்பை நாம் ருசிக்காகத்தான் சகஜமாக உப யோகிக்கிறோம். ஆனால் இன்னும் எவ்வளவோ விஷயத்துக்கு அது பயன்படுகிறது. அவ்வப்போது ஒரு சிட்டிக்கை உப்பைப் போட்டுத் தண்ணீர் குடித்தால் உடம்புக்குத் தெம்பு உண்டாகும்; வேர்வை விடுவதால் உடம்பிலுள்ள சத்துக் குறைந்து போவ தற்கு அது ஈடு செய்யும்.

முரட்டுக் கம்பளித் துண்டு ஒன்றை வெந்நீரிலோ குளிர்ந்த நீரிலோ நனையுங்கள். உப்பைக் கலந்து கம்பளித் துண்டால் உடம்பைத் தேய்த்துவிட்டு உடனே நன்றாக ஸ்நாநம் செய்யுங் கள். உடம்புக்கு மிகவும் ஆரோக்கியமாக இருக்கும்.

சோடா பைகார்போனேட் முக்கால் பங்கும் சாதாரண உப்பு, கால்பங்கும் கலந்து பல் துலக்கினால் பல், ஈறு இரண்டுக் கும் உறுதி. கொஞ்சம் உப்பைத் தண்ணீரில் கரைத்து அந்த நீரினால் பச்சைக் காய்கறிகளைக் கழுவுவது நல்லது; அவைகளின் மேலே இருக்கும் பூச்சி முட்டை, அழுக்கு எல்லாம் போய்விடும். தோட்டத்திலுள்ள செடி கொடிகளுக்குப் பூச்சி பிடித்தால் அவைகளின்மேல் உப்பு நீரைத் தெளியுங்கள். பூச்சி புழுக் களைக் கொல்வதற்குக் கைகண்ட மருந்து உப்பு.

—'பிரிட்டானியா அண்ட் ஈவ்.'



பரமஹம்ஸர்

சமாதி அநுபவம்: ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்ஸர் காந்தியடிகளைப் போலவே தம் வாழ்க்கையில் எதையும் ரகசியமாக வைத்துக் கொள்ளவில்லை. தம் மனத்தில் பட்டவற்றையும், தாம் பெற்ற அநுபவத்தையும் குழந்தையைப் போல உள்ளது உள்ளபடியே சொல்லிவிடுவார். சமாதி இன்பம் எப்படி இருக்கும், எந்த எந்த நிலைகளைத் தாண்டி எப்படிக் குண்டலினி சக்தி மேல் எழுகிறது என்பவற்றை உடனிருக்கும் பக்தர்களுக்குச் சொல்லவேண்டும் என்று ஆசைப் பட்டார்.

குண்டலினி சக்தி மேலே எழத் தொடங்கியது. ஏதோ ஒரு சக்தி காலிலிருந்து தலைக்கு எழுவது போன்ற அநுபவம் அவருக்கு உண்டாயிற்று. ஹிருதயத்துக்கு அந்தச் சக்தி வரும்போது மிகவும் அற்புதமான அநுபவம் ஏற்பட்டது. அப்போது அதைச் சுட்டிக் காட்டி அந்த அநுபவத்தையும் சொன்னார். படிப்படியாகக் குண்டலினி எழும்பி வருகையில் உண்டாகும் இன்பத்தைச் சொல்லிக்கொண்டே வந்தார். ஐந்து ஆதாரங்களைக் கடக்கும் வரையில் அவரால் அப்படிச் சொல்லிக்கொண்டு வர முடிந்தது. தொண்டையைக் கடந்து புருவ மத்தியாகிய ஆஜ்ஞை என்னும் ஆதாரத்துக்கு வந்தபோது அவர் தம்மையே மறந்தார். சமாதியில் ஆழ்ந்துவிட்டார். சமாதி கலைந்து தெளிந்தால் அந்த நிலையைப்பற்றிச் சொல்லவேண்டுமென்று சிரமப் பட்டு முயல்வார். வாய் திறப்பார். மீண்டும் சமாதியில் ஆழ்ந்து விடுவார். எத்தனையோ முறை அந்தக் கடைசி நிலையை விளக்க அவர் விரும்பியும் முடியவில்லை. தம் அன்பர்களிடம் அவருக்குப் பேசவே முடியாது. கண்களில் நீர் ததும்பும். "எல்லாவற்றையும் ஒளிக்காமல் சொல்லிவிட வேண்டுமென்று ஆவல்தான். ஆனால் தொண்டையைக் கடந்துவிட்டால்



வாழ்வும் வாக்கும்

கடவுளை நேருக்கு நேரே கண்ட மகான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர். அவர் வாழ்வு சத்திய ஜோதி; வாக்கு ஜீவ அமிர்தம்.

என்னால் சொல்ல முடியவில்லையே! என் தாய், மகாகாளி சொல்ல முடியாமல் பண்ணிவிடுகிறாள். என் மென்னியைப் பிடித்துவிடுகிறாள்" என்று சொல்லித் தம் ஆராமையைக் காட்டுவார். (வாழ்வு)

தெய்வ சித்தம்: ஒரு மனிதன் மலையின்மேல் குடிசை கட்டிக் கொண்டு வசித்து வந்தான். மிகவும்

ஆர்வத்தோடு அதை அலங்காரம் செய்திருந்தான். தன் கைப்படப் பல வேலைகளைச் செய்தான். அவனுடைய பொருளும் காலமும் நிறையச் செலவாயின. அவ்வளவு சிரமப் பட்டுக் கட்டிய குடிசை எப்போதும் சாசுவதமாகத் தான் இருந்து வசிக்க உதவும் என்று மனப்பால்

குடித்துக்கொண் டிருந்தான், அந்த மனிதன்.

ஒரு நாள் பெரிய புயல் காற்று அடித்தது. மலையின்மேல் இருந்த குடிசை ஆட்டம் கண்டது. அதைக் கட்டின மனிதனுக்குப் பகீர் என்றது. "ஐயோ! எத்தனை ஆசையாகக் கட்டினேன்! வாயு பகவான் இப்படி அலங்கோலப்படுத்த ஆரம்பிக்கிறாரே!" என்று புலம்பினான். பிறகு வாயு பகவானை நோக்கி, "சுவாமி! அடியேனுடைய குடிசையைச் சிதைக்காமல் திருவருள் புரிய வேண்டும்" என்று பிரார்த்தித்தான். வாயு பகவான் அவன் பிரார்த்தனையைக் காதில் வாங்கியதாகவே தெரியவில்லை. மேலும் புயல் வீசிக்கொண் டிருந்தது.

மறுபடியும் அந்த மனிதனுக்கு ஏதோ ஒரு யோசனை தோன்றிற்று. "எம்பெருமானே, இதை உம்முடைய குமாரராகிய ஹநுமானுக்கு அர்ப்பணம் பண்ணப் போகிறேன். ஆகவே, இதைக் காப்பாற்றியருள வேண்டும்" என்றான். புயல் நின்ற பாடில்லை.

பின்னும் அவனுக்கு ஒரு தந்திரம் உதயமாயிற்று; "வாயுபகவானே, இதை ஸ்ரீ ராமசந்திரமூர்த்தியின் ஆலயமாக வைக்கப் போகிறேன். அவர் உம்முடைய குமாரரின் பிரபு அல்லவா? இதைச் சிதைக்காமல் காப்பாற்ற வேண்டும்" என்றான். புயல் ஓயாமல் அடித்தது. குடிசை விழுந்து விடும் நிலை வந்தது. தன்மேல் விழுந்தால் தன் உயிருக்கே ஆபத்து என்ற அச்சம் அவனுக்கு உண்டாகவே, வெளியே ஓடி வந்தான். "இந்தக் குடிசை எக்கேடு கெட்டால் எனக்கென்ன? இருந்தால் இருக்கட்டும், போனால் போகட்டும்" என்று சொல்லிச் சமாதானம் செய்துகொண்டான்.

நம்முடைய சொந்த முயற்சியால் வேறொருவருடைய பெயரையோ ஸ்தாபனத்தையோ அழியாமல் காப்பாற்றுவோம் என்று எண்ணுவது இதைப் போன்றதுதான். தெய்வசித்தம் இருந்தால் அழியாமல் இருக்கலாம்; அழிவதுதான் கடவுள் திருவுள்ளம் என்றால் யாராலும் அதைக் காப்பாற்ற முடியாது. (வாக்கு)

உண்மைத் துறவு: ஒரு புருஷனும் மனைவியும் துறவிகளாகித் தல யாத்திரை செய்து வந்தார்கள். ஒரு நாள் அவர்கள் இருவரும் ஓர் ஊரை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார்கள். வழியில் வைரக்கல் ஒன்று ஒளிவிட்டுக்கொண்டிருந்தது. அதைக் கண்ட புருஷன், பின்னே வரும் தன் மனைவியின் வைராக்கியத்தைக் குலைத்து விடுமோ என்று எண்ணி அதைப் பூமியிலே புதைத்து விடக் காலாலே நிலத்தைக் கிண்டிக்கொண்டிருந்தான். பின்னாலே வந்துகொண்டிருந்த மனைவி அவனை அணுகினாள். "என்ன கீழே காலால் கிண்டிக்கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டாள். அவன் உண்மையைச் சொல்லாமல் மழுப்பினான். விஷயத்தை ஒருவாறு கவனித்துத் தெரிந்துகொண்ட அந்தச் சந்நியாசினி சிரித்தாள்; "வைரத்தைக் கண்டுவிட்டு அதை மண்ணிலே மறைக்க முயல்கிறீர்களே! வைரத்துக்கும் மண்ணுக்கும் உள்ள வித்தியாசத்தை நீங்கள் இன்னும் மறக்கவில்லையே! துறவு வேஷம் பூண்டு வந்துவிட்டீர்களே!" என்று இடித்துக் கூறினாள். (வாக்கு)

உத்தரவை மீறும் வீரனுக்குப் பரிசு!

ராணுவ நீதிப்படி மேலதிகாரிகளின் உத்தரவுக்குக் கீழ்ப்படிவதுதான் மிகவும் முக்கியம். இல்லாவிட்டால் ராணுவ விதிப்படி கடுமையான தண்டனை கிடைக்கும். இதற்குப் பயந்து எவரும் துணிச்சலான எந்தக் காரியமும் செய்ய முன் வருவதில்லை. ஆனால் ஆஸ்திரியாவில் முடியரசு இருந்தபோது, இப்படி உத்தரவை மீறி அதன் மூலம் சண்டையிலே ஜயித்த ராணுவ உத்தியோகஸ்தர்களுக்கெல்லாம் மகாராணியின் பதக்கம் பரிசாகக் கிடைத்தது! உலக சரித்திரத்திலேயே அது அபூர்வமான கௌரவம்.

—'வோர்ல்ட் ரெவ்யூ', லண்டன்.

ஒன்றும் ஒன்றும் பத்து

‘இரண்டும் இரண்டும் எத்தனை என்று கேட்டால்கூடக் கூட்டத் தெரியாதவன்’ என்று யாரையும் நாம் இனிக் கேலி செய்யக்கூடாது. ஏனென்றால், இந்தக் காலத்தில் இருக்கும் எத்தனையோ கணித சாஸ்திர மேதாவிகளே ஒன்றுக்குமேல் கூட்டுவதில்லை. அவர்கள் சில யந்திரங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அவைகள் எவ்வளவு பெரிய கூட்டல் கணக்குகளையும் கூட்டி விடை அளித்து விடுகின்றன. நமக்கு ஒரு வாரம் பிடிக்கக்கூடிய கணக்குகளையெல்லாம் அவை ஐந்தே நிமிஷத்தில் கூட்டி முடித்துவிடுகின்றன.

> **நமக்கு இது ஆச்சரியம். ஆனால், கணித சாஸ்திரிகளுக்கு ஆச்சரியம். அல்ல; யந்திரங்களுக்கும் ஆச்சரியம் அல்ல. கட்டுரைக்கு ஓர் ஆங்கிலப் பத்திரிகையில் உள்ள செய்திகள் ஆதாரம்.**

மிகவும் சிக்கலான கணித சூத்திரங்களுக்கு விடை கண்டுபிடிப்பதற்காகவே முதலில் அந்த யந்திரங்களை அவர்கள் அமைத்தார்கள். இப்போது அவை அநுபவத்தில் தேவைப்படும் பலவிதக் கணக்குகளையும் செய்துவிடுகின்றன. மார்க்கட் விலைவாசி, ஆயுள் முதலிய பல வகைப் புள்ளி விவரங்களை ஆராயவும், பெரிய பெரிய வியாபாரக் கணக்குகளைச் செய்து முடிக்கவும் உபயோகப்படுகின்றன. ஆனால், நமக்கும் இந்த யந்திரங்களுக்கும் ஒரு பெரிய வித்தியாசம். எண்களைப்பற்றி நாம் கொண்டிருக்கும் அபிப்பிராயத்துக்கும் இவை வைத்திருக்கும் மதிப்புக்கும் சம்பந்தமே இல்லை.

நமக்கு மூல எண்கள் ஒன்பதும் ஒரு பூஜ்யமும் ஆகப் பத்து உண்டு. இந்த யந்திரங்களுக்கோ ஒன்று, பூஜ்யம் என்ற இரண்டு எண்களே போதும். இது நமக்கெல்லாம் விசித்திரமாய்த் தோன்றும். ஆனால் கணித சாஸ்திரிகளுக்கோ இது அப்படி ஏதும் விசித்திரம் அல்ல. இரண்டு என்று குறிக்க ‘2’ என்ற குறிதான் வேண்டும் என்பது என்ன அவசியம்? ‘10’ என்றே இரண்டை ஏன் குறிக்கக்கூடாது? இப்படி ‘1’, ‘0’ என்ற இரண்டே குறிகளைக் கொண்டு எந்த எண்ணையும் குறிக்கக்கூடிய புதிய எண் முறை ஒன்றையே கணித மேதாவிகள் வகுத்துவிட்டார்கள்.

கணித யந்திரங்களைச் சிருஷ்டிக்கும்போதுதான் அவர்கள் இப்படி வகுத்தார்கள். ‘1’, ‘0’ என்ற இரண்டே எண் குறிகளைக்கொண்டு, கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல், வர்க்கம், மூலம் ஆகியவற்றையும் இன்னும் பள்ளிக்கூடத்தில் பல வருஷகாலம் என்ன என்ன சொல்லிக் கொடுக்கிறார்களோ அத்தனை கணக்குகளையும் செய்து முடித்து விடக்கூடிய முறை ஒன்றைக் கணித சாஸ்திரிகள்

அமைத்துக்கொண்டார்கள். ஏன் அவர்கள் இப்படிப் பழைய எண் சம்பிரதாயத்தையே புரட்சிகரமாய் மாற்றவேண்டும்? அதற்கு ஒரு முக்கியமான காரணம் உண்டு. ஒன்றுக்கொன்று வித்தியாசமான வேறு வேறு இயக்கங்களின் மூலம் பத்து எண்களைக் குறிக்க யந்திரத்தில் ஏற்பாடு செய்வது சிக்கலான காரியம். அதைவிட '1', '0' என்ற இரண்டே குறிகளை யந்திரத்தில் வைத்துக்கொள்வது மிகவும் சுலபம். எலெக்டிரிக் ஸர்க்கூட்டுகள் அடங்கியது இந்த யந்திரம். கரண்டு ஓட்டம் '1' என்பதைக் குறிக்கும்; கரண்டு நிற்பது '0' என்பதைக் குறிக்கும்.

இரு குறி எண்முறை என்று இதைக் கணித சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். நமது பழைய முறையில் உள்ள முதல் 10 எண்களையும் இந்த முறையில் பின்வருகிறபடி குறிக்கிறார்கள்:

1	...	...	...	1
2	...	...	...	10
3	...	...	...	11
4	...	...	...	100
5	...	...	...	101
6	...	...	...	110
7	...	...	...	111
8	...	...	...	1000
9	...	...	...	1001
10	...	...	...	1010

நம் குழந்தைகளுக்குக்கூடப் பழைய தசாம்ச எண் முறையைச் சொல்லிக் கொடுக்காமல், முதலிலிருந்தே இந்த இரு குறி எண் முறையைச் சொல்லிக் கொடுத்து விடமுடியுமாம். அப்போது அவர்கள் ஏராளமான கூட்டல், பெருக்கல் வாய்பாடுகளைக் கற்கும் உபத்திரவம் இராதாம். ஆனால், அதில் ஒரே ஒரு பெரிய சிரமம் இருக்கிறது. இந்த இரு குறி எண்களெல்லாம் மிக மிக நீளமாக இருக்கின்றன. உதாரணமாக நமது '100' என்ற எண்ணைக் குறிக்க இந்த முறையில் '1100100' என்று எழுதவேண்டும்; '75' என்பதைக் குறிக்க '1001011' என்று எழுதவேண்டும். பென்ஸில் ஓட்டும் நமக்கு இது பெரிதும் தொல்லையாகும். ஆனால், யந்திரங்களுக்கு என்ன கவலை? இன்னும் இரண்டு வால்வுகளையும் கொஞ்சம் கம்பிகளையும் இணைத்துவிட்டால், அவை பாட்டுக்குக் கவலையில்லாமல் எவ்வளவு நீளமான எண்ணையும் கையாளுகின்றன.

புழுவுக்குச் சமாதி

நிலக்கரி எடுத்துப் போகும் ஒரு பாதையில் ஜன நடமாட்டம் இராத இடம். ஒரு பூச்சி அங்கே ஒரு சிறிய குழி தோண்டிக்கொண்டிருந்தது; எலும்புத் துண்டை நாய் மூடி மறைக்கும்போது முன்னங்காலால் தோண்டுமே, அதே மாதிரி இதுவும் செய்தது. பிறகு கொழுத்த பச்சைப்புழு ஒன்றைத் தன் முன்னங்காலால் பிடித்துக்கொண்டு இழுத்து வந்து அந்தக் குழியில் தள்ளிப் போட்டு மூடிவிட்டது. பிறகு கீழே கிடந்த ஒரு கரித்துண்டை எடுத்துச் சமாதியின்மேல் கல் நடுவது போல் வைத்துவிட்டுப் பறந்து போய்விட்டது.

—எம். ஜே. ஹேஸ்லர், 'கண்ட்ரிமான்.'

நம் தெய்வ ரூபங்களெல்லாம் இயற்கை நுட்பங்களின் உருவகமே. அதற்கு—

வேதமே ஆதாரம்

ஆ. கோபாலராவ்

நம் தேசத்தின் நாகரிகத்தை, மொஹெஞ்ஜதடோ, ஹரப்பா இந்தப் பழைய நகரங்கள் தோன்றிய காலத்திலிருந்து கணக்கிடலாம் என்று பல அறிஞர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். அந்த நகரங்கள் ஏறக்குறைய ஐயாயிரம் வருஷங்களுக்கு முந்தியவை என்று ஆராய்ச்சியாளர் தீர்மானித்திருக்கிறார்கள். அந்தக் காலத்திலேயே நம் நாட்டில் சிற்பத் தொழிலின் நுண்ணறிவு உச்ச நிலையை அடைந்திருந்தது; கலையின் கற்பனையில், சமிக்ஞைக் குறிப்புக்களை உபயோகிக்கும் வழக்கம் அப்போதே ஏற்பட்டுவிட்டது. அங்கே கிடைத்த சிற்பங்களிலிருந்து இந்த உண்மை தெளிவாகத் தெரிகிறது.

இந்த நகரங்களில் சுகமாக வசிக்கச் செங்கல் வீடுகள் கட்டியிருந்தார்கள்; கைத் திறமையை வெளியிடும் பொன் நகைகள், நாணயங்கள் எல்லாம் இங்கே செய்து வந்தார்கள். இங்கே கிடைக்கும் முத்திரை முதலியவை இன்றும் உரு மாறாமல் இருக்கின்றன.

ஒரு சித்திரம் மட்டும் அறிஞர்களிடையே கலவரததை உண்டாக்கியது. அது கூர்மாசனத்தில் உட்கார்ந்திருக்கும் ஒரு யோகியின் உருவம். அவருக்குத் தலைகள் மூன்று; உச்சியில் இரண்டு கொம்புகள். அவரைச் சுற்றிலும், யானை, காண்டாமிருகம், நீர்க் குதிரை, புலி இவை இருக்கின்றன; கை கட்டி வாய் புதைத்த மனிதர்களும் சிலர் அவரைச் சூழ்ந்திருககிறார்கள். இந்தச் சித்திரம் பசுபதியின் உருவத்தைப் பல விதத்திலும் ஒத்திருக்கிறதென்று அறிஞர் மார்ஷல் சொல்லியிருககிறார். இதை ஆதாரமாகக் கொண்டே ஆராய்ச்சியாளர் சிலர், வேதங்கள் மொஹெஞ்ஜதடோ, ஹரப்பா நகரச் சிற்ப காலத்துக்கு முன்பே ஏற்பட்டிருக்க வேண்டுமென்று அபிப்பிராயப்பட்டார்கள்.

எப்படியும் அந்தக் காலத்து நாக ரூபங்கள், அம்பிகையின் சிற்பங்கள், மரங்கள், தேவதைகள், பசுபதியின் உருவம் இவற்றிலெல்லாம் ஏதோ ஒரு குறிப்பு அடங்கியிருப்பது தெளிவாகத் தெரிகிறது; ஆனால் அதை இப்போது புரிந்துகொள்ள முடியவில்லை.

சமீபத்தில் நர்மதை நதிக்கரையில் சிதிலமடைந்த மற்றொரு நகரம் அகப்பட்டது. அதைப்பற்றி, "அநேகமாக இது ஐம்பதாயிரம் வருஷங்களுக்கு முன் பரசுராமர் ஜயித்த கார்த்தவீர்யார்ஜுனனுடைய மாஹிஷ்மதீ நகரமாக இருக்கலாம். இங்கே உள்ள சிற்பத்தையும் சித்திரங்களையும் பார்த்தால் மொஹெஞ்ஜதடோ ஹரப்பா நகரத்துக்குப் பின்வாங்காத நாகரிகம்

காப்பிரைட்: பாரதி (தெலுங்கு), சென்னை.

ஒன்று இருந்திருப்பதாகத் தெரிகிறது'' என்று சில ஆராய்ச்சியாளர் சொல்லுகிறார்கள்.

நம் தேசக் கலைகளுக்கு ஆதாரம் வேதங்களே. கி. மு. சுமார் 500 - இல் 'யாஸ்கர்' என்ற மகா மேதாவி ஒருவர் 'நிருக்தம்' என்ற நூலில், வேதங்களில் வருணித்த தெய்வ உருவங்களைப் பற்றி எழுதியிருக்கும் விவரம் இது:—.

அஜஏகபாதர்: ருக் வேதத்தில் முக்கிய தேவதையை அஜ ஏகபாதர் அல்லது 'ஒற்றைக் கால் ஆடு' என்று உருவகம் செய்திருக்கிறார்கள். மின்னலின் சக்தியையே இப்படிக் குறிப்பிடுவதாகத் தற்கால ஆராய்ச்சியாளர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

அநந்தன்: உலகத்தை ஆக்கிரமித்திருக்கும் காற்றின் சூழ்நிலையை வரையறுத்துச் சொல்லும்போது 'சமுத்திரத்தின் உட்புறத்தில் ஒரு தேவதை சர்ப்ப ரூபத்துடன் வசிக்கிறது' என்று சொல்லியிருக்கிறது. உண்மையாகவே மகா சமுத்திரத்தின் அசைவுகள் உலகத்தின் காற்றுச் சூழ்நிலையை ஓரளவு நிர்ணயிக்கின்றன. அதனால் அந்த மகாசக்தியை அநந்தனாக அந்தக் காலத்தில் சொல்லியிருப்பது ஆச்சரியம்.

ருத்திரன்: முதலில் வேதங்களில் இவரைப்பற்றி வருகிறது; பிற்காலத்திலும் பல கலைகளுக்கும் மதப் பிரிவுகளுக்கும் அந்த ஆதி உருவமே காரணமாக இருக்கிறது. ருத்திர ரூபம் வேத காலத்துக்கு முந்தியதாய் இருந்திருக்க வேண்டுமென்று அறிஞர் மார்ஷல் சொல்லுகிறார். எப்படி இருந்தாலும் வேத காலத்துக்குப் பின் ருத்திர மூர்த்திக்குப் பயங்கரத் தோற்றம் தெளிவாக ஏற்பட்டுவிட்டது. அவரையும் அக்கினியையுங்கூட ரிஷபமாக உருவகப்படுத்தியிருக்கிறார்கள் வேதகர்த்தாக்கள்; பிரளயத்திலும் அழிவிலும் ருத்திர ரூபத்தைக் கண்டார்கள்; பிரளய மருத்துக்கள் காற்று உருவில் ருத்திர குமாரர்களாய் அவரைச் சூழ்ந்திருப்பதாகப் பாவித்தார்கள். ஆகாயமாகிய சட்டியைப் பிளந்து, உலகம் முழுவதையும் கிழித்துப் 'பளார்' என்ற ஓசையுடன் காது செவிடுபடப் பூமியின் மேல் விழும் இடிகளே ருத்திர மூர்த்தியின் அம்புகள் ஆயின. இந்த ருத்திர சிவனே 'பசுபதி' என்று வேதம் கோஷிக்கிறது; காரணம் இதுதான்; லயமே சிருஷ்டிக்கு முதல் என்னும் ரகசியத்தை அந்த ஆதி காலக் கலைஞர்கள் கண்டு பிடித்துவிட்டார்கள்.

நடராஜர்: ருக் வேதத்தில் ஓர் இடத்தில், ''வஜ்ரபாஹு, அதாவது இடி போன்ற கைகள். மிருதுவான வயிறு. 'டங்'கென்று ஒலிக்கும் குரல். அழகிய மூக்கு. மாநிறம்'' என்று அவர் உருவத்தைத் தெளிவாக வர்ணித்திருக்கிறது. இதைக் கொண்டு அமைத்ததே நடராஜ சிற்பம். குற்றமற்ற சிற்பங்களில் அழகை மட்டும் அல்லாமல் தொனியைக்கூட நாம் தெளிவாய்க் கேட்கலாம். உண்மையாக நாட்டிய முத்திரையை வரையறுத்த சிற்பம் ஒன்றைக் காணும்போது அதற்கு முற்பட்ட முத்திரைகள், பிற்பட்ட முத்திரைகள் எல்லாம் நம் கண் முன் தோன்றும்; அதோடு நாட்டியத்துக்கு இசைந்த பாட்டு, கிண்கிணி நாதம் இவைகளும் எதிரொலிப்பதை நம் உள்ளறிவு உணரும். சிறந்த சிற்பத்தின் லட்சணம் இது.

அதை அறிந்த வேதகர்த்தாக்கள் சித்திரங்களை வர்ணிக்கும்போது உருவத்தின் வர்ணனையைக் கொண்டே குரல் இப்படி இருக்கும் என்று நிர்ணயித்துவிடுவார்கள். நம் திவ்ய பூமியில் வேத காலத்திலேயே சிற்பக் கலை உச்ச நிலையை எட்டிவிட்டது.

ருத்திரமூர்த்திக்குப் பல உருவங்கள் உண்டென்று தெரிகிறது. காலப் போக்கில் பல கலைஞர்களும் கவிஞர்களும் மத ஸ்தாபகர்களும் கற்பித்த ருத்திர ரூப பேதங்கள் கணக்கில் அடங்காதவை.

வருணன்: இப்படியே ருக் வேதத்தில் வருணன் கவசம் அணிந்திருப்பதாக வர்ணித்திருக்கிறார்கள். அவனைச் சுற்றி ஒற்றர்கள் கூடியிருப்பார்கள் என்று சொல்லியிருக்கிறது. யாராலும் காண முடியாத வருணபகவானை, 'அடிப் பாகத்தில் கோடானு கோடி வஸ்துக்களையும் ரத்தினங்களையும் ஜீவராசிகளையும் அடக்கி மூடி வைத்திருக்கும் சமுத்திரம்' என்று சொல்லுவதில் எவ்வளவு தெளிவான பாவம் அடங்கியிருக்கிறது! மற்றோர் இடத்தில் ஆபரணங்கள் அணிந்த மருத்துக்கள் வருணனைச் சூழ்ந்திருப்பதாகச் சொல்லியிருக்கிறது.

யாகத்தின் அதிதேவதை: ருக் வேத காலத்தில் சொல்லியிருக்கும் யக்ஞக்ரதுவின் உருவக் கற்பனை இந்தக் காலத்துக்கு விசித்திரமாகத் தோன்றும். யக்ஞத்தின் அதிதேவதை, இரண்டு தலைகள் நான்கு கொம்புகளோடு முக்காரம் போடும் ரிஷபம் என்று சொல்லியிருக்கிறது. இதை மூன்று வளைவு (திரிபங்கி) உருவில் கட்டியிருப்பார்களாம். மகா மேதாவியாகிய யாஸ்கர் இதைத் தெளிவாக வியாக்கியானம் செய்திருக்கிறார்: "நான்கு கொம்புகளும் நான்கு வேதங்கள். 'பிராயணீய, உதயனீய' என்ற இரண்டு தலைகளும் இரண்டு இஷ்டிகள்; மூன்று கட்டுக்களும் மந்திரம், கல்ப ஸூத்ரம், பிராம்மணர்கள் இவைகளைக் குறிக்கின்றன. முக்காரம்: வேதகோஷம்." மேல்நாட்டு ஆராய்ச்சியாளர்கள் ருக்வேத காலத்தில் மற்ற வேதங்கள் இருக்கவே இல்லை என்று அடித்துப் பேசுவது இந்த வர்ணனைக்குப் பின்னும் ஆதாரம் கொடுக்கிறது. ருக் வேதத்தில் சொல்லியிருக்கும் ரிஷபத்தின் நான்கு கொம்புகளும் நான்கு வேதங்களைக் குறிப்பாகத் தெரிவிக்கின்றன. வேதங்களுக்குப் பிறகு வந்த உபநிஷத்துக்களும் புராணங்களும் தந்திரங்களும் ஸ்தோத்திரங்களுமே கலைகள் பிறந்து வளர்ச்சி பெறுவதற்குக் காரணம். ருக்வேதத்தின் ருத்திர சிவரூப வர்ணனையைப் போல் கலைவல்லவர்கள் இயற்றிய பல சித்திரங்கள் கலையை உருவாக்கும் பணியை மேற்கொண்டன. நாளாக ஆகச் சிவன் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும், விஷ்ணு என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற ஒரு நியதி அமைந்துவிட்டது.

ஆதிசேஷன்: இவன் முடிவற்றவன். மற்றச் சர்ப்பங்களிடம் காண முடியாத தனி அழகு உண்டு இவனுக்கு. படுத்தாலும் முடிவே இல்லாத நிலையைப் பெற்றவன். நம் முன்னோர் இதன் இயல்பை அறிந்து கலைகளிலும் மதாசாரங்களிலும் 'அநந்த' பாவனையைப் புகுத்திவிட்டார்கள். பட்சத்துக்கு ஒருமுறை சட்டையுரிப்பது, புதிய உருவம் எடுப்பது, யோகிகளைப்போல் காற்றைப் புசித்தே பல நாள் சக்தி குறையாமல் இருப்பது, மற்றப் பிராணிகளிடம் காணாத புத்தி தீட்

சண்யம், ஞானம் இவையெல்லாம் பொருந்தி இந்தியக் கலையிலும் மதத்திலும் இரண்டறக் கலந்து முக்கிய ஸ்தானம் பெற்றுவிட்டது ஆதிசேஷன். கொடிய விஷத்தைக் கக்கிய யமனைப்போல வரும் இந்தப் பாம்பு சங்கரனுக்கு ஆபரணம் ஆகும் போது பிரளயத்தை முன்கூட்டி அறிவிக்கிறது.

தாமரை: இந்தியக் கலையில் ஏராளமாக உபயோகமாகி மிகவும் முக்கியமாக விளங்குவது தாமரை. கொடிகள், கம்பங்கள், சிற்பங்கள், கட்டிட வேலைகள் எல்லாவற்றிலும் தாமரையை விதம்விதமாக அமைத்திருக்கிறார்கள். மலர்ந்த தாமரை, மொட்டு, தொங்கும் தாமரை என்று பல நிலைமையில் இதைக் காணலாம். தாமரையின் நடுப்பாகம், இதழ்கள், காம்பு இவை தனிப்படவும் சித்திரமாக அமைந்துள்ளன. 'மகா நிர்வாண தந்திரம்' என்னும் நூலில் தாமரையைப்பற்றிக் கீழ்க்கண்ட வர்ணனை வருகிறது: "வேர் பிரமதேவர். இது எல்லாவற்றுக்கும் மூலம்; அறிய முடியாதது. காம்பு மாயை. புஷ்பம், பரந்த உலகம். பழம் மோட்சம்; புஷ்பத்திலிருந்து வெளிவந்து எல்லாப் பந்தங்களிலிருந்தும் விடுபட்டு அடையும் முக்தி."

இதைப்பற்றி ஒரு புஸ்தகமே எழுதிவிடலாம். பல தேவதைகளும் சக்திகளும் தாமரையில் இருப்பவர்கள். தம் கைக்கு அலங்காரமாகவும் அதை வைத்துக்கொண்டிருப்பார்கள். சூரியனுக்குப் பிரியமான மலர் அது; சூரியனின் ஒளியை அது நினைவூட்டுகிறது. பிரம்மாண்டத்தையே ஒரு தாமரையாக உருவகப்படுத்தியிருக்கிறார்கள். ஜம்பூத்வீபத்தைத் தாமரையாகவும் மேரு மலையை அதன் மையமாகவும் சில இடங்களில் கூறியிருக்கிறார்கள். அசோகவர்த்தனரின் காலத்தில் ஸ்தாபித்த ஸாரநாத் தூணின் உச்சியில் இப்படி ஒரு தாமரை அதோடு ஒட்டினாற்போல் செதுக்கியிருக்கிறது. கீழே உதிர்ந்து கொண்டிருப்பதுபோல் உள்ள இதழ்களின்மேல், நான்கு திசைகளை நோக்கும் நான்கு சிங்கங்களைச் சிற்பி வெகு அழகாய் நிருமித்திருக்கிறான். இந்த ஸ்தம்பத்தின் உட்கருத்தை அறிந்துகொள்ளப் புராணங்களே நமக்கு ஆதாரம். உலகங்கள் யாவும் சேர்ந்து ஒரு தாமரை. இமாலயத்திலுள்ள மானஸ ஸரோவர் அதன் மத்திய ஸ்தானம். இதழ்கள் பூமியின் கண்டங்கள். இந்தக் கருத்து எத்தனை அழகானது!

சிங்கங்களும் உயர்ந்த நோக்கத்தைக் கொண்டு எழுந்தவையே. முதல் முதலில் மயில், ரிஷபம், குதிரை, சிங்கம் இந்த நான்கில் ஏதாவது ஒன்றை அமைப்பது வழக்கம். இவை மானஸ ஸரோவரில் நாற்புறத்திலிருந்தும் உற்பத்தியாகும் நதிகள் என்பது பாவனை. திபேத்தில் இதே கருத்தை வெளியிடும் புராதன சித்திரங்கள் இருந்ததாக அறிஞர் ஹாவெல் சொல்கிறார். அங்கே மயிலுக்குப் பதில் யானையைச் சித்திரிப்பார்களாம்.

ஆனால் அசோகர் காலத்தில் மற்ற மிருகங்களுக்குப் பதில் சிங்கத்தை நாலு பக்கமும் அமைப்பது வழக்கமாகிவிட்டது. ஸாஞ்சி ஸ்தூபத்தில் இதேமாதிரி ஸ்தம்பம் அமைத்த சிற்பி சிங்கங்களின்மேல் தர்ம சக்கரம் நிருமித்திருக்கிறான்.

ஸ்தம்பத்தின் உச்சியில் விசுவ பத்மத்தை அமைத்த நோக்கம் சர்ச்சைக்கு இடம் தருகிறது. 'இந்தக் கலை நோக்கு, வேதங்களிலிருந்து உண்டான தந்திரங்களிலிருந்தே

வந்தது' என்று மகாவித்துவான் சாமா சாஸ்திரியார் நிரூபித்திருக்கிறார். தந்திர சாஸ்திரங்களில் சிருஷ்டி, ஸ்திதி, லய சக்தி சொரூபங்களை மூன்று விதங்களாக ரிஷிகள் வர்ணித்திருக்கிறார்கள். சிருஷ்டி சக்தி சொரூபம் முக்கோண வடிவம்; ஸ்திதி சக்தி சொரூபம் ஸ்தம்ப வடிவம்; லயசக்தி சொரூபம் வட்டம். அதனால் உலகத்தை நிலைநிறுத்தும் சக்தி ஸ்தம்ப வடிவமானதென்று நிர்ணயித்திருக்கிறார்கள்.

பயம் ஒழிக்கும் இயக்கம்

இன்று உலகம் எங்கும் பயத்தை ஒழிக்கும் பேரியக்கமே நடந்து வருகிறது. பயம் என்பது அறியாமையால் விளைவதல்ல; அரைகுறை அறிவினாலேயே விளைவது. இந்த அரைகுறை அறிவுதான் ஆபத்து. கசாப்புக் கடைக்குப் போகிற ஆட்டுக்குத் தான் போகும் இடம் தெரியாது; அது மகிழ்ச்சியோடு துள்ளிக் குதித்துக்கொண்டு போகிறது. அந்தமாதிரியே நமக்குத் தெரியாத விஷயத்தைப்பற்றி நாம் பயமின்றி வாழ்கிறோம். முன்னெல்லாம் மின்சாரம் என்றாலே எல்லாருக்கும் பயம். மின்னலைப் பார்த்து ஏற்பட்ட ஒரு பிரமை இது. ஆனால் இப்போது பாருங்கள்: அதைப்பற்றி நன்றாகத் தெரிந்துகொண்டு விட்டோம். ஒரு காற்றுமழையில் இருப்பதை விடப் பத்துமடங்கு அதிகமான மின்சார சக்தியை, ஒரு சாதாரணத் தொழிலாளி, உல்லாசமாய்ச் சீட்டியடித்துக்கொண்டே அடக்கி ஆளுகிறான். இத்தனை நாளும் கட்டுக்கதைகளை நம்பி மருண்டு வந்தோம். இப்போது அவற்றின் குட்டு வெளியாகி விட்டது.

பயம் என்று ஒன்று இருந்தால் தான் ஒழுக்கமும் இருக்கும் என்று எண்ணிவந்தோமே அது தான் விந்தை! கொலைகாரர்களை வதைத்தும், சிறையிலிட்டும், கொன்றும் நல்ல வழிக்குத் திருப்பப் பார்த்தோம். குழந்தைகளை அடித்து மிரட்டினோம். மதத்தில் நம்பிக்கை இல்லாதவர்களைக் கொளுத்தினோம். நாளடைவில் இது தவறு என்று நமக்குத் தெரிந்தது. 'நல்லது செய்யப் பயம். அந்தப் பயத்தினாலேயே குற்றம் நிகழ்கிறது' என்று வர வர நமக்குப் புரிய ஆரம்பித்திருக்கிறது.

ரோமர்கள் 'பயம்' என்பதை ஒரு தெய்வமாகவே கொண்டாடிக் கோயில்கூடக் கட்டினார்கள். நரகம் ஒன்றை மனிதன் தன் கற்பனையால் சிருஷ்டித்தானே; அதுதான் அதிசயத்திலும் அதிசயம்!

தொழிலாளிகளை அடிமைகளாக நடத்தினால்தான் அவர்கள் நன்றாக உழைப்பார்கள் என்று பொதுவாக ஓர் அபிப்பிராயம் உண்டு. இப்போதுந்தான் என்ன! முதலாளியும் தொழிலாளியும் ஒருவரை ஒருவர் சில சமயம் பயமுறுத்திக் கொண்டிருக்கவில்லையா?

ஆனால் இனிமேல் இதெல்லாம் செல்லாது. பரஸ்பரம் ஒத்துழைத்தால்தான் நல்லது என்று இரு சாராருக்கும் புரிந்து வருகிறது.

கடவுளைப்பற்றி நமக்கு அரைகுறையாகத் தெரிந்த வரைக்கும் நாம் அஞ்சி நடுங்கினோம்; பயத்தைத் தெய்வமாக வழிபட்டோம். ஆனால் முன்னைவிட இப்போது அவரை அதிகமாக நெருங்கி விட்டோம்; அதனால் அவரிடம் நமக்குள்ள பயமெல்லாம் நீங்கி வருகிறது.

—டாக்டர் பிராங்க் கிரேன், 'நான்கு நிமிஷக் கட்டுரைகள்.'

கார்ட்டூன் கதம்பம்

அளக்க முடியவில்லை
காண முடியவில்லை
லஞ்சப் பேய்
—பளிட்ஸ்

'விடாதே போடு சண்டை.
மூன்றே வருஷத்தில் ஜயம்'
சீன கம்யூனிஸ்ட்
CHINESE COMMUNISTS
NATIONALISTS
டாலர் உதவி
தேசீய வாதிகள்
— யாச


ஸர் பிரான்ஸிஸ் மூடியைக் கவர்னர்
பதவியிலிருந்து விலக்கவேண்டும் என்கிறது
மேற்குப் பஞ்சாப் முஸ்லிம் லீக்.
- சங்கர்ஸ் வீக்லி


பர்மிய நடனம்
வெண் கொடி
வெண் பட்டை
பியிது யெபா
செங் கொடி
கரேன்
சர்க்கார்
- அமிர்த பஜார்
பத்திரிகை


காமன் வெல்த் - நமது கற்பனை
காமன் வெல்த் - பிரிட்டிஷ் கற்பனை
சமாதானப் பாதை
யுத்தப் பாதை
- பம்பாய் கிரானிக்கிள்

இந்திய எல்லையில் ஆங்கிலேயர் வசப்படுத்தாத ஒரே தேசம் நேபாளம். கூர்க்க வீரர்களின் தாய்நாடு அது.

சுதந்தர நேபாளம்

அர்ஜுனன்

நேபாளம் மலையும் காடும் நிறைந்த பிரதேசம். நேபாளிகளைத்தான் நாம் கூர்க்கர் என்று சொல்லுகிறோம். அது மிகவும் புராதனமான நாடு; அதோடு சரித்திரப் பிரசித்தமானது. மலைவாசிகளான நேபாளிகள் அநேகமாய்ச் சைனியத்தில் சேருவது வழக்கம். கூர்க்கர் சைனியம் சண்டைக்குப் பேர் போனது. கைத்தொழிலிலோ, விவசாயத்திலோ அவர்களுக்கு ஆர்வம் இல்லை. இப்போதுதான் சற்றுக் கவனம் செலுத்த ஆரம்பித்திருக்கிறார்கள். ஆதியில் விதேகம் என்று நேபாளத்துக்குப் பெயர். இதைக் கேட்டதும் ஸ்ரீ ராமனின் மனைவி சீதையின் நினைவு நமக்கு வரும். தத்துவ ஞானியாகிய ஜனக மகாராஜா இதை ஆண்டு வந்தார். உலகமெங்கும் புகுந்த ஆங்கிலேயர் கையில் சிக்காத நாடு இது ஒன்றுதான்.

நேபாளத்துக்கு வடக்கில் திபேத்தும், கிழக்கில் ஸிக்கிமும், தெற்கில் இந்தியாவும் இருக்கின்றன. இப்போது இதை ஆளுபவர் மகாராஜாதிராஜ திரிபுவன வீர விக்ரம ஜங் பகாதூர் சம்சேர் ஜங். சேனையின் பலம் அதிகம். அநேகமாய் எல்லா அதிகாரமும் முக்கிய மந்திரியின் அதிகாரத்துக்கு உட்பட்டது. அரச பதவிபோல் மந்திரிப் பதவியும் பரம்பரை முறையாக

மகாராஜாதிராஜா

வருகிறது. மந்திரி பதவிக்கு வருபவன் அரச குடும்பத்தைச் சேர்ந்தவனாகவும் இருக்கவேண்டும். அரச பதவிக்காகட்டும், மந்திரிப் பதவிக்காகட்டும், விசேஷமான நேமங்களும் ஆசாரமும் பார்த்துத்தான் பொறுக்க வேண்டும். பதவிக்கு லாயக்குள்ளவரையே தேர்ந்தெடுப்பார்கள். இப்போது மந்திரியாக இருப்பவரின் பெயர் மகாராஜா பத்ம சம்சேர் ஜங் பகாதூர் ராணா. மந்திரிதான் முக்கிய சேனாபதி. அரசரும் மந்திரியும் ஒரே குலத்தைச் சேர்ந்தவர்கள்.

நேபாளவாசிகள் மங்கோலியர் கலந்த சாதியார். முதல் முதல்

காப்பிரைட்: பிரஜாமதம் (கன்னடம்: 2-8-'48), ஹுப்ளி.

பாளையக்காரர் ரீதியில் நேபாளத்தின் பல பாகங்களை அவர்கள் ஆண்டு வந்தார்கள். 1769-இல் கூர்க்கர் அதிகாரத்துக்கு வந்தார்கள். இவர்களைத் தவிர, தார்த்தாரியர், மாகர், குருங்கர் என்னும் சாதியாரும் வசிக்கிறார்கள்.

1792-இல்தான் இந்தியாவுக்கும் நேபாளத்துக்கும் வியாபார முறையில் சம்பந்தம் ஏற்பட்டது. காட்மாண்டு என்னும் ஊர் நேபாளத்தின் முக்கியமான பட்டணம். அங்கே தங்கள் ரெஸிடெண்டு ஒருவரை ஆங்கிலேயர்கள் நியமித்தார்கள். ஆனால் மறு வருஷமே இந்தியாவுக்கும் நேபாளத்துக்கும் சச்சரவு ஏற்பட்டு ரெஸிடெண்டைத் திருப்பி அழைக்க நேர்ந்தது. 1859-இல்தான் மறுபடியும் சமாதான ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. இது இப்போதும் நீடித்து வருகிறது. பிரிட்டனுடன் 1923-இல் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி நேபாளம் முழுப் பலம் பெற்றது.

நேபாளத்தின் விஸ்தீரணம் ஆயிரம் சதுரமைல். அதன்



புத்தர் கோயில்



காளபைரவர் கோயில்

ஜனத்தொகை 70 லட்சம். மொத்த வருமானம் ஒரு கோடி ரூபாய். காட்மாண்டுவின் ஜனத்தொகை 1,08,805. அதில் அநேகமாய் எல்லாரும் ஹிந்துக்கள்; சநாதனிகள். அங்கே ஆதிசங்கரர் ஸ்தாபனம் செய்த பீடம் ஒன்று இருக்கிறது. சநாதனக் கொள்கைகளை நழுவ விடாமல் இன்றும் அது சிறப்பாக நடந்து வருகிறது. கல்விக்கும் பாடசாலைகளுக்கும் வேண்டிய சௌகரியங்களைச் சர்க்கார் செய்து வருகிறது. கட்டாயக் கல்வித் திட்டத்தை அமலுக்குக் கொண்டு வர ஏற்பாடு நடக்கிறது.

நேபாளச் சேனையில் 45,000 வீரர்கள் இருக்கிறார்கள். அதில் அநேகமாய் எல்லாம் காலாட்படை. ஆயுத பலம் குறைவு. அவர்களுக்குப் பழைய காலத்து முறையில் பயிற்சி தருகிறார்கள். ஆடு மாடு, தோல், அபினி, மற்றும் சில மருந்துகள், அகர், கோந்து, வர்ணம், சணல், கோதுமை, பருப்பு, அரிசி முதலிய தானிய வகைகள், நெய் எண்ணெய் எடுக்கும் கொட்டைகள், ஹூஸன், புகையிலை, ஒரு வித விறகு, இவை நேபாளத்திலிருந்து வெளிநாட்டுக்குச் செல்லும்

சாமான்கள். வெளியிலிருந்து பித்தளை, செம்பு, பெட்ரோல், பருத்தி நூல், உரி மட்டை நார், பட்டு இவை வருகின்றன.

இமாலயத்தின் அடிவாரத்தில் இருக்கும் நேபாளம் மிகவும் அழகான பிரதேசம்; காளிதாசனுடைய வர்ணனைக்கு ஒத்து இருக்கிறது. இமாலயத்துக்குப் போகும் பிரயாணிகள் எப்போதும் இங்கே வந்துகொண்டே இருப்பார்கள்.

சமுத்திர மட்டத்துக்குப் பத்தாயிரம் அடி உயரத்தில் இருக்கிறது இது. 'சியங் குகை' என்னும் இடத்தில் ஒரு புத்தர் கோயிலுடன் மடமும் இருக்கிறது. ஒன்பதே வயதான மடாதிபதி ஒருவரும் அங்கே இருக்கிறார். இவர் லாமாவின் அவதாரம் என்று நேபாளிகள் நம்புகிறார்கள். மடத்தில் சுமார் 200 சிஷ்யர்கள் இருக்கிறார்கள். இந்தப் பால லாமா ஜோஸ்யத்தில் கெட்டிக்காரர். இந்தியா, ஹைதராபாது இவைகளைப்பற்றி இவர் கூறியது அப்படியே பலித்திருக்கிறது. அழகும் அபாரமான பாண்டித்தியமும் புத்தி விவேகமும் உள்ளவர். இவரைப் பார்த்ததும் எல்லாரும் ஒரு கணநேரம் மெய்ம்மறந்து நின்றுவிடுவார்கள் என்பதில் சந்தேகமே இல்லை. மற்றொரு கோயில் 'தியாங் போசே'யினுடையது. அங்கிருந்து பார்த்தால் இமயமலையின் படிகம் போன்ற பல சிகரங்கள் தெரியும். அந்தக் கோயிலில், 'கௌரீ சங்கர்' சிகரத்தின் அதிதேவதையான சிவபெருமானின் அழகிய சிலை ஒன்று இருக்கிறது. சிவபெருமானின் வர்ணனைக்கும் இதற்கும் அதிகப்பொருத்தம் உண்டு.

பஞ்சத்தில் அன்னதானம்

சிராவஸ்தி நகரத்தில் பஞ்சம் தாண்டவமாடியது. அப்போது புத்தர் தம் சிஷ்யர்களைப் பார்த்து, "பசியால் வாடும் ஏழைகளுக்கு உங்களிலே யார் சோறு போடுவீர்கள்?" என்று கேட்டார்.

ரத்னாகரர் என்ற சாவ்கார் தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டு, "அவர்களுக்குச் சோறு போட என் செல்வமெல்லாம் போதாதே. என்னால் முடியாது" என்று சொல்லி விட்டார்.

சேனாதிபதி ஜயசேனர், "அவர்களுக்காக என் உயிரைக் கொடுக்க நான் தயார். ஆனால், என் வீட்டிலே அவர் களுக்குப் போடச் சோறு கிடையாது" என்றார்.

ஏராளமாய் நிலபுலம் உள்ள மிராசுதார் தர்மபாலர், "பஞ்சத்தால் என் நிலமெல்லாம் பாழாகிவிட்டது. ராஜாவுக்கு எப்படி வரி செலுத்தப் போகிறேனோ, அதுவே தெரியவில்லையே" என்றார்.

பிறகு, ஒரு பிட்சுவின் மகள் ஸுப்ரியா எழுந்து எல்லாருக்கும் தலை வணங்கிப் பணிவுடன், "அவர்களுக்கு நான் சோறு போடுவேன்" என்றாள்.

"எப்படி! உன்னால் அது எப்படி முடியும்?" என்று அவர்களெல்லாம் ஆச்சரியத்துடன் கேட்டார்கள்.

"உங்கள் எல்லாரையும் விட ஏழை நான். அதுவே என் பலம். என் பொக்கிஷமும் களஞ்சியமும் உங்கள் ஒவ்வொருவர் வீட்டிலும் இருக்கின்றன" என்றாள் ஸுப்ரியா.

—ரவீந்திரநாத டாகுர்.

முன்னேற்ற வழி

சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார்

சிந்தனை மிக்க இந்தக் கட்டுரை, அந்தப் பெயரையே தாங்கி நிற்கும் சிறந்த தமிழ்ப் பத்திரிகையில் வெளி வந்துள்ளது. "திருட்டும் புரட்டும் உலகில் இருக்கின்றனவே" என்று ஓயாமல் புலம்புவோரால் உலகத்தை உயர்த்த முடியாது; கற்பனை, அறிவு, அன்பு இவை படைத்தவரே உலகை உயர்த்த முடியும். இதை வலியுறுத்துகிறார் ராஜாஜி.

பூதப் பிரபஞ்சம் ஒரு பேரற்புத நியதிக்கு உட்பட்டு நிற்கிறது. கடவுளுக்கு மக்கள் பல பாஷைகளில் பல பெயரிட்டிருக்கிறார்கள். எல்லாவற்றையும் கடந்து நிற்கும் பொருளுக்கு, அதாவது அறிவுக்கு அப்பால் நிற்கும் தத்துவத்துக்கு, தமிழ்ப் பெரியோர் 'கடவுள்' என்று பெயர் வைத்தார்கள். ஆண்பாலும் பெண்பாலும் அல்லாத இந்த ளகர ஈற்றுச் சொல்லே, அறிவைக் கடந்த பரம்பொருளைக் குறிக்கும் பல சொற்களுள் பொருட் செறிவும் வடிவழகும் தெளிவும் சுருங்கிய உருவமும் கொண்ட சிறந்த சொல். எல்லாப் பொருள்களிலும் ஊடுருவி நின்று வேலை செய்து உலகத்தைத் தாங்கிவரும் நியதித் தொகுதியில் ஒரு பகுதியைப் பௌதிக விஞ்ஞானப் புலவர்கள் சோதித்து விளக்கி வந்திருக்கிறார்கள். ஒரு நீர்த்துளி முதல் பூமண்டலத்தைப் போன்ற பெரும் கட்டிப் பொருள் வரையிலும், அதற்கு அப்பாலும் உள்ள எல்லாக் கோளங்களும் அதன் அதன் உருவத்தோடு நின்று நிலைத்திருப்பதற்குக் காரணம், அணுக்கள் ஒன்றோடொன்று ஒட்டி நிற்கும் இயல்பு. ஆங்கிலத்தில் சர்வ வியாபகமான இந்தப் பிண்ட சக்திக்குக் 'கொஹீஷன்' என்று பெயரிட்டிருக்கிறார்கள். பிண்ட சக்தி ஒழிந்து போனால் கல்லும் பொடியாய்ப் போகும்; தனி உருவம் என்பதே இல்லாமல் எல்லாப் பொருளும்—மலை, காடு, எல்லாமே—பொடியாகி ஒரு பெருந்தூசிக் கடலாக வடிந்து போகும்.

பொருள்களின் வடிவநிலைக்குக் காரணமான பிண்ட சக்தியைப் போலவே சிதறிக் கிடக்கும் கோளங்கள் எல்லாவற்றையும் தத்தம் மண்டலஸ்தானங்களில் நிறுத்தி வரும் சர்வ வியாபகமான சக்தி ஒன்று உண்டு. இடைவெளி விட்டுப் பிரிந்து நிற்கும் பொருள்கள் எல்லாம் ஒன்றை ஒன்று இழுத்துப் பிடித்து நிற்கின்றன. ஒரு புற்சுமையைக் கயிற்று வலையில் போட்டு இறுகக் கட்டினாற்போல், உலகம் முழுதும் சிதறிப் போகாமல் ஒரு பெருஞ் சக்தியினால் பிணைந்து நிற்கிறது. எப்போதும் சுழன்று அலைந்துகொண்டிருக்கும் எண்

மூலம்: சிந்தனை (தமிழ்: ஜூன், '49) சென்னை.

ணற்ற மண்டலங்கள் அனைத்தும், தத்தம் வட்டத்துக்குள் வட்ட மிட்டுக்கொண்டு, ஆனாலும் வரம்பு மீறாமல் ஒன்றையொன்று இழுத்துப் பிடித்துக்கொண்டு நிலைத்து நிற்கின்றன. உலகம் யாவற்றிலும் வேலை செய்யும் இந்தப் பரஸ்பரக் கவர்ச்சி வேகத்துக்கு ஆங்கிலத்தில் 'க்ராவிடேஷன்' என்று பெயரிட்டிருக்கிறார்கள்.

நாம் கையாளும் பொருள்களுக்கும் பூமிக்கும் உள்ள கவர்ச்சியையே பொருள்களின் கனமாக நாம் உணர்கிறோம். எல்லாப் பொருள்களும் தரையை நோக்கி விழப் பார்க்கின்றன அல்லவா? இந்தியாவில் பொருள்கள் தரையை நோக்கி விழுவதைப் போலவே, அமெரிக்காவிலும் அதே சமயத்தில் பொருள்கள் அமெரிக்கத் தரையை நோக்கி, இந்தியாவில் விழும் திசைக்கு நேர் எதிரிடைத் திசையில் பாய்கின்றன. இந்தக் கண்டத்தில் பொருள்கள் விழுவதும் அமெரிக்காவில் விழுவதும் நேர் எதிரிடைக் கதி. காந்தத்தை நோக்கி இரும்புப் பொடி எல்லாத் திசையிலிருந்தும் செல்கிற விதமே பொருள்கள் உருண்டை வடிவமான பூமியை நோக்கிச் செல்கின்றன. இந்தக் கவர்ச்சிச் சக்தியைத் தடுப்பதால் உண்டாகும் உணர்ச்சியே பொருள்களின் 'பாரம்'.

ஆகவே, எல்லாப் பொருள்களுக்குள்ளும் பரஸ்பரக் கவர்ச்சிசக்தி மறைந்து நிற்கிறது. இது பல தோற்றத்துடன் தன்னைக் காட்டிக் கொள்கிறது. பூதப் பொருள்களின் பரஸ்பரக் கவர்ச்சியைப் பராசக்தியின் ஓர் உருவமாகவே ஆராதிக்கலாம். எங்கும் பரவி நிற்கும் பௌதிக ஆகர்ஷணம் கடவுளின் ஓர் அர்ச்சாவதாரம் என்று வைதிக முறையில் சொல்லலாம்.

பௌதிகப் பொருள்களில் பரந்து வேலை செய்யும் இணைப்பைப்போலவே ஆத்மாக்கள் எல்லாவற்றுள்ளும் ஒரு பரஸ்பரக் கவர்ச்சிசக்தி நின்று வேலை செய்கிறது. ஒவ்வொரு பூத அணுவும் மற்ற அணுக்களை இழுத்துக்கொண்டிருப்பதைப்போல், ஒவ்வோர் ஆத்மாவும் மற்ற ஆத்மாக்களோடு பிணைந்திருக்கிறது. உயிருள்ள உலகம் சிதறிப் போகாமல் இருப்பதற்கு இதுவே காரணம். அகில ஆதமக் கவர்ச்சியும் 'க்ராவிடேஷன்' என்கிற பூதக்கவர்ச்சியைப் போலவே ஒரு பேருண்மை. அது நிலைக்குத் தகுந்தவாறு தோற்றம் காட்டுகிறது. இந்தக் கவர்ச்சியே அன்பு.

குழந்தைக்கும் பெற்றோருக்கும் உள்ள பற்றின் ரகசியத்தை நாம் முழுதும் கண்டோமா? இல்லை. மக்களிடையே தோன்றும் நட்பின் ரகசியத்தைக் கண்டோமா? இல்லை. அகில ஆத்மக் கவர்ச்சியும் பராசக்தியின் ஓர் அர்ச்சாவதாரமாகும். உயிர்களில் காணும் கூட்டுறவு, ஸ்திரீ புருஷத் தொடர்பு, சமூகப் பற்று, தேச பக்தி இந்த மாதிரி பல கவர்ச்சிகளும் இந்த அன்பு என்கிற வேகத்தில் அடங்கும். க்ராவிடேஷனைப் போலவே அன்பு நியதியும் விசுவவ்யாபகப் கொண்டது. உலகம் முழுதும் அன்பு என்கிற சக்தியால் கட்டுண்டு நிற்கிறது. ஒன்றிலிருந்து உண்டான பலவும் மறுபடி ஒன்றாகச் சேர இடைவிடாமல் விரும்புகின்றன. அதுவே பலவிதப் 'பற்று'க்களாகவும் கவர்ச்சிகளாகவும் தோற்றம் காட்டுகிறது. பௌதிகப் பொருள்களின் கனத்தைப் போலவே தடையுண்ட

அன்புச் சக்தியானது சுகம், துக்கம், துவேஷம் இந்த மாதிரி பல மனநிலைகளாகத் தோற்றம் கொள் கிறது.

அன்பின் பெருமையையும், அதன் கடவுள் தன்மையையும் உணர்ந்து அதையும் அதன் வடிவில் ஈசனையும் ஆராதித்து நடப்பது ஞானம். ஊக்கம், கற்பனைச் சக்தி, அறிவு, அன்பு இவற்றையெல்லாம் பெற்று நாம் பாடுபட்டாலும், ஆண்டவன் அருளும் வேண்டும். அது இல்லாமல் ஒரு பயனும் பெற மாட்டோம். நல்வழியில் நின்றோமானால் ஈசனுடைய அருள் பெருகும்; வானம் பொழியும் மாரி போல் தானாகப் பெய்யும்.

பொய்யரும் மோசக்காரரும் திருடரும் இல்லாமல் சமூகத்தை முற்றும் சுத்த சத்துவ சமூகமாகச் செய்ய ஒரு நாளும் முடியாது. உலகத்தில் இப்படிச் சிலர் இருந்து கொண்டேதான் இருப்பார்கள். ஆனால், பெரும்பாலோர் அறிவும் அன்பும் படைத்து ஊக்கத்தோடும் நல்ல கற்பனைச் சக்தியைச் செலுத்தியும் பாடுபட்டு வந்தால், சமூகம் மிக உன்னதச் சிறப்பு எய்தும். பொய்யும் திருட்டும் தாமாகவே வெட்கப்பட்டு மறைந்து கொள்ளும்.

நம்புங்கள்; நம்பி நிழலில் நில்லுங்கள். மனிதன் புத்தி எப்போதும், "கடவுள் உண்டு, கடவுள் எங்கே?" என்று சந்தேகத்தில் ஊசலாடிக்கொண்டே இருக்கும். மரத்தடியில் நிழல்; அப்பால் உயிரைக் காயும் வெயில். நிழலில் நில்லுங்கள்; வீணே வெயிலில் அடிபட வேண்டாம். சின்ன விஷயங்களுக்கு அத்தாட்சி உண்டு; பிரமாணம் கிடைக்கும். பேருண்மைகளுக்குச் சாட்சியும் இலலை; பிரமாணமும் கிடைக்காது. பொய்யென்று உறுதி கூறுவாரும் இல்லை. நம்புங்கள், நிழலில் நில்லுங்கள். வீணாக வெயிலில் காய்ந்து சாக வேண்டாம்.

கடவுள் உண்டு; அன்பு உண்டு. உய்யும் வழி அவனை நோக்கிச் செல்லுதல். 'சுற்றுமுள்ளவர்களின் நலமே என் நலம்' என்று எப்போதும் அன்பு செய்து, அன்பு எண்ணி, அன்பு பேசி வாழ்க்கையை நடத்துவதுதான் முன்னேற்றத்துக்கு வழி.

கருணை மிகுந்த டாக்டர்

பணக்காரனோ, ஏழையோ யார் கூப்பிட்டாலும் மறுக்காமல் உடனே போய் வைத்தியம் செய்து வந்தார் ஒரு டாக்டர். பணத்தைப்பற்றி அவர் கவலைப்படுவதேயில்லை.

இப்போது அவர் தள்ளாத கிழவராகிவிட்டார். ஒரு நாள் பாதி ராத்திரியில் யாரோ வந்து கதவைத் தட்டினார்கள்.

"உம்மிடம் பணம் இருக்கிறதா?"

"தாராளமாய் இருக்கிறது."

"அப்படியானால், புதிய டாக்டரிடம் போம். பணம் கொடுக்கிற யாருக்காகவும் வெளியே கிளம்ப இனி என்னால் முடியாது. நான் மிகவும் கிழவனாகிவிட்டேன்" என்றார்.

—மேரி பிராண்ட், 'ரீடர்ஸ் டைஜெஸ்ட்.'

குழந்தைகள் குறும்பு

இவை போன்ற துணுக்குகளை, தாங்கள் கண்டு கேட்ட அநுபவங்களிலிருந்து யாரும் நமக்கு அனுப்பலாம். பிரசுரிக்க அங்கீகரித்த ஒவ்வொரு துணுக்குக்கும் 2 ரூபாய் சம்மானம் அளிக்கப்படும். பிரசுரிக்காதவற்றைத் திருப்பி அனுப்பமுடியாது. பதிலும் எழுத முடியாது.

—ஆசிரியர்.

என் தம்பி கோபு பெரிய குறும்புக்காரன். தெருவில் போகிற ஒரு நாயின்மேல் கல்லை விட்டெறிந்து தொந்தரவு செய்தான்.

அதைப் பார்த்த ஒரு கிழவர், "ஏ தம்பி, வாயில்லாப் பிராணியை ஏன் அடிக்கிறாய்? இனி அதை நீ கல்லால் அடித்தால், உன்னை நானும் கல்லால் அடிப்பேன்" என்று கண்டித்தார்.

"நான் அதைக் கம்பால் அடித்தால்......"

"உன்னை நானும் கம்பால் அடிப்பேன்."

"நான் கையால் அதை அடித்தால்......?"

"உன்னை நானும் கையால் அடிப்பேன்....."

தம்பி சிறிது யோசித்துவிட்டு, "நான் அதன் வாலைப் பிடித்து இழுத்தால்...?" என்று கேட்டான்.

கிழவர், "நானும்......நானும்" என்று திக்கினாரே ஒழிய மேலே ஒன்றும் சொல்ல முடியாமல் நின்றுவிட்டார்.

—என். வேங்கடாசலம், தூத்துக்குடி.

தோட்டத்தில் புடலம் பிஞ்சுகளுக்குத் தோட்டக்கார முனியன் கல்லைக் கட்டித் தொங்கவிட்டுக் கொண்டிருந்தான். இதைக் கண்ட குழந்தை ராஜி, "என் முனியா, இதுக்கெல்லாம் கல்லைக் கட்டி விடறே?" என்று கேட்டாள்.

"இதுமாதிரி கல்லைக் கட்டினால், காயெல்லாம் நல்ல நீளமாகச் சாட்டைமாதிரி வளரும்" என்றான் முனியன்.

ராஜி குடுகுடு என்று உள்ளே ஓடி வந்தாள்; "அம்மா, தைல மெல்லாம் பூசினாலும் என் தலை மயிர் வளர மாட்டேங்கறதே; பின்னல் நுனியிலே ஒரு கல்லைக் கட்டிப்

பாரேன். நீளமாய்ச் சாட்டைமாதிரி வளருமாமே'' என்றாள்.

—எஸ். லட்சுமி, புனு.

ரமாமணி தூங்கும்போது, இரவெல்லாம் விடிவிளக்கு எரிய வேண்டும். ஒரு நாள் மண்ணெண்ணெய் குறைவாய் இருந்ததால், தாயார் வந்து, "அடே ரமா, இதோ மாடத்தில் சுவாமி இருக்கிறார். ராத்திரியெல்லாம் அவர் உன் பக்கத்திலே இருப்பார். பயப்படாதே, விளக்கை எடுத்துக்கொண்டு போகிறேன்'' என்றாள்.

"இல்லை, அம்மா, விளக்கை எடுக்காதே. அதை எனக்கு வெச்சுட்டு, சுவாமியை வேணுமானால் நீ எடுத்துண்டு போ'' என்றான் ரமாமணி.

—ஆர். சுப்பிரமணியன், மயிலாப்பூர்.

எங்கள் வீட்டுக்கும் அடுத்த வீட்டுக்கும் இடையே ஒரு பெரிய ஜன்னல் உண்டு. ஒரு நாள் இந்திரா, ஜன்னலருகே நின்றுகொண்டிருந்தாள். அடுத்த வீட்டு மாமி, தன் பிள்ளையைப் பார்த்துக் கோபத்துடன், "ஏண்டா மைசூர்ப்பாகைத் திருடினாய்? உனக்கு ஒன்றுகூடத் தரப் போவதில்லை. அத்தனையையும் வாசலில் எறிந்து விடுகிறேன், பார்!'' என்று கத்தினாள்.

உடனே இந்திரா பதற்றத்துடன், "மாமி, அந்தப் பக்கம் விட்டெறியாதீங்கோ. இந்தப் பக்கம் (ஜன்னல் பக்கம்) விட்டெறியுங்கோ. நான் எடுத்துக் கொள்றேன்'' என்றாள். மாமியின் கோபம் மறைந்தது. இந்திராவுக்கும் இரண்டு மைசூர்ப்பாகுகள் கிடைத்தன.

—ஆர். ரத்னம்பாள், திருச்சி.

நாங்கள் ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலை படகில் போய்க்கொண்டிருந்தோம். படகில் இங்கும் அங்குமாகக் கொஞ்சம் அழுக்குத் தண்ணீர் இருந்தது. ஜாக்கிரதையாகவே ஒதுங்கி உட்கார்ந்துகொண்டிருந்தோம். இருந்தாலும் எப்படியோ என் மைத்துனியின் புடைவைக்கரை அந்தத் தண்ணீரில் விழுந்து அழுக்காகிவிட்டது.

ஏரியின் மத்தியில் எங்கள் படகு வேகமாகப் போய்க்கொண்டிருந்தது. "இந்தச் சனியன்கள் படகைச் சுத்தம் செய்யவே மாட்டேங்கிறானுங்க!'' என்றாள் என் மைத்துனி.

"ஒரு கொட்டாங்கச்சி இருந்தாலும் இந்தத் தண்ணீரை எடுத்து வெளியே கொட்டிவிடலாம், காந்தா!'' என்றேன்.

உடனே என் நாலு வயது மைத்துனன், "கொட்டாங்கச்சி வேண்டாம், மாமா. நாம்பளே படகைக் கவிழ்த்துடுவோம். தண்ணியெல்லாம் போயிடும். அப்புறம் நாம்பள் நல்லாப் போகலாம்'' என்றான்!



—'புதுமைக்கோமான்', பெங்களூர்.

யட்சன் கேள்வி

★

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

வியாச பாரதத்தில் மிகவும் பிரசித்தமானது இந்த 'யட்சப் பிரச்னம்'. இது வனபர்வத்தில் உள்ளது. இதை ஆங்கிலத்தில் எட்வின் ஆர்னல்டுகூடக் கவிதை உருவத்தில் மொழிபெயர்த்திருக்கிருர்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

பாண்டவர்களின் வனவாசம் முடியும் சமயம். ஒரு நாள் அவர்கள் ஒரு மானைத் துரத்திக் கொண்டு காட்டினுள் வெகு தூரம் வந்துவிட்டார்கள். தாகம் வறட்டவே தருமர் சற்றுத் தூரத்திலுள்ள குளத்திலிருந்து தண்ணீர் கொண்டுவரச் சொல்லி ஒருவனை அனுப்பினுர். போனவன் திரும்பி வரவில்லை. சகதேவனை அனுப்பினுர். அவனும் வராததால் அர்ஜுனனையும், பிறகு பீமனையும் அனுப்பினுர். நாலு பேரும் திரும்பவேயில்லை. பிறகு தாமே அங்கே போனுர். குளக்கரையில் தம் தம்பிமார் இறந்து கிடப்பதைப் பார்த்தார். அவருக்குத் துக்கம் தாங்கவில்லை. அவர்களை யார் கொன்ருர்கள் என்று புரியாமல் தவித்தார். பிறகு யோசித்துப் பார்த்தார்; "உடம்பில் காயமுமில்லை. வேறு யார் காலடி அடையாளமும் இல்லை. இவர்கள் உதட்டில் விஷம் பட்டமாதிரியும் இல்லை. இந்த இடத்தைக் காக்கும் பூதம் ஏதாவதுதான் இப்படிச் செய்திருக்கும். எதற்கும் முதலில் தாகத்தைத் தணித்துக்கொண்டு மேலே யோசிக்கலாம்" என்று தீர்மானித்துக் குளத்தில் இறங்கினுர். குனிந்து தண்ணீரை எடுக்கும்போது அங்கே கொக்கு வடிவில் இருந்த யட்சன், "நான் இங்கே பாசி, மீன் இவைகளைத் தின்று வாழ்ந்து வருகிறேன். இது என் குளம். உன் தம்பிமார்களை நான்தான் கொன்றேன். என் கேள்விகளுக்குப் பதில் சொல்லாமல் நீ குளத்தில் இறங்கினுல் உனக்கும் அவர்கள் கதிதான் நேரும்" என்ருன்.

தருமர்: எப்பேர்ப்பட்ட தேவர்கள், கந்தர்வர்கள், அசுரர்கள், ராட்சசர்களாக இருந்தாலும் என் தம்பிமாரைச் சண்டையில் வெல்ல முடியாது. நீங்கள் யார்? ருத்ரர்கள், வசுக்கள், மருத்துக்கள் இவர்களின் தலைவரா?

யட்சன்: நான் ஒரு யட்சன். உன் தம்பிமார் என் கேள்விகளுக்குப் பதில் சொல்லாமல் இந்தத் தண்ணீரைக் குடித்துவிட்டு இறந்து போனுர்கள். நீ உயிரோடு இருக்க வேண்டுமானுல் என் கேள்விகளுக்குப் பதில் சொல்.

த: உங்கள் வார்த்தையை மீறி ஒன்றும் செய்யமாட்டேன். எனக்குத் தெரிந்தவரை உங்கள் கேள்விகளுக்குப் பதில் சொல்லுவேன்.

ய: சூரியன் உதிக்கும்படி செய்வது யார்? அதைச் சுற்றி வருபவர் யார்? அஸ்தமிக்கும்படி செய்வது யார்? அது எதில் நிலை பெற்றிருக்கிறது?

த: சிருஷ்டி கர்த்தாவான பிரம்மாதான் அதை உதிக்கும்படி

செய்கிறார். தேவர்கள் அதைச் சுற்றிவருகிறார்கள். தருமமே அதை அஸ்தமிக்கும்படி செய்கிறது. அது சத்தியத்திலேயே நிலை பெற்றிருக்கிறது.

ய: ஐம்புலன்களும் அறிவும் கூடி வெளிக்கு நல்லவனாகத் தோன்றுவான்; இருந்தாலும் அவன் உயிரோடு இருக்கிறான் என்று சொல்ல முடியாது; அவன் யார்?

த: தேவர்களையும் விருந்தாளிகளையும் வேலைக்காரர்களையும் பித்ருக்களையும் வேண்டியபடி உபசரிக்காமல் வாழ்கிறவனே உயிர் இருந்தும் இறந்தவன் மாதிரி.

ய: பூமியைவிடப் பெரியது எது? ஆகாயத்தைவிட உயர்ந்தது எது? காற்றைவிடக் கடிய வேகம் கொண்டது எது? புல்லைவிட அதிகமாக வளருவது எது?

த: தாயின் அன்பே பூமியை விடப் பெரியது. தந்தையின் வாஞ்சையே ஆகாயத்தைவிட உயர்ந்தது. மனமே காற்றைவிடக் கடிய வேகம் கொண்டது. கவலையே புல்லைவிட அதிகமாக வளரும்.

ய: உறக்கத்திலும் கண்ணை விழித்திருப்பது எது? பிறந்தும் அசைவற்றுக் கிடப்பது எது? எதற்கு உள்ளம் இல்லை? எது வேகம் அதிகமாக ஆகப் பெருகுகிறது?

த: மீன்தான் உறக்கத்திலும் கண் விழித்தபடி இருக்கும். பிறந்தும் அசைவற்றுக் கிடப்பது முட்டை. உள்ளமே இல்லாதது கல்தான். வேகம் அதிகமாக ஆகப் பெருகுவது ஆறு.

ய: வழியே போகிறவனுக்கும் வீட்டில் உள்ளவனுக்கும் நோயாளிக்கும் இறப்பவனுக்கும் யார் யார் துணை?

த: வழியே போகிறவனுக்குக் கூட்டமே துணை. வீட்டில் உள்ளவனுக்கு மனைவியே துணை. நோயாளிக்கு மருந்தே துணை. இறப்பவனுக்கு அவன் செய்த தான தருமமே துணை.

ய: பெரியோரிடம் உள்ள சிறந்த குணம் எது? லாபத்தில் உயர்ந்தது எது? தனத்தில் சிறந்தது எது? சுகம் கொடுப்பதில் சிறந்தது எது?

த: தாட்சிண்யமே பெரியோரிடம் உள்ள சிறந்த குணம். ஆரோக்கியமே சிறந்த லாபம். படிப்பே தனத்தில் சிறந்தது. போதும் என்று இருப்பதே சுகம் கொடுப்பதில் சிறந்தது.

ய: உலகத்தில் சிறந்த தருமம் எது? எப்போதும் நல்ல பலனைக் கொடுக்கும் காரியம் எது? எதை அடக்கினால் வருத்தம் நீங்கும்? எவருடைய சேர்க்கை வீண் இல்லை?

த: கொடுமையின்றி இருப்பதே மேலான தருமம். வேதத்தில் சொல்லிய காரியமே நல்ல பலன் அளிக்கும். மனத்தை அடக்கினால் வருத்தம் நீங்கும். நல்லவர்களுடைய சேர்க்கை வீண் இல்லை.

ய: ஒருவன் எதை விட்டால் எல்லாருக்கும் பிரியமாவான்? எதை விட்டால் சுகமாக வாழலாம்?

த: தான் என்ற அபிமானத்தை விட்டால் எல்லாருக்கும் பிரியமாவான். லோபத்தை விட்டால் சுகமாக வாழலாம்.

ய: நடிகர்களுக்கும் நாட்டியக்காரர்களுக்கும் சம்மானம் செய்வது எதற்காக? வேலையாட்களுக்கு எதற்காகக் கொடுத்து உதவவேண்டும்? அரசர்களுக்கு ஏன் கொடுக்க வேண்டும்?

த: புகழ்ச்சியை விரும்பியே நடிகர், நாட்டியக்காரர் இவர்களுக்குக் கொடுக்கிறோம். நம்மை காத்துக்

கொள்வதற்காகவே வேலைக்காரர்களுக்குக் கொடுக்கிறோம். அரசர்களுக்கு அவர்களிடம் உள்ள பயத்தினால் கொடுக்கிறோம்.

ய: அறம், பொருள், இன்பம் இந்த மூன்றும் ஒன்றுக்கு ஒன்று முரண். இவை எப்படி ஒரே இடத்தில் சேர்ந்திருக்கும்?

த: மனைவி அறத்தில் பற்றுதலோடு இருந்தால் மூன்றும் அங்கே சேர்ந்திருக்கும்.

ய: சந்தோஷப்படுகிறவன் யார்? ஆச்சரியம் என்பது எது? எது நல்ல வழி?

த: கடன் இல்லாமலும் வெளியூர் போகாமலும், இருக்கும் இடத்திலேயே பசியாமல் உண்டு வாழ்பவன் சந்தோஷப்படுகிறான். ஒவ்வொரு நாளும் பிராணிகள் இறந்து போய்க்கொண்டிருப்பதைப் பார்த்தும் அழிவில்லாதவர்கள் என்று மனிதர்கள் தம்மை எண்ணி வருகிறார்களே; அதுதான் ஆச்சரியம். தர்மத்தின் உண்மை மிக நுட்பமானது; அதை நாமாகவே அறிந்து கொள்வதும் சிரமம்; ஆகையால் பெரியோரைப் பின்பற்றி நடப்பது தான் சரியான வழி.

ய: தனவான்களில் சிறந்தவன் எவன்?

த: விருப்பு வெறுப்பு இல்லாமல், சுகதுக்கம் பாராட்டாமல், நடந்தது நடக்க இருப்பது எல்லாம் சமம் என்று எண்ணுகிறவனே தனவான்களில் சிறந்தவன்.

ய: ராஜகுமாரா, நான் கேட்டதற்கெல்லாம் சரியாகப் பதில் சொல்லிவிட்டாய். சந்தோஷம். இனிமேல் தாராளமாகத் தண்ணீர் குடிக்கலாம். உன் சகோதரர்களில் ஒரே ஒருவன் மட்டும் பிழைத்து எழுந்திருப்பான். உனக்கு யார் வேண்டும், சொல்?

த: அப்படியானால் நகுலன் பிழைத்து எழுந்திருக்கட்டும்.

ய: பீமனிடம் உனக்கு அதிக ஆசை உண்டே? காவலுக்கு அர்ஜுனன் வேண்டாமா? அவர்களையெல்லாம் விட்டுவிட்டு மாற்றாந்தாயின் மகனை நகுலன் எழுந்திருக்கவேண்டும் என்று ஏன் சொல்கிறாய்?

த: உலகில் தருமமே மேலானது. கொடுமையின்றி அன்பு பாராட்டுவதுதான் சரியான தருமம். என் தந்தையின் மனைவிமார் இரண்டு பேருக்கும் ஒவ்வொரு பிள்ளை யாவது இருக்க வேண்டியதுதான் நியாயம். குந்திக்கு நான் இருக்கிறேன். அதேபோல் மாத்ரிக்கும் நகுலன் இருக்கட்டும்.

ய: எல்லாவற்றையும் விட அன்பையே நீ மேலாக எண்ணுவதால் உன் தம்பிமார் எல்லாருமே பிழைத்து எழுந்திருக்கட்டும்.

உடனே மற்ற நால்வரும் விழித்து எழுந்தார்கள். கொக்கு இருந்த இடத்தில் யமதர்மராஜன் தோன்றி அவர்களை ஆசீர்வதித்து மறைந்தான்.

கல்வியும் அறிவும்

கல்வியின் உதவியில்லாமல் வாழ உதவுவது அறிவு என்று தோன்றுகிறது; அறிவின் உதவியில்லாமல் வாழ உதவுவது கல்வி என்று தோன்றுகிறது.

—ஆல்பர்ட் எட்வர்ட்டு விக்காம்.

இறந்தும் வாழ்கிறார் மகாத்மா காந்தி. அவர் உபதேசம் எங்கும் பரவி வருகிறது.

ஜப்பானில் காந்தி சங்கம்

கிரிபாலே

பிரியமுள்ள தங்கச்சி, உன் கடிதம் கிடைத்தது. நீங்கள் எல்லாரும் சுகம் என்று கேட்டதில் சந்தோஷம். நீ அடுத்த வீட்டுக்காரர்களைப்பற்றி விசாரித்து எழுதுகிறாயே, அதுதான் உன் அத்திம்பேருக்குத் தாங்கவில்லை. இப்போது புதிதாக ஒருவர் வந்திருப்பது உனக்கு எப்படித் தெரியும், சொல்லு? மகாநுபாவன் எச்சில் கையினால் காக்கைகூட ஒட்ட மாட்டான்; அவ்வளவு புண்ணியாத்மா. நல்ல சொத்துக்காரனும். தோட்டங்களும் கொல்லையும் ஏகமாய் வாங்கி இருக்கிறானும். பழமோ காயோ கணக்கில்லை. நெல் வேண்டியது வந்து குவிகிறது. ஒருவருக்குத் தூசு கொடுக்க மனம் வராது. இவ்வளவையும் யார் கட்டிக் காப்பது? நாய் வளர்க்கிறான் மனிதன். அதுவுந்தான் மனசாகிறது என்கிறாயா? கேள், வேடிக்கையை: தெருவில் போகும் பார் நாய்க்குட்டிகள், அவைகளை ஒவ்வொன்றாகப் பிடித்துக் கட்டிப் போட்டு ஒரே அமர்க்களம் செய்கிறான். இரண்டு மூன்று நாள் கட்டிப் போட்டு வளர்க்கிறானா? விட்டதும் ஓடி விடுகிறது அது. எங்கள் தலையில் எழுத்து; இவ்வளவையும் பார்க்க வேண்டியிருக்கிறது. ஏதோ நீ விசாரித்தாயே என்று எழுதினேன். இதை விடு.

நேற்று நம் சாவித்திரி வீட்டுக்குப் போயிருந்தேன். அவள் இப்போது பத்திரிகைகளில் மிகவும் நன்றாக எழுதுகிறாள். தெரியுமா உனக்கு? ஒரு கடிதத்தைக் காட்டினாள். அவளுடைய சிநேகிதி ஒருத்தி சீமைக்குப் போயிருக்கிறாளாம். அதைப்பற்றி உனக்கு எழுதவேண்டுமென்று கடிதத்தை வாங்கி வந்தேன். நமக்கு இவ்வளவு உழைத்தாரே பாபூஜீ; உபயோகமற்றவர்கள் நாம். அவர்களைப் பார், அப்படியே கடிதத்தைப் படித்தால் உனக்குச் சுவாரசியமாய் இருக்குமென்றுதான் அதை எடுத்து எழுதுகிறேன். படித்துவிட்டு உன் அபிப்பிராயத்தை எழுது. சீனாவிலும் ஜப்பானிலும் பாபூஜீயின் வார்த்தைக்கு எவ்வளவு மதிப்பு!

* * *

நாங்கள் எப்ரல் 10-ஆம் தேதி ஷாங்கைக்கு வந்து சேர்ந்தோம். இங்கே இரண்டு நாள் தங்கினோம். டோக்கியோவில் ஒரு வாரம் தங்கியிருந்தோம். டாக்டர் ஜீ என்பவர் எங்களை வரவேற்று உபசரித்தார். அவர் பௌத்த சங்கம் ஒன்றுக்குத் தலைவர். எங்களுக்குச் சபைகளில் பேசச் சந்தர்ப்பமும் அளித்தார். இந்தியாவுக்கும் சீனாவுக்கும் உள்ள தொடர்பைப்பற்றி விடாமல் பேசி வந்தோம். இங்கே நம் சர்வோதய சங்கத்தைப்பற்றியும் தெரியப்படுத்

காப்பிரைட்: கதாவணி (கன்னடம்: பிப்ரவரி '49), பெங்களூர்.

தினேம். சிலர் அதில் அங்கத்தின ராகவும் சேர்ந்தார்கள். டாக்டர் ஜீயும் அதில் சேர்ந்துகொண்டார். அதை எல்லாரும் புகழ்ந்தார்கள். ஷாங்கையில் ஒரு பெரிய ஸம்ஸ் கிருத புத்தகாலயம் இருக்கிறது. அதற்குத் தலைவர் டாக்டர் வின் என்பவர். அவரிடமிருந்தும் எங்களுக்கு அழைப்பு வந்தது. அங்கேயும் நாங்கள் பேசினேம். ஜப்பானில் பெரியவர்கள் எத் தனையோ பேரைப் பார்த்தோம். எவ்வளவோ பேருக்குப் பேட்டியும் அளித்தோம். எல்லோருக்கும் பாபூஜீயினிடம் அபாரமான அன்பும் பக்தியும் இருந்தன. எவ்வளவோ வருஷங்களாக ஜப்பானில் 'காந்தி சங்கம்' ஒன்று நடந்து வருகிறதாம். அங்கே உள்ள 'ஹோங்காஞ்ஜீ' என்ற புத்தர் கோவிலின் பிரதான அர்ச்சகரான நாகயாமர் என் பவர் அந்தச் சங்கத்தின் தலைவர். அவர் நல்ல உழைப்பாளி. பாபூஜீ இறந்ததைக் கேட்டு அவர் மூன்று நாட்கள் உண்ணுவிரதம் இருந்தா ராம். கோவிலில் புத்தரின் பிறந்த நாளைப் பிப்ரவரி 15 - ஆம் தேதி அவர்கள் கொண்டாடுகிருர்கள். அன்றைய தினமே பாபூஜீயின் வருஷ திதியையும் சங்கத்தினர் அநுஷ்டித்தார்களாம். டோக் கியோவிலேயே இதுதான் பெரிய புத்தர் கோவில். அன்று புத்தர் சிலைக்குப் பக்கத்தில் பாபூஜீயின் சிலை ஒன்றையும் வைத்திருந்தார் களாம். இந்த மாதிரி எவ்வளவோ இடங்களைப் போய்ப் பார்த்தோம். பாபூஜீயைப்பற்றி நம்மை விட அவர்களுக்கு அதிகமாகத் தெரிந் திருக்கிறது. பக்தி சிரத்தையும் உண்டு எங்களிடம் இருந்த பாபூஜீயின் அஸ்திப் பொடியையும் ஒரு சிறு சிலையையும் ஒரு சங் கத்துக்கு அளித்தோம். நாங்கள் பேசியதை அவர்கள் மிகவும் கவன மாகக் கேட்டுக்கொண்டதோடு எங்களையும் கொண்டாடினர்கள்.

"டோக்கியோவில் கனிஷிக், க்யூஜிவார் என்ற இரண்டு பெரிய மேஜர்களைக் கண்டு பேசினேம். அவர்கள் இருவரும் முதலிலிருந்து கடைசி வரையிலும் சுபாஷ்பாபு வினிடம் வேலை செய்தவர்களாம். சுவாரஸ்யமான எவ்வளவோ விஷ யங்கள் சொன்னார்கள். கடைசியில் சுபாஷ் இறந்த விதத் தையும் சொல்லி, 'அவர் நிச்சய மாக இறந்துவிட்டார்; யாருடைய புரளியையும் நம்பவேண்டாம்' என்ருர்கள்.

"சீனுவிலும் ஜப்பானிலும் அநேகம் பேர் ராட்டை வைத்துக்கொண்டு நூல் நூற்கிருர்கள். எவ்வளவோ தினுசு ராட்டைகளைப் பார்த்தோம். பம்பாயிலிருந்து அங்கே வந்துள்ள கிராம ஊழியர் சங்கத் தலைவரான பிராணஜீவன் கபாதி அவர்களைக் கண்டோம். அவர் ராட்டையைப் பற்றி ஆராய்ந்து வருகிருர். சீக்கி ரத்திலேயே சில 'மாடல்'கள் தயா ரித்து எடுத்து வருவதாகச் சொன் னர். ஜப்பானில் உள்ள ராட்டைகள் இங்கே உள்ளவைகளைக் காட்டிலும் நான்கு மடங்கு நூலைக் கொடுக் கின்றன. சீனுவிலும் ஒருவித ராட்டையைப் பார்த்தோம். பெடலை அழுத்தினல் அது சுற்று கிறது. அதற்கு 12 கதிர்கள் இருக் கின்றன. மின்சாரத்தினல் ஓடு கிறதோ என்று சந்தேகப்பட்டோம். இல்லை; காலால்தான் அழுத்தித் திருப்புகிருர்கள். அந்த ராட்டை மாதிரி ஒன்று வேண்டுமென்று நாங்கள் கேட்டோம். இந்த விஷயத் தில் சீனு, ஜப்பானைக் கொஞ்சம் பார்த்துக்கொண்டு நமக்கு வேண்

டியபடி நாம் மாறுதல் செய்து கொள்ளலாம். அநேகமாய் எல்லாருமே ராட்டை சுற்றுகிறார்கள்.

மற்ற விவரம் அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன்.

* * *

இதுதான் உனக்கு வேண்டியது, தங்கச்சி. எவ்வளவு நன்றாக இருக்கிறது, பார்த்தாயா? சொன்னேனே: நம் பக்கத்து வீட்டில், அப்படி இருந்தால் உருப்பட்டு விடலாம் எல்லாரும்!

இன்று ஒரு பட்சணம் செய்தேன். சுமாராக இருந்தது. வாயில் போட்டுக்கொள்ள ஏதாவது வேண்டுமோ இல்லையோ? செய்வது சுலபந்தான். ஆழாக்கு அரிசியை எடுத்து ஊறவை. நன்றாய் வெண்ணெய்போல் ஆட்டுகல்லில் அரைத்துக் கொஞ்சம் உப்புப் போடு. தேங்காயை உடைத்துத் துருவிக் கொஞ்சம் வெல்லமும் பொடி செய்து துருவலுடன் கலந்து வைத்துக்கொள். வேண்டுமானால் வாசனைக்குக் கொஞ்சம் ஏலம் போடு. அரைத்த மாவைச் சின்னச் சின்ன உருண்டையாக உருட்டி ரொட்டி போல் தட்டி, அதன் நடுவில் இந்தப் பூரணத்தை வைத்து நான்கு பக்கத்திலும் பொட்டலம்போல் மடித்து விடு. எண்ணெயோ நெய்யோ ஒன்றும் வேண்டாம். தோசைக் கல்லில் போட்டு இரண்டு தடவை திருப்பு. தின்னும்போது கொஞ்சம் வெண்ணெய் வேண்டுமானால் போட்டுக்கொள். நன்றாக இருக்கும். உனக்குத் தித்திப்புப் பிடிக்காவிட்டால் தேங்காய்த் துருவல் மட்டும் வை. எல்லாரையும் நான் விசாரித்ததாகச் சொல்.

—உன் அன்புள்ள அக்கா.

கன்றுக்குட்டி ரகசியம்

அமெரிக்க ஞானி எமெர்ஸன் எத்தனையோ வேதாந்தம், விஞ்ஞானம், சரித்திரம் எல்லாம் கற்றிருந்தார். ஆனால், ஒரு சிறு கன்றுக்குட்டியைச் சுலபமாக ஓட்டிச் செல்லும் சூட்சுமத்தை அந்த எதிலும் அவர் காணவில்லை.

கன்றுக்குட்டியின் காதை அவருடைய மகன் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு முன்னே இழுத்தான் தகப்பனார் அதன் பின்சப்பையைப் பிடித்து மிக்க ஊக்கத்தோடு முன்னே தள்ளினார். கன்றுக்குட்டியோ வெகு பொறுமையோடு இம்மியும் நகராமல் பிடிவாதம் பிடித்தது. ஞானியின் முகம் சிவந்தது. வெண்மையான அவர் நெற்றியிலே முத்து முத்தாய் வேர்வைத் துளிகள் அரும்பின.

அப்போது அங்கே வேலைக்காரப் பெண் தற்செயலாய் வந்தாள். அவள் ஐரிஷ்காரி. அவளுக்குச் சிரிப்பு வந்தது. இவர்களை ஒதுங்கச் சொல்லிவிட்டு, கன்றுக்குட்டியின் வாயில் ஒரு விரலைத் திணித்தாள். தாய்ப் பசுவிடம் பால் குடிப்பதுபோல் அந்த விரலைச் சூப்பிக்கொண்டே, கன்றுக்குட்டி சந்தோஷமாய் அவளைப் பின்தொடர்ந்து கொட்டகைக்குள் நுழைந்தது.

மகன் பல்லை இளித்தான். தந்தையோ சிந்தனையில் ஆழ்ந்துவிட்டார்; கையைக் கழுவினார். தமது பத்திரிகையில் இது பற்றி ஒரு பெரிய பிரகடனத்தை வரைந்தார். அது இதுவே: "காரியம் செய்யக்கூடிய மக்களைத்தான் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது."

—பிலிபஸ் ரஸ்ஸெல்.

க்விஸ் விடை

(17 - ஆம் பக்கத்திலுள்ள கேள்விகளுக்கு விடை)

சரித்திரம்:

1. 1942 ஏப்ரல்.
2. 1943.
3. 1945 ஆகஸ்டு 15.

விஞ்ஞானம்:

1. தவறு. பூமிக்கு ஆகர்ஷண சக்தி (க்ராவிடி) உண்டென்று அவர் காலத்தக்கு முன்னேயே தெரியும். சகல வஸ்துக்களும் ஒன்றை ஒன்று இழுக்கின்றன என்ற விதியைத்தான் (க்ராவிடேஷன்) அவர் நிர்ணயித்தார்.

2. (இ) எதிர்த் திசையில் சுற்றும்.

சரியா, தவறு?

1. தவறு. சென்னை மாகாணத்தில்கூட மிகவும் கிழக்கில் அது இல்லை. விசாகபட்டணம் அதை விடக் கிழக்கு.

2. சரி.

3. முன்பாதி தவறு; பின்பாதி சரி.

போது:

1. எள், புல், பருத்திக்கொட்டை இந்த மூன்றிலும் எடுக்கிறார்கள். தினையில்தான் எடுப்பதில்லை.

2. ஒவ்வொரு ஜில்லாவும் மற்ற நான்கு ஜில்லாக்களையும் தொடும் படியாக ஐந்து ஜில்லாக்கள் அமைந்திருப்பதே இல்லை. அதனால்தான் ஐந்தாவது வர்ணம் தேவைப் படுவதில்லை.

3. சைனு பஜார்.

ஸ்விக்:

1. 'வேலை இல்லா ஊருக்கு ராஜா ஏன்?' இது ஒரு தமிழ்ப் பழமொழியின் ஒரு பாதி. மறு பாதியைப் பூர்த்தி செய்வீர்களா?

2. ஒட்டகம் பல நாள் வரையில் பட்டினிகிடந்தால் தாங்கிக்கொள்ள உதவும் உணவுச் சத்து அதன் எந்த அங்கத்தில் உள்ளது?

3. 1,86,000 - இந்த எண் உங்களுக்கு எதை ஞாபகப்படுத்துகிறது?

4. காட்சி தோன்றுவது எதில்?

5. மூக்குக் கண்ணாடி மூக்குக்கு உதவுமா?

6. இதிலே இதுவரை நீங்கள் கண்டுபிடிக்க முடியாமல் தவித்தவை மொத்தம் எத்தனை கேள்விகள்?

யுக்தி:

200 வருஷத்துக்குப் பின்னால் கிறிஸ்து பிறக்கப்போகிறார் என்று தெரிந்து, கி. மு. 200 என்று அந்தக் காசுகளில் போட்டிருப்பார்களா? இதை யார் நம்புவார்கள்?

சிறுவனின் சந்தேகம்

ஆறு வயதுச் சிறுவன் ஒருவன் தன் தகப்பனாரோடு மிருகக்காட்சிச் சாலைக்குப் போயிருந்தான். உள்ளே நுழைந்ததும் ஒரு கோவேறு கழுதை அவன் கண்ணில் பட்டது. "அப்பா, அப்பா! இது கறுப்புக் கோடு போட்ட மஞ்சள் மிருகமா? மஞ்சள் கோடு போட்ட கறுப்பு மிருகமா? சொல்லேன்" என்று கேட்டான்.

—'இமாஜெஸ் டு மாண்டே,' பாரிஸ்.

சிறு கதை:

கறுப்புப் பெண்

மூலம்: எல். எஸ். சேஷகிரி ராவ்

மொழிபெயர்ப்பு: ஜயலக்ஷ்மி ஆர். ஸ்ரீநிவாசன்

*கர்நாடக சாகித்திய பரிஷத்தின் பத்திரிகையான **'கன்னட நுடி'** நடத்திய வருஷாந்தச் சிறு கதைப் போட்டி ஒன்றில் முதல் பரிசு பெற்றது இந்தக் கதை. ஒரு சின்னஞ் சிறு குழந்தையின் கள்ளமற்ற மனத்திலே எழும் ஆசையையும் அதனால் விளையும் விபரீதத்தையும் இது உருக்கமாகச் சித்திரிக்கிறது.*

மற்றச் சிறுமிகள் விளையாடுவதை நிங்கி கண் கொட்டாமல் பார்த்துக்கொண் டிருந்தாள். எவ்வளவு நன்றாக இருந்தது, அவர்கள் விளையாட்டு! 'என்னையும் சேர்த்துக் கொள்ளுங்கள்' என்று அவர்களைக் கேட்க ஆவல் கொண்டது அவள் மனம். ஆனால்—? தன்னையே ஒரு முறை பார்த்துக்கொண்டாள். கிழிந்து அழுக்குப் படிந்திருந்த தன் பாவாடையைப் பார்த்ததுமே, அவள் கண்ணில் நீர் ததும்பியது. அவர்கள் துணியோ—? வெள்ளை வெளேர் என்றிருக்கும் அந்தச் சின்னப் பெண்ணின் தளிர்ப் பச்சைச் சரிகைப் பாவாடை எவ்வளவு சொகுசாக இருக்கிறது! அந்த இன்னொரு பெண்ணின் ரோஜாப் பாவாடையும் பச்சை அங்கியும் எவ்வளவு அழகான ஜோடி! இதோ இந்தப் பெண்ணின் ஆகாயவர்ணத் தாவணியின்மீதுதான் எத்தனை விதமான வர்ண சித்திரங்கள்! அவைகள் பூவா, நட்சத்திரமா என்பதையேகூடத் தொலைவிலிருந்து தெரிந்துகொள்ள முடியவில்லையே! அவர்கள் எல்லாரும் ணக்காரப் பெண்கள். அதோடு கல்யாண வீட்டுக்கு வந்திருக்கிறார்கள். சொகுசான ஆடை உடுத்துக் கொண்டு ஆனந்தப் பதுமைகளைப் போல் குதூகலத்துடன் குதித்துக் கும்மாளம் அடிக்கிறார்கள்; கூட நகைகள் வேறே. ஒருத்தி கையில் தங்க வளையல் இரண்டு ஜதை; மற்றொருத்தி கழுத்தில் தங்கச் சங்கிலி; மூன்றாவது பெண்ணின் காதில் தளதளவென்று மின்னும் லோலாக்கு. நிங்கி தன் கையைப்பார்த்துக்கொண்டாள். சிவப்புக் கண்ணாடி வளையல்கள் இரண்டு அவள் கண்களைப் பிளந்தன. கழுத்தையும் காதையும் அவள் கை தானாகத் தடவிப் பார்த்துக்கொண்டது.

இவ்வளவு உயர்ந்த ஆடையாபரணங்கள் அணிந்து ஒய்யாரமாக விளையாடும் அவர்கள், விளையாட்டிலே தன்னையும் சேர்த்துக் கொள்ள மாட்டார்களா என்று எண்ணினாள் நிங்கி. ஆனால் நின்று நின்று கால்தான் வலித்தது. அவளுடன் யாரும் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. தன் தாய் 'சிபார்சு' செய்தால், ஒருவேளை விளையாட்டில் சேர்த்துக் கொள்வார்களோ என்று எண்ணி அவள் முகத்தைப்

பார்த்தாள். சென்னி வேறு ஸ்திரீகளுடன் அரட்டை அடித்து வெற்றிலை பாக்கை மென்றபடி, பற்றுத் தேய்த்துக்கொண்டிருந்தாள்.

"என்னையும் இவர்கள் சேர்த்துக் கொண்டால்? இவர்களைவிட நன்றாக எனக்கு விளையாடத் தெரியும். அதற்குள்ளாகவே இரண்டு பெண்கள் மேல்மூச்சு வாங்கிக் கொண்டு வேர்வையைத் துடைத்துக்கொண்டிருக்கிறார்களே. எனக்கு இவ்வளவு சீக்கிரம் சோர்வு உண்டாகாது. சுலபமாக இவர்களையெல்லாம் தோற்கடித்து விடுவேன்! அப்போது, 'நிங்கீ, உன்னைப்போல் விளையாட எங்களுக்கும் கற்றுக் கொடேடீ' என்று இவர்கள் கெஞ்சுவார்கள்" என்று எண்ணும்போதே, நிங்கியின் உடல் பூரித்தது. "ரோஜா வர்ணப் பாவாடைக்காரிக்கு நன்றாக விளையாடக் கற்றுக் கொடுக்கலாம், எப்படியானலும் அந்த நீலப் பாவாடைக்காரிக்கு மாத்திரம் ஒன்றும் கற்றுக் கொடுக்கக்கூடாது. அவள் ரொம்பவும் சிடுமூஞ்சி என்று தோன்றுகிறது. அவள் எவ்வளவு கெஞ்சினலும் கூட..." என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

"டீ பெண்ணே, அந்தண்டை போ."

நிங்கி தன் கனவு உலகிலிருந்து இந்த உலகத்துக்குள் வந்து விழுந்தாள். அவளுக்குக் கொஞ்ச தூரத்தில் நின்றுகொண்டிருந்த ரோஜாப் பாவாடைக்காரி அவளையே பார்த்துக்கொண்டு, "சொன்னது காதிலே கேட்கவில்லையாடீ?" என்று கேட்டாள்.

"என்னம்மா?"

"அந்தண்டை போ, வழியை விட்டு."

"ஏம்மா?"

"என் பாண்டிக்கல் உன் காலண்டை விழுந்திருக்கு, உனக்குக் கண் தெரியல்லையா?" என்று கோபத்துடன் சொன்னுள் அந்தப் பெண்.

நிங்கி கீழே பார்த்தாள். தன் கால் அருகில் விழுந்து கிடந்த கருங்கல் துண்டு ஒன்று தென்பட்டது. வழிவிட்டு நின்றாள். ரோஜாப் பாவாடைக்காரி அருகில் வந்து அதை எடுத்துக்கொண்டாள்.

மனத்தில் ஏற்பட்ட உணர்ச்சியை இப்போது அடக்க மாட்டாமல், "அம்மா, நானும் வரட்டுமா விளையாட?" என்று கேட்டுவிட்டாள் நிங்கி. தன் அருகில் மின்னல் ஒன்று பாய்ந்து வந்தால்கூட அந்தப் பணக்காரப் பெண் அவ்வளவு பிரமித்துப் போயிருக்க மாட்டாள்.

"என்ன?" என்று அவள் ஆச்சரியத்துடன் கேட்டாள்.

தான் அவ்வளவு தைரியமாகப் பேசி இருக்கக்கூடாது என்று தோன்றிற்று நிங்கிக்கு. ஆனல், வார்த்தை அவளையும் மீறி வெளிக் கிளம்பி விட்டது. அதே கேள்வியை மறுபடியும் கேட்டாள். அந்தப் பணக்காரப் பெண் அரைக் கணம் நிங்கியையே உற்றுப் பார்த்தாள். அதற்குள் நீலப் பாவாடைக்காரி, "எவ்வளவு நாழிகை? வாடீயம்மா, லலிதா" என்று கூவினள்.

அவள் பக்கம் திரும்பினள் லலிதா. "அடீ ஸரோஜா, இந்தப் பெண் சொன்னதைக் கேட்டாயா?"

"என்னவாம்?"

"இவளும் விளையாட வருகிறளாம்."

பெண்கள் எல்லாரும் கொல் என்று சிரித்துவிட்டார்கள். அவர்களுடைய சிரிப்பொலி அலை அலையாக நிங்கியின் காதில் வந்து மோதியது.

"ஆஹாஹா, சேர்த்துக்கொள்ளத் தான் வேண்டும் இந்தச் சுந்தரியை!" என்று பச்சைப் பாவாடைக்காரி கேலி செய்தாள்.

நிங்கி பயந்துகொண்டே, "நான் ஏன் விளையாட வரக்கூடாது?" என்று கேட்டாள்.

"நீ வேலைக்காரி வீட்டுப் பெண்" என்று பதில் சொன்னாள் லலிதா.

"அதனால் என்ன?" என்று வெடுக்கென்று நிங்கி கேட்டாள்.

"உன் உடம்பு வர்ணத்தைப் பார்த்துக்கொள். எவ்வளவு கறுப்பு! அப்பப்பா! பார்க்கச் சகிக்கவில்லை" என்று முகத்தைக் கோணிக் கொண்டு சொன்னாள் ஸரோஜா.

நிங்கியின் கண்ணில் நீர் பொங்கியது. தன் உடம்பைப் பார்த்துக் கொண்டாள். ஆமாம், அவள் உடம்பு கறுப்புத்தான்; சாந்துக் கறுப்பு, கரிக் கறுப்பு, இரும்புக் கறுப்பு! அவள் உடம்பு ஏன் கறுப்பாக இருக்கிறது? லலிதா எவ்வளவு வெளுப்பாக இருக்கிறாள்! அவள் பாவாடை அவள் உடம்பு நிறத்துக்கு எவ்வளவு நன்றாகப் பொருந்தியிருக்கிறது! ரத்ன சிவப்பு நிறமாயிருக்கிறாள். ஆனால், தனக்கு ஏன் இந்தக் கோரமான கறுப்பு வந்தது? நிங்கியின் பார்வை ஸரோஜாவின் பக்கம் திரும்பியது. அவள் மறுபுறம் பார்த்துககொண்டு நின்றாள். நிங்கி மகிழ்ச்சி கொண்டாள். ஓ, ஸரோஜாவும் கறுப்புத்தான்! "நீயும் கறுப்புத் தானே?" என்று அவளுக்கு அழகு காட்ட வேண்டுமென்று உதட்டை அசைத்தாள். அதற்குள் நிங்கியின் பக்கமாக ஸரோஜா திரும்பினாள். அடேடே! அவள் முகம் அவ்வளவு கறுப்பில்லை! அவள் கை கால் கறுப்பு; அங்கியின் நடுவில் தெரிந்த கழுத்துக் கறுப்பு.

"நிங்கீ! ஏ நிங்கீ!" என்று இந்தச் சமயத்தில் அவள் தாய் கூவினாள். அவள் அருகில் ஓடினாள் நிங்கி. "இந்தா" என்று சொல்லிக் குஞ்சாலாடு ஒன்றை மகளிடம் தாய் கொடுத்தாள். நிங்கி அதைக் கையில் வாங்கிக்கொண்டு அங்கேயே நின்றாள்.

"ஏண்டி இப்படி நிக்கறே? போறவங்க வர்றவங்களுக்கு வழி விட்டு நில்" என்று தாய் மிரட்டினாள்.

"ஆத்தா......" என்று பயந்து கொண்டே என்னவோ சொல்ல முயன்றாள் மகள்.

"என்ன?"

"நான் ஏன் ஆத்தா கறுப்பா இருக்கேன்?"

சென்னி சிரித்துக்கொண்டே, "சாமி செஞ்ச மாதிரி இருக்கே. யார் என்ன செய்ய முடியும் அதுக்கு?" என்றாள்.

"என் முகம் ஏன் ஆத்தா வெள்ளையாக இல்லே?"

சென்னிக்கு மகளின் கேள்வி புரியவில்லை. "என்னடீ அது?" என்று மிரட்டினாள்.

இதுவரைக்கும் தடைப்பட்டிருந்த அழுகை, தாயின் இந்த மிரட்டலைக் கண்டதும் உடைப்பெடுத்துவிட்டது. நிங்கி விக்கிக்கொண்டே தன் முகத்தை அழுக்குப் படிந்த கந்தல் பாவாடையால் பொத்திக்கொண்டாள்.

தாயின் உள்ளம் குழைந்தது. "ஐயே, இதற்கெல்லாம் அழுதால் ஆகுமா?" என்று அவள் வாஞ்சையுடன் சொன்னாள்.

"என் முகம், என் முகம்......" என்று தொடங்கினாள் நிங்கி. விக்கல் அவளை மேலே பேச ஒட்டாமல் தடுத்தது.

"என்னடீ அது, உன் முகம்?"

"என் முகம்.... என் வெளுப்பாக இல்லே? அந்தப் பொண்ணுக்கு இருக்கே...... அப்படி?" என்று ராகத்துடன் இழுத்தாள் நிங்கி.

"எந்தப் பெண் அடீ?"

நிங்கி பேசவில்லை. ஸரோஜாவின் பக்கம் சுட்டிக் காட்டினாள். சென்னிக்கு இன்னும் புரியவில்லை. தான் சுத்தம் செய்துகொண்டிருந்த பாத்திரத்தை வைத்துவிட்டு எழுந்து வந்து பார்த்தாள். அப்போது புரிந்தது அவளுக்கு, பெண்ணின் கேள்வி.

பக்கென்று அவள் சிரித்துவிட்டாள்.

"அது ஒரு மாதிரி வெள்ளைப் பௌடர் இருக்கு, நிங்கி. முகத்துக்கு அதைத் தடவிக்கொண்டால், முகம் வெளேரென்று தோணும்" என்று சிரிப்பை அடக்கிக்கொண்டே சொன்னாள் சென்னி.

"அதைப் பூசினால் கறுப்பாக இருப்பவர்களின் முகமும் வெளேரென்று தோணுமா?"

"ஆமாம், நிங்கி!"

நிங்கி கொஞ்ச நாழிகை சும்மா இருந்தாள். அதன் பிறகு கொஞ்சும் குரலில், "எனக்கு அது கொஞ்சம் வாங்கித் தர்றையா, ஆத்தா?" என்று கேட்டாள். சென்னிக்குச் சங்கடமாயிருந்தது. இரண்டு மாதமாக வயிற்றுக்கே போதாது. கணவன் ஏதோ வேலை நிறுத்தமென்று வீட்டில் உட்கார்ந்திருந்தான். குடும்பத்திலோ ஐந்தாறு உயிர்கள்.

"ஐயோ, கேழ்வரகுக் கஞ்சிக்குக் கூடச் சாமி கொடுக்கல்லே. நமக்குப் பௌடர் என்னத்துக்கு, நிங்கி?" என்றாள்.

நிங்கி 'கேட்' அருகில் நின்று குஞ்சாலாடு தின்றுகொண்டே யோசனை செய்தாள். ஊம், தனக்கும் அந்தப் பௌடர் கிடைத்திருந்தால், தன் முகமும் வெளுத்திருக்கும். அதை உடம்பெல்லாம் பூசிக்கொண்டால், உடம்பெல்லாங்கூட வெளுக்குமோ என்னவோ! அப்போது அந்த ஜம்பம் பிடித்த பெண்களை மட்டம் தட்டி இருக்கலாம். அந்தக் கரிய ஸரோஜாவுக்குத்தான் எவ்வளவு அகங்காரம்! ஆனால் தனக்குப் பௌடர் கிடைக்க வழி என்ன? வாங்கிவரக் காசு ஏது? மாரியாத்தாளின் தயவால் காசு கிடைத்தால்!

கண்ணை மூடிக்கொண்டு மாரியாத்தாளைப் பிரார்த்தித்துக்கொண்டாள்.

மாலைப்பொழுது சாய்ந்து இரவின் இருள் சூழ்ந்தது. கல்யாண வீட்டுக்கு எத்தனையோ பேர் வந்து போய்க்கொண்டிருந்தார்கள். நிங்கி ஒன்றையும் கவனிக்கவில்லை. தன் யோசனையிலேயே ஆழ்ந்து கிடந்தாள்.

"அடி நிங்கி, இந்தக் குழந்தையை ஒரு நிமிஷம் இடுப்பில் வைத்துக் கொண்டிரு. இதோ வந்து விடுகிறேன்" என்று ஒரு குரல் கேட்டது.

நிங்கி தலை நிமிர்ந்து பார்த்தாள். வீட்டு எஜமானியின் இரண்டாவது பெண் ஸரோஜாவின் தாய் தன் கைக்குழந்தையை அவளிடம் நீட்டினாள்.

யந்திரம் போல் கையை நீட்டிக் குழந்தையை நிங்கி வாங்கிக்கொண்டாள். குழந்தையின் தாய் உள்ளே போனாள். குழந்தை அழ ஆரம்பித்தது. அதற்கு விளையாட்டுக் காட்டுவதற்காக, அதன் கையைப் பிடித்தாள் நிங்கி. மறு கணமே பாம்பை மிதித்தவள் போல் திகில் அடைந்தாள். குழந்தையின் கையில் பளபள வென்று மின்னும் ஒரு ரூபாய் இருந்தது: யாரோ போகும்போது குழந்தைக்குக் கொடுத்த வெகுமதி.

நிங்கியின் உடல் நடுங்கியது. மாரியாத்தாள் அதற்குள்ளாகவே தன்மேல் கருணை வைத்துப் பௌடருக்காகக் காசு அனுப்பினாளா? ஆனால் ரூபாய் குழந்தையின் கையில் இருக்கிறது. அதை எப்படி எடுத்துக் கொள்வது? சின்னக் குழந்தையின் கையில் இருக்கும் காசைத் தொடுவதா? ஆனால் மாரியாத்தாளே அதை அனுப்பி இருந்தால்....? சுற்றிலும் பார்வையைச் செலுத்தினாள், நிங்கி. நாலுபக்கமும் இருள் சூழ்ந்திருந்தது. என்றாலும் உடனே ஓடினால், கடை இன்னும் மூடி இருக்காது. பௌடர் வாங்கிக்கொள்ளலாம். நாளைக்குக் காலையில் இங்கே வரும்போது பௌடர் போட்டுக் கொண்டு வந்து இந்தப் பெண்களின் ஜம்பத்தை அடக்கவேண்டும். இப்படியெல்லாம் என்னவோ யோசனை செய்தாள்.

"அடி நிங்கி, குழந்தையைக் கொண்டுவா இங்கே." குழந்தையின் தாய் கூவிய குரல் இது. நிங்கி விழிப்படைந்தாள்; குழந்தையின் பூப்போன்ற கையைத் திறந்து ரூபாயை எடுத்துக்கொண்டு, குழந்தையைத் தாயிடம் சேர்த்து விட்டு, ஓட்டமாய் ஓடினாள்.

கடை வீதிக்கு வந்தாயிற்று. கூட்டம் இல்லாத கடையொன்றில் நுழைந்தாள்.

"என்ன வேண்டும், பெண்ணே?"

"பௌடர்."

"எந்தப் பௌடர்?"

"முகத்தில் பூசிக்கொண்டால் கறுப்பு முகம் வெள்ளையாகக் காணுதே, அது."

கடைக்காரன் சிரித்துவிட்டான். "யாருக்கு? உனக்கா?" என்றான்.

"ஊம்....இல்லை....எங்கள் வீட்டு அம்மாவுக்கு."

கடைக்காரன் அவளுடைய பணத்தை வாங்கிக்கொண்டு ஏதோ ஒரு டப்பியைக் கொடுத்தான்.

நிங்கியின் வியாபாரம் முடிவதற்கும், தடதடவென்று மழை பெய்வதற்கும் சரியாகப் போய்விட்டது. வீட்டுக்கு ஓடித் தாய்க்குக் காட்ட வேண்டும் என்று நிங்கிக்கு ஆத்திரம். பணம் ரஸ்தாவில் கிடைத்ததாகத் தாய்க்குச் சொல்லி

விடுவதென்று நிச்சயம் செய்து கொண்டாள். ரூபாயைக் குழந்தையின் கையிலிருந்து எடுத்துக்கொண்டது தாய்க்குத் தெரிந்தால், தன்னை அவள் வெட்டிப் பிளந்துவிடுவாள் என்று நிங்கிக்குத் தெரியும். அதனால் ரஸ்தாவில் ரூபாய் கிடைத்ததென்று சொல்வதே நல்லது என்று அவளுக்குத் தோன்றியது. பாழும் மழை இந்த வேளையிலா வர வேண்டும்! இப்படி நினைத்துக்கொண்டே டப்பியைத் திறந்தாள். அதிலிருந்து மதுரமான வாசனை கம்மென்று தவழ்ந்து வந்தது. மறுபடியும் டப்பியை மூடிவிட்டாள்.

மழை கொஞ்சம் குறையும் போல் தோன்றவே ஓடினாள். மழை குறைந்ததனால் ஜன நடமாட்டமும் வண்டிப் போக்குவரத்தும் அதிகரித்தன. நிங்கி ஓடியபடி கனவு கண்டுகொண்டிருந்தாள். காலையில் எழுந்ததும் குளிக்க வேண்டும். தாய் வேண்டாம் என்பாள். "குளிப்பதற்கு இன்றைக்கென்ன, யுகாதியா? தீபாவளியா?" என்று கேட்பாள். ஆனாலும் பிடிவாதம் செய்து குளித்துப் பௌடர் போட்டுக்கொள்ள வேண்டும். ஆனால் அதைப் போட்டுக்கொள்வது எப்படி? ஓ, அம்மாவே போடுவாள். அவளுக்கு எல்லாம் தெரியும். துவைத்த துணி கட்டிக்கொள்ள வேண்டும். ஆனால், துவைத்த துணியே இல்லையே! ஊம், இப்பொழுது போய், இந்த இருட்டிலேயே இடுப்புத் துணியைத் துவைத்து உலர்த்த வேண்டும். காலையில் உலர்ந்துவிடும். அதைக் கட்டிக்கொண்டு கல்யாணவீட்டுக்குப் போய் அந்தப் பெண்களிடம், "பாருங்கள், ஸரோஜா அம்மாவின் முகத்தைப் போலவே என் முகமும் வெளுப்பாக இருக்கு" என்று சொல்ல வேண்டும். அப்போது என்னை அவர்கள் விளையாட்டுக்குச் சேர்த்துக்கொள்வார்கள். அவர்களையெல்லாம் தோற்கடித்து அவர்களுடைய அலங்காரத்தை அடக்கி...

"ஏ பெண்ணே, வழி விடு."

ஜட்கா வண்டியோட்டி கூவினான். பயத்துடன் ஒரு புறமாக ஒதுங்கினாள் நிங்கி. கால் வழுக்கியது; கீழே விழுந்தாள். அருகில் பாய்ந்து சென்றது ஜட்கா.

அவள் எழுந்து கை கால்களைப் பார்த்துக்கொண்டாள். பாவாடையெல்லாம் ஒரே சேறு. காலில் சதை பிய்ந்துபோய் ரத்தம் பெருகிக்கொண்டிருந்தது. முகம் எரிந்தது. பௌடர் டப்பா தூரத்தில் விழுந்து கிடந்தது. நொண்டிக்கொண்டே போய் அதை எடுத்துக்கொண்டு நிதானமாக வீட்டை நோக்கி நடந்தாள்.

வீட்டை அடையும் வேளைக்குப் பௌடர் வாங்கி வந்த பெருமையில் நிங்கிக்கு அவள் வலியெல்லாம் மறந்துவிட்டது. "ஆத்தா" என்று கூவினாள்.

பெண்ணின் குரல் கேட்டதுமே வெளியே வந்தாள் சென்னி. "ஏண்டீ, யார் வீட்டைப் பாழாக்கப் பிறந்தாயடீ மூளி? திருட்டுத்தனம் செய்ய வெட்கமில்லையா உனக்கு?" என்று வசவு மாரி பொழிந்தாள்.

நிங்கி கல்லாகச் சமைந்து நின்றாள். அவள் தலை சுழன்றது. உடல் நடுங்கியது. தாய் அருகே வந்து அவள் தோளைப் பிடித்துக்கொண்டு, "குழந்தையின் கையிலிருந்து காசைப் பிடுங்கிக்கொள்ள மனசு எப்படி வந்ததடீ, சண்டாளி?" என்று கத்தினாள்.

"அது...அது...ரஸ்தாவில்... கிடைத்தது, ஆத்தா!"

"ஊம், கிடைத்தது! அந்த அம்மா உன் கையில் குழந்தையைக் கொடுத்தபோது நீ அதன் கையிலிருந்து ரூபாயை எடுத்துக்கொண்டாயாம். ஸரோஜா பார்த்தாளாம்."

நிங்கி மௌனமாக இருந்தாள். சென்னி மறுபடியும் கூச்சலிட்டாள். "காசை என்ன செய்யப் போகிறாய்? கொடுத்துவிடடீ, மூதேவி."

"பௌடர்...வாங்கிவிட்டேன், ஆத்தா" என்று சொல்லி, இடுப்பிலிருந்து டப்பியை எடுத்தாள், நிங்கி.

"பௌடர் எதற்கடீ உனக்கு? தேவடியாள் ஆகப்போகிறாயா?" என்று கர்ஜித்தாள் தாய். டப்பியைப் பிடுங்கிக்கொண்டு, "நட. கல்யாண வீட்டுக்கு" என்று மகளை விரட்டினாள்.

"ஆத்தா...முகம் வெளுப்பாக..." என்று விக்கிக்கொண்டே சொன்னாள் நிங்கி.

"முகம் வெளுக்குமா உன் பவிசுக்கு! திருட்டுத்தனம் செய்து முகத்திலே இன்னும் கரி பூசிக்கொண்டாய்" என்று சொல்லிய சென்னி, அவளைத் தரதரவென்று இழுத்துக் கொண்டு போனாள்.

கல்யாண வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தாயிற்று. எஜமானியம்மாள், அவள் பெண் ஸரோஜா எல்லாரும் கூடிவிட்டார்கள்.

"ரூபாயை என்னடீ செய்தாய், கள்ளி?" என்று எஜமானி அதிகாரக் குரலில் கேட்டாள்.

நிங்கி தலை கவிழ்ந்துகொண்டு கண்ணீர் சொரிந்தாள்; வாய் பேசவில்லை.

"சொல்லேண்டீ, சனியனே" என்று சென்னி உத்தரவிட்டாள். எல்லாரிடமும் நல்ல பெயர் எடுத்திருந்த தனக்கு இந்தப் பெண்ணால் இப்படி அபவாதம் வந்ததே என்று அவள் மனம் பதறியது.

நிங்கி பேசவில்லை. கடைசியில் சென்னியே சொன்னாள்: "அவளுக்குப் பௌடர் வேண்டுமென்று ஆசை வந்திட்டுதாம், அம்மா. பௌடர் வாங்கி வந்திருக்கிறாள். அவளை இந்தத் தடவை எனக்காக விட்டுவிடுங்கள். வீட்டுக்குப் போய் அவளுக்கு நான் புத்தி கற்பிக்கிறேன்" என்றாள்.

வீட்டுக்குப் போனால் என்ன உதை விழுமோ என்று நிங்கி நடுங்கினாள். என்றாலும், எஜமானி தன்னை மன்னித்துவிட்டால் பௌடர் டப்பா தனக்கே மிஞ்சிவிடும் என்று உள்ளுக்குள்ளே ஒரு சந்தோஷமும் அடைந்தாள்.

சென்னி தன் மகளைப் பார்த்து, "அடீ, தரித்திரம் பிடித்தவளே, அவர்களின் காலில் விழு. இல்லாவிட்டால் உன்னைப் போலீஸ்காரர்களிடம் கொடுத்துவிடுவார்கள்" என்றாள். எஜமானிமார்களை நமஸ்கரித்து நிங்கி மன்னிப்புக் கேட்டாள்.

"என்றைக்காவது நீ ஜெயிலுக்குப் போகிறவள்தான். நான் அனுப்பாவிட்டால்தான் என்ன? சென்னி முகத்தைப் பார்த்து நான் சும்மா இருக்கிறேன்" என்று ஆசீர்வதித்தாள் எஜமானி.

"இக்தா, என் தாயே!" - இது சென்னியின் குரல். நிங்கி காந்தக் கல்போல் திரும்பினாள். சென்னி பௌடர் டப்பாவை ஸரோஜாவிடம் நீட்டினாள்.

"ஆத்தா! ஆத்தா! பௌடர் டப்பா..." என்று கெஞ்சிக்கொண்டே முன்னால் நடந்தாள் நிங்கி. 'பட்' என்று முதுகில் அடி விழுந்தது. "வெட்கமில்லையா உனக்கு அதைக் கேட்க? சனியனே!" என்று சொல்லி, அவளைப் பிடித்து இழுத்துக்கொண்டு போனாள் சென்னி.

அப்போது அங்கே வந்த அயல் வீட்டாரிடம் தன் வீட்டுக் கல்யாண வரிசையைப் பற்றிச் சொல்லத் தொடங்கினாள் எஜமானி. "பாருங்கள் அம்மா, பிள்ளைக்குக் கொடுத்த வரதட்சிணை, சீர் எல்லாம் நாலாயிரம் ரூபாய் ஆச்சு. தவிர, கல்யாணத்துக்கே ஆறாயிரம் ரூபாய் செலவாச்சு" என்றாள். அவள் குரலில் சோகத்தை விடப் பெருமையே தொனித்தது. அவளுடைய அந்தப் பேச்சில் நிங்கியின் மௌன அழுகை கேட்கவில்லை. காரிருளில் அவள் தாய் தரதர வென்று அவளை இழுத்துக்கொண்டு போனபோது, நிங்கியினால் சரியாக அழக்கூட முடியவில்லை. யாருக்குத் தெரியப்போகிறது, அவள் துயரம்?

"அதைவிடவா ஆச்சரியம்?"

சிமோகாவில் துங்கைக் கரையில் காந்திஜி உலாவினார். அவரோடு இருந்த காலேல்கர், "நீங்கள் ஏன் கெரஸப்பா நீர் வீழ்ச்சியைப் பார்க்க வரக்கூடாது? லார்டு கர்ஸன் இதற்காகவே இந்தப் பக்கம் வந்தாராம். நாம் மறுபடி இந்த ஊருக்கு வருவது என்ன நிச்சயம்?" என்று கேட்டார்.

"இப்படி மனம் போனபடி ஊர் சுற்ற என்னால் முடியாது. நீங்கள் கட்டாயம் போய்வாருங்கள். நீங்கள் பார்த்துவிட்டு வந்தால், மாணவர்களுக்குப் பூகோளத்தில் ஏதாவது புதிய விஷயம் கிடைக்கும்."

"இந்த உலகத்திலேயே இது அற்புதக் காட்சி. நயாகராவை விடக் கெரஸப்பா ஆறு மடங்கு உயரம்; 960 அடி உயரத்திலிருந்து தண்ணீர் கொட்டுகிறது. நீங்கள் ஒரு தடவை இதைப் பார்க்கத்தான் வேண்டும்" என்று காலேல்கர் மறுபடி வற்புறுத்தினர்.

"மழைத் தண்ணீர் ஆகாயத்திலிருந்து கொட்டுகிறதே; அது எவ்வளவு உயரத்திலிருந்து கொட்டுகிறது! அதைவிடவா இது ஆச்சரியம்?" என்றார் மகாத்மா.

—'லோகமாதா'

ஆபத்தில் யோசனை

இரண்டு ஷிகாரிகள் ஒரு சமயம் வேட்டையாடக் காட்டுக்குப் புறப்பட்டுப் போனார்கள். அங்கே ஒரு புலி பதுங்கி இருப்பதைப் பார்த்தபோதுதான், 'அடாடா, நாம் துப்பாக்கியைக் கொண்டுவரவில்லையே' என்று அவர்களுக்கு ஞாபகம் வந்தது.

"இப்போது என்ன செய்வது?" என்று கேட்டான் ஒருவன்.

"என்ன செய்வதா? உனக்கு என்ன யோசனை தோன்றுகிறதோ, எனக்குத் தெரியாது. என் சம்பந்தப்பட்ட மட்டில், ஊரெல்லாம் இந்தச் செய்தியைப் பரப்பச் சித்தமாகிவிட்டேன்" என்று சொல்லி ஓட்டம் பிடித்தான் மற்றவன்.

வாழ்க்கையே கலை

காகா காலேல்கர்

மொழிபெயர்ப்பு:

கா. ஸ்ரீ. ஸ்ரீ.

கையிலே ஓர் ஆபரேஷன் நடந்த போது, "எனக்கு மயக்க மருந்து வேண்டாம். ஆபரேஷனின் ஒவ்வொரு நிலையிலும் எனக்கு உண்டாகும் துன் பத்தை நான் உணரவேண்டும். அதை என் நண்பர்களுக்கு விரிவாகச் சொல்ல வேண்டும். அப்போது இந்தத் துன் பமே என் வாழ்வில் குன்ருத ஆனந்த மாகிவிடும்" என்ருர் காகா காலேல்கர். இவர் காந்திஜீயின் குஜராத் வித்தியா பீடத்தில் ஆசிரியராக இருந்தவர். பாரதநாடு, பர்மா, ஸிலோன் முதலிய தேசங்களை முழுவதும் சுற்றிப் பார்த்த வர். பூகோளம், சரித்திரம், கல்வி ஆகிய விஷயங்களில் நிபுணர். மகாத்மாஜி வாழ்ந்த இடங்கள், உப யோகித்த பொருள்கள், எழுதிய இலக் கியம் ஆகிய எல்லாவற்றையும் பர்து காக்கும பணியை இப்போது இவ ரிடம் ஒப்பித்திருக்கிருர்கள்.

கலா - ஏக் ஜீவன்தர்சன் (புஸ்தகம்: ஹிந்தி). காப்பிரைட் உரிமையாளர்: காகா காலேல்கர். பிரசுரித்தவர்: ஸஸ்தா ஸாஹித்ய மண்டல், டில்லி.

வாழ்க்கையே கலை

சேலையின் அழகுக்குக் கரையும் தலைப்பும் அவசியமாக இருப்பதுபோல, வாழ்க்கையின் ஆனந்தத்துக்கு இலக்கியமும் சங்கீதமும் கலையும் அவசியம். கரை போடாமலே சேலை நெய்ய முடியாது என்பதில்லை; ஆனால் அது இருந்தால்தான், சேலை சேலையாகத் தென்படுகிறது. அதே மாதிரி, இலக்கியமும் சங்கீதமும் கலையும் இல்லாமலே நாம் உயிரோடு இருக்க முடியும் என்றாலும், அதை நாம் வாழ்க்கை என்று சொல்ல முடியாது. கரையும் தலைப்பும் சேலையின் கவர்ச்சிகரமான அம்சம்; ஆனால் அதன் முக்கிய அம்சமல்ல. வெறும் கரையையோ தலைப்பையோ யாரும் உடுத்துவதில்லை. என்னதான் அழகும் மதிப்பும் இருந்தாலும், அவற்றைத் தனியே வைத்துக்கொள்வதால் நமக்கு ஒரு பயனும் இல்லை. சேலையோடு இணைந்தால்தான் கரைக்கும் தலைப்புக்கும் பெருமை. நம்முடைய வாழ்க்கைக்கு அலங்காரமாக விளங்குவதில்தான் கலைக்கு வெற்றியும் அழகும்.

வாழத் தெரியாத கலைஞன்: இலக்கியம், சங்கீதம், கலை ஆகிய மூன்றும் தமக்குள் நெருங்கிய தோழமை கொண்டவை; ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை. இவை மூன்றும் கலப்பதனால்தான் வாழ்க்கை அதிசயமான எழிலும் மணமும் பொருந்தியதாகிறது. ஆனால் வரவர இவை மூன்றும் தனித்தனியே ஸாம்ராஜ்யங்களை ஸ்தாபித்துக்கொண்டு, தனியரசு செலுத்த முயலுகின்றன. இந்த முயற்சி இன்று மட்டுமல்ல; எப்போதுமே நடப்பதுதான். ஆனால் எப்போதும் முடிவிலே தோல்விதான். 'நான் சங்கீதத்தை மட்டுமே உபாசிப்பேன். இந்த நாதப் பிரம்மமே எனக்கு மோட்சம் தரும்' என்று சொல்லி, காயனசாரியர்கள் சிலர், சங்கீதத்தைத் தன்மயமாக உபாசித்தார்கள். பழங்காலத்து ஆசாரியர்களிடம் இந்த ஒப்பற்ற நிஷ்டையோடு தெய்விகமான வாழ்க்கைச் செல்வமும் கலந்திருந்தது; அதனால்தான் சங்கீதத்தின் வாயிலாக, அவர்கள் தம் வாழ்க்கையை மிகவும் உன்னதமாக்கிக்கொள்ள முடிந்தது. ஆனால் இன்று அவர்களைப் பின்பற்றுகிறவர்கள், 'வாழ்க்கையில் ஏதாவது ஒரு துறையைப் பூர்ணமாக விகசிக்கச் செய்ய வேண்டுமானால், முழு வாழ்க்கையையுமே மலர்விக்க வேண்டும்; அப்படிச் செய்யாவிட்டால், ஒரு தரப்பான வாழ்க்கை நம்மை அழித்துவிடும்' என்ற உண்மையை உணருவதில்லை. நான் எத்தனையோ பாடகர்களைப் பார்த்திருக்கிறேன்; இவர்களுக்கு வெறும் பாட்டுத்தான் தெரியும். சமூகத்தில் மரியாதையாகப் பழக இவர்களுக்குத் தெரிவதில்லை. இலக்கிய விஷயமாக ஒன்றுமே தெரியாது; ரசிகத் தன்மையைக் கண்டால் துவேஷம்; பித்துக்கொள்ளியான சுபாவம் - இதையெல்லாம் பார்த்தால், 'சங்கீத வித்தை இந்த ஆசாமியினிடம் வந்து எப்படியோ சிக்கிக்கொண்டதே!' என்றுதான் நினைக்கத்

தோன்றுகிறது. ஓவியக் கலையிலும் அநேகமாக இப்படித்தான் இருக்கிறது.

இலக்கிய விஷயம் இப்படியல்ல. வாழ்க்கை என்னும் தீட்சையில் முனைந்து, முழுப் பண்பாட்டையும் பெற்றாலொழிய, இலக்கியச் சாதனைக்கு அர்த்தமே இல்லை. சமூகம் முன்னேற வேண்டுமானால் இலக்கியம் வளரவேண்டும். சமூக வாழ்க்கையில் இலக்கியத்துக்கு உள்ள ஸ்திரத்தன்மையும் மதிப்பும் சங்கீதத்துக்கும் கலைக்கும் கிடைக்கவில்லை. இலக்கியம் தன்னுடைய இந்தப் பெருமையை அறிந்து, சங்கீதத்தையும் கலையையும் தன்னோடு சேர்த்துக்கொண்டு, அவற்றுக்கு உன்னதமான உணர்ச்சியை ஊட்டி, வாழ்க்கையில் நாலு புறத்திலும் அவை பரவித் தொண்டு செய்யும்படி விடவேண்டும். இப்படி முழுதும் வளர்ந்த பின்புதான் அவை தனித் துறையில் இறங்கலாம்.

சுவாமி விவேகானந்தர் வாழ்க்கைத் தீட்சையைப் பெற்றிராவிட்டால், வெறும் சந்நியாச பலத்தினாலும் வேதாந்த பலத்தினாலும் மேல்நாட்டைத் தட்டி எழுப்ப அவரால் முடிந்திராது. சந்நியாசத்துக்காகவும் வேதாந்தத்துக்காகவும் அவர் என்ன செய்தாரோ, அதைத்தான் வாழ்க்கையிலே தீட்சை பெற்ற ஒருவர், சங்கீதத்துக்காகவும் செய்யவேண்டும். இந்தக் காலத்தில் வெற்றியடைந்த கலைஞர்கள் மகாத்மாக்களாகவோ தபஸ்விகளாகவோ பக்தர்களாகவோ இல்லாமலிருக்கலாம்; அவர்களிடம் இடையறாத ஊக்கமும் தீவிர உணர்ச்சியும் மென்மையும் கலைக்காகவே தம்மை அர்ப்பிக்கும் உன்னத சாதனையும் இருக்கின்றன என்பதில் சந்தேகமே இல்லை; ஆனால் இவர்களுக்கு முழுப் பண்பாடும் கிடைத்திருக்குமானால், ஒரு நிமிஷத்திலே இவர்கள் தமது கலையை வாழ்க்கையாகிய மகாராணியின் சிம்மாசனத்திலே வீற்றிருக்கச் செய்திருப்பார்கள்.

இலக்கியகர்த்தாக்களிடம் தர்மதேஜஸும், சமூகத்துக்கு நன்மை செய்யும் விருப்பமும், பக்தியமுதமும், அறிவு வேட்கையும் இருந்தவரைக்கும், வாழ்க்கைக்கு அவர்களே தலைவர்களாக இருந்தார்கள். இன்றுங்கூட, வாழ்க்கையில் வல்லவர்கள் பெரும்பாலும் இலக்கிய நிபுணர்களாக இருக்கிறார்கள். வாழ்க்கையின் தீவிரம் எங்கே இருந்தாலும் அந்த இடத்திலிருந்து இலக்கிய சக்தி அருவியாகப் பாயத்தான் வேண்டும்.

கலைக்கு வியாக்கியானம்: கலையின் ஆனந்தத்தை அநுபவித்துக்கொண்டே கலையின் முழு வடிவத்தையும் அறியும் நேர் வழியை விட்டு அதற்கு வியாக்கியானம் செய்யப் புகுவது, ஓர் அழகிய மலரை மகிழ்ச்சியோடு கண்டு மோந்து அநுபவிப்பதை விட்டு, கூரிய கத்தியினால் அதைத் துண்டு துண்டாக்கி, அதன் அமைப்பை ஆராய்வது போலத்

மோந்து அநுபவிப்பதை விட்டு...

தான். வியாக்கியானத்தின் மூலமாகக் கலையநுபவம் தெளிவாகலாம்; ஆனால் வியாக்கியானத்தைக் கொண்டு இதுவரைக்கும் யாராவது கலையைப் பூர்ணமாக அநுபவித்ததாக எனக்குத் தோன்றவில்லை.

ஒழுக்கம் அல்லது சமயாசாரத்துக்கு வியாக்கியானம் செய்வது எவ்வளவு கஷ்டமோ, அவ்வளவு கஷ்டம் கலைக்கு இலக்கணம் வகுப்பது. தாயும் தந்தையும் ஆசானும் உடைய இளைஞர்கள் பெரியோர்களிடம் பழகி நல்லொழுக்கத்தின் ரகசியத்தை அறிவது போல, வாழ்க்கை ரசிகர்களும் பண்பாட்டில் வல்லவர்களுமான கலைஞர்களிடம் பழகி அவர்களுடைய முயற்சிகளை ஊன்றிக் கவனித்தால், நாம் கலையை உணர முடியும். உன்னதமான கலையல்லாத ஒன்றைக் கலையுருவிலே ஒருவர் நம் முன் வைத்தாலும் அப்போது நமக்கு வெறுப்புத்தான் உண்டாகும்.

ஆகையால் கலையை ஆராய்வதற்குத் தர்க்க முறையையோ தத்துவ முறையையோ பின்பற்றிச் சர்ச்சை செய்வதைவிட, 'எனக்கு இது பிடித்தது. எனக்கு இது பிடிக்கவில்லை. இதற்குக் காரணங்கள் இன்னவை' என்று ஒருவன் சொன்னால், அது கலைக்கும் கலையன்பு கொண்ட சமூகத்துக்கும் பெருத்த தொண்டு செய்வதாகும்.

இயற்கையின் அழகு கலையல்ல; ஆயினும் கலையைத் தூண்டும் சக்தி அதற்கு உண்டு. கலையின் பல மூல வடிவங்களை நாம் இயற்கையிலிருந்துதான் எடுத்துக்கொண்டிருக்கிறோம். இயற்கையின் எழிலைக் கவனித்துப் பார்த்ததும் நாம் பல உணர்ச்சிகளை வெளியிடுகிறோம். எழிலோடு உணர்ச்சிகள் சேர்ந்தவுடனே படைப்புத் திறன் எழுகிறது. அந்தத் திறன், தன் கற்பனையின் பலத்தால், புதிய புதிய உருவங்களையும் வடிவங்களையும் வர்ண விந்நியாசங்களையும் ஸ்வர விஸ்தாரங்களையும் உண்டாக்குகிறது. உணர்ச்சிகளின் எழுச்சி, அவற்றின் புதிய படைப்பு, அவற்றின் போராட்டம், அவற்றிலிருந்து உண்டான கலவரத்துக்குப் பிறகு கிடைக்கும் திருப்தி - இத்தனையும் கலையின் வடிவந்தான். மண், கல், மரம், உலோகம், கண்ணாடி, மெழுகு, யானைத் தந்தம் முதலிய பொருள்களின் மூலமாக இந்தக் கலையை வெளியிட்டாலும் சரி; நிறம், கோடு, நூல் முதலியவற்றைப் பயன்படுத்திக்கொண்டாலும் சரி; பேசும் அல்லது பாடும் சொற்களையோ ஊமை அபிநயத்தையோ உபயோகித்தாலும் சரி; எங்கும் கலை என்பது ஒன்றுதான். சிற்பக் கலை, நகர அமைப்புக் கலை, சமூக அமைப்புக் கலை, மகாகாவியத்தை நிர்மாணிக்கும் கலை - எல்லாம் ஒன்றுதான். பொருள்களைத் திரட்டுவதனால் கலை பிறப்பதில்லை. மனித உள்ளத்திலே பிறப்பது கலை.

ஆபத்து - ஆனால் பிரம்மானந்தம்: உள்ளத்தில் இருக்கும் அருவான பாவங்களை உருவுள்ள பொருள்களின் வாயிலாக வெளியிடுவதுதான் கலையின் முக்கிய வேலை. இந்த உருவுள்ள பொருள்கள் அருவான பாவங்களுக்குக் கருவியாக இருப்பதோடுகூட, மனிதனுடைய கவனத்தைத் தங்களிடம் கவர்ந்து, அவனுடைய புலன்களுக்குச் சிற்றின்பத்தைத் தந்து திருப்திப்படுத்துமானால், அமகே கலை செத்துப்போயிற்று என்று

சொல்லலாம். அப்படிச் சாகாவிட்டால், அதில் விகாரமாவது கட்டாயம் வந்தே தீரும்.

ஆகையால்தான் கலையும் கேளிக்கையும் பக்கத்திலேயே இருந்தும் கூட - வாழ்க்கையில் இவை இரண்டுக்கும் உரிய இடம் இருந்தும் கூட - இவை ஒன்று சேருவதில்லை. தியாகியாக இருப்பவன் வாழ்க்கையிலுள்ள கவர்ச்சிகளைக் கண்டு விலகி ஓடுகிறான்; தவசி அவற்றை வெல்கிறான்; தாந்திரிகன் அவற்றுக்கு வசப்பட்டுங்கூட, அவற்றின் வாயிலாகப் பரம்பொருளைக் காண வீண் முயற்சி செய்கிறான்; கலையோ அவற்றில் ஒன்றுமல்ல நடுநிலையில் நின்று ஆராய்ந்து பார்த்து அவற்றில் ஏதாவது ஒரு விஷயத்தை நடுநிலையான சாதனமாக்கிக் கொண்டு, பிரம்மானந்தத்துக்கு இணையான ஆனந்தத்தை அநுபவிக்கிறது. கலைச் சாதனை செய்வது மிகவும் கஷ்டம்; ஆபத்து. ஆனால் இந்தச் சாதனையின் சூட்சுமத்தை அறிந்தவனுக்கு, இது ஆரம்பம் முதல் கடைசிவரைக்கும் ஆனந்தத்தையே கொடுக்கும்.

வாழ்க்கை வீரன்: சத்தியம் அழகுதான்; அழகும் ஒரு பெரிய சத்தியந்தான்; ஆனால் எல்லா உண்மைகளும் கவர்ச்சிகரமானவை அல்ல; அழகு அநுபவங்கள் எல்லாமே உண்மையானவையும் அல்ல. உண்மை ஆராய்ச்சியும் கலை அநுபவமும் வெவ்வேறு வேலைகள். தத்துவக் கோட்டையைப் பிடிப்பதற்கு இவை இரண்டும் வெவ்வேறு வழிகள். கலைஞன் எங்கே இளைப்பாறுகிறானோ, அங்கிருந்துதான் சத்தியசோதனைக்காரன் வேலையைத் துவக்குகிறான். கலை, மின்னல் வீச்சைப்போன்றது. சத்திய ஆராய்ச்சி, விஞ்ஞானியினுடைய சோதனையைப் போல ஆழ்ந்தது.

கலைப் பார்வை இல்லாமல் யாரும் உண்மையை ஆராய முடியாது. ஆகையால் பெரிய பெரிய விஞ்ஞானிகளும் தத்துவதரிசிகளும் முன்னால் கலைஞர்களாகவே இருந்தவர்கள். இதனால் கலைஞர்களுக்கு மதிப்பு வளர்ந்திருப்பது போலவே பொறுப்பும் வளர்ந்திருக்கிறது. தங்கள் கலையைக் கண்டே அவர்கள் திருப்தி கொண்டு சும்மா இருந்துவிட்டால், அவர்கள் வாழ்க்கைத் துரோகிகளாகக் கருதப்படுவார்கள். இதுவரைக்கும் ரசிகர்கள், "கலைஞனுடைய கலைப்பொருளை மட்டுமே பார்; அவனுடைய வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்காதே" என்று சொன்னார்கள். ஆனால் இனிமேல், "கலைஞன் 'வாழ்க்கை வீரன்' ஆகாவிட்டால் சமூகம் அவனுக்கு எந்தத் தண்டனையையும் கொடுக்கலாம். சும்மாக் கிடைத்த மூலதனத்தை வைத்துக்கொண்டு சுகபோகமாக வாழும் காலம் இப்போது மலையேறிவிட்டது" என்றுதான் எல்லாரும் சொல்வார்கள்.

கலையிலே இன்பம்: அன்றாட உலகத்தில் நாம் அநுபவிக்கும் இன்பத்துக்கும் கலையின்பத்துக்கும் அடிப்படையிலேயே வேற்றுமை இருப்பதை எல்லாக் கலைஞர்களும் ஒப்புக்கொள்கிறார்கள். புலன்களும் அவை சம்பந்தமான விஷயங்களும் நமக்கு இன்பம் துன்பம் ஆகிய இரண்டையும் தருகின்றன. இன்பம் உண்டானபோதும் அது நிலையாகவோ, முடிவில் ரம்யமாகவோ இருப்பதில்லை. கலையின்பம் வேறு; இன்பமோ துன்பமோ எது நேர்ந்தாலும் அதிலிருந்து ஆனந்தத்தையே எடுத்துக்கொள்கிறது கலை. துன்பத்திலே முடியும்

ஒரு நாடகத்தைக் கண்டு நாம் கண்ணீர் வடிக்கிறோம்; ஆனால் அதே சோகக் காட்சியை அடிக்கடி பார்த்தோ கேட்டோ படித்தோ ஆனந்தப்பட நாம் விரும்புகிறோம். வறுமையிலே ஒரு நிமிஷம் வாழக்கூட நமக்குத் துணிச்சல் இருப்பதில்லை; ஆனால் வறுமையின் தத்ரூபமான வர்ணனையைப் பார்த்தோ படித்தோ நம் மனத்தில் எழும் அநுதாப உணர்ச்சி நமக்கு எப்போதும் பிடித்துத்தான் இருக்கிறது.

மனிதன் துன்பத்தை விரும்புவதில்லை; ஆயினும் வாழ்க்கையில் துன்பம் இருக்கத்தான் இருக்கிறது. துன்பம் மட்டுமல்ல, அதற்கு உபயோகமும் இருக்கிறது. துன்பத்தினால் நாம் அநுபவசாலிகள் ஆகிறோம்; நம்முடைய மனிதத் தன்மை, அல்லது கீதையின் பரிபாஷையிலே சொன்னால் நமது அத்யாத்மம் வளருகிறது. அநுதாபத்தின் பயனாக, நமது சொரூபம் இந்த உடலிலிருந்து பிரிந்து, புலன்களின் கட்டை முறித்துக்கொண்டு குறுகிய மனப்பான்மையிலிருந்து நீங்கி வளர்ச்சி பெறுகிறது; நம் உடலிலிருந்து வேறுபட்ட மனிதர்களோடும் உருவங்களோடும் சம்பவங்களோடும் ஒன்றிவிடுகிறது. மனிதசொரூபத்தின் இந்த வளர்ச்சிதான் ஆனந்தம். விஞ்ஞானச் சோதனைகள், வீரச் செயல்கள், வாழ்க்கை அநுபவங்கள் - ஆகிய எல்லாம் நமக்கு அத்யாத்ம வளர்ச்சியாகிய ஆனந்தத்தைத் தருகின்றன. மனித சொரூபத்தை உன்னதமாக்கும் இந்தக் கலை அல்லது செயல்திறமைதான் யோகம் என்பது. அத்யாத்மத்தை வளர்ப்பதுதான் கல்வியின் நோக்கமுங்கூட. புலன்களின் வாயிலாக உண்டாகும் இன்ப துன்ப உணர்ச்சிகளை அநுபவிக்கச் செய்வது, வாழ்க்கையின் ஆரம்பப் படி. இந்த உணர்ச்சிகளை விஷயமாக்கியுங் கூட, இவற்றை முக்கியமாக்காமல், இவற்றிலிருந்து நேரடியாக அத்யாத்ம ஆனந்தத்தை விளைவிப்பதுதான் கலையின் செயல்; இதில்தான் அதற்குப் பெருமையுங்கூட. பஞ்ச பக்ஷ்ய பரமான்னங்களை ஒருவன் சுவையோடு உண்டால், அவனை யாரும் பெரிய வஸ்தாது என்றோ, வல்லவன் என்றோ சொல்வதில்லை. பறவைகளும் விலங்குகளும் புலனின்பத்தை நுகர்கின்றன; மனிதனும் நுகர்கிறான். இதில் அருவருப்பான விஷயம் ஏதுமில்லை; ஆனால் விஷய சுகத்தைக் காணவோ, ஞாபகப்படுத்தவோ, சிந்திக்கவோ பிறரை 'வெற்றிலை பாக்குக் கொடுத்து அழைப்பது' அருவருக்கத் தக்கது.

இந்தப் புலனின்பத்தின் அடியாகப் பிறக்கும் பாவனையின் விஷயம் வேறு. இந்தப் பாவனையின் ஆனந்தம் காவியத்துக்கும் கலைக்கும் விஷயமாகலாம். இந்தப் பாவனை பல உருவில் இருந்தாலும், எதனால் அத்யாத்மம் வளர்ச்சி அடைகிறதோ அதுதான் இதில் ஆனந்தத்தைத் தரும் தத்துவம். சூரியன் உதிக்கும் போதும் அஸ்தமிக்கும்போதும் வானத்தில் பல கந்தர்வ நகரங்களைப் பார்த்து நம்மை நாமே மறந்துவிடுகிறோம்; அந்தக் காட்சிகளோடு தன்மய மாகிவிடுகிறோம். தன்மயமாகும் இந்தத் தன்மைதான் கலைக்கும் காவியத்துக்கும் ஆத்மா. காவியத்தின் ஆத்மாவைத்தான் இலக்கிய அறிஞர்கள் 'ரஸம்' என்று சொன்னார்கள். நமது உள்ளம் உருகி, கவர்ச்சிகரமான ஒரு பொருளை நோக்கிப் பாயும்போது, 'இது ரசமாக இருக்கிறது' என்று நாம் சொல்கிறோம். இதனால் நமது

சொரூபம் வளர்ச்சி யடைகிறது. புலனின்பத்தை இத்தகைய ஆனந்தமாகக் கொள்ள முடியாது; ஏனென்றால், அதன் முடிவிலே விரசமும் அருவருப்பும் துன்பமும் பச்சாத்தாபமுந்தான் நமக்குக் கிடைப்பவை. ஐரோப்பியப் பண்பாட்டில் கரை கண்டவரும், எல்லா விதமான ரசங்களையும் அநுபவித்தவருமான கெதே, எண்பது வருஷகாலம் சுகமாகவும் அமைதியாகவும் வாழ்ந்துவிட்டு, "வாழ்க்கையிற் நான் உண்மையான இன்பத்தோடு ஏழெட்டு நாள்கூட வாழ்ந்ததாகத் தெரியவில்லை!" என்று கடைசியில் சொன்னார்.

சமாதி நிலையில் மனிதனுக்கு அகங்கார மமகாரங்கள் இருப்பதில்லை. அந்தச் சமயத்தில் உண்டாகும் அநுபவம் அபௌருஷேயம்; வர்ணிக்க முடியாதது. வேற்றுமையே இல்லாத இடத்தில் விரிவுரைக்கோ வர்ணனைக்கோ இடம் ஏது? சமாதி கலைந்த பிறகு, சமாதி காலத்து அநுபவத்துக்கும் சாதாரண காலத்து அநுபவத்துக்கும் இடையே வேற்றுமை தோன்றுகிறதே, அதிலிருந்துதான் கலை பிறக்கிறது. விசுவாத்ம ஐக்கிய உணர்ச்சியும் ஸர்வாத்ம ஐக்கிய உணர்ச்சியுமே பேரானந்தம். சமாதி நிலையில் கணநேரம் அநுபவித்த இன்பத்தைப் புலன்களின் வாயிலாக வெளியிட்டு, பிறருக்கு அதைக் காண்பிக்கும் முயற்சிதான் உண்மையான காவியம்; அதுதான் கலை. இதனால்தான் உண்மையான கலை உள்ளத்தை உன்னதமாக்குகிறது; வேற்றுமையைப் போக்குகிறது; உயர்ந்த ஆத்மாக்களை நம் அருகில் கொண்டுவருகிறது; சமூகத்திலுள்ள பல கடுமையான சிக்கல்களைச் சுலபமாக விடுவிக்கிறது. இதுதான் கலையின் பயன்.

பிண்டத்திலுள்ளது அண்டத்திலே: தூயகலையின் மூலமாக, வாழ்க்கையிலுள்ள ரசங்கள் யாவும் நமக்குக் கிடைக்குமானால், அப்போது வாழ்க்கை வீழ்ச்சியடையும் என்ற பயமே அடியோடு இராது. ரசத்தின் பெயரால் நாம் வேறு பொருள்களைத் தேடும்போதுதான் கெடுதல் ஏற்படுகிறது. துணிச்சலும், உற்சாகமும், வீரமும், ஆபத்தை எதிர்க்கும் தீவிர ஆவலும் இருந்தாலொழிய, எந்தக் கலையும் தன் முழு உருவத்தோடு வெளியாக முடியாது என்று நான் கருதுகிறேன். பிரம்மாண்டமான தன்மையும் வீரமும் இணைபிரியாதவை. ராவணன், துரியோதனன், ஜராஸந்தன், விருத்திராசுரன், மில்டனுடைய சைத்தான் ஆகிய இத்தனை பேரும் நல்லதனத்துக்கு எதிரிகளாக இருந்தாலுங்கூட, இவர்களிடத்தில் வீரம் இருக்கிறது; பிரம்மாண்டமான தோற்றம் இருக்கிறது; என்றும் தணியாத பேராவல் இருக்கிறது. அதனால்தான் இவர்களிடம் கவிகளும் கலைஞர்களும் மனத்தைப் பறி கொடுக்கிறார்கள். வல்லமையும் எழுச்சியும் பரப்பும் உன்னதமும் கம்பீரமும் வாய்ந்த எதுவும் இயற்கையிலேயே



பிரம்மாண்டமாக இருப்பதால் கலை நிரம்பியவை....

அழகாகத்தான் இருக்கும். பாலை வனத்து ஓவியங்களையும் வர்ணனைகளையும் பாருங்கள்; அவற்றில் ஒன்றுமே இல்லை; இதுதான் அவற்றின் பெருமையுங்கூட.

தென்னிந்தியாவிலுள்ள உயர்ந்த கோபுரங்களும், பீஜப்பூரிலுள்ள மசூதிகளும், பர்மாவிலுள்ள விசாலமான புத்த விக்கிரகங்களும் அழகாகவே இல்லாமற்போனாலுங்கூட, பிரம்மாண்டமாக இருப்பதால் கலை நிரம்பியவை என்றே கருதப்படும். நம் கலைஞர்கள் தமது கலைத் திறமையையெல்லாம் இந்த இடங்களில் நிரூபித்துக் காண்பித்திருக்கிறார்கள். இவற்றில் ஏதாவது ஒரு சிறு மூலையை எடுத்துக்கொண்டு பார்த்தாலும், அதில் எழிலும் பொலிவும் இருப்பது தெரியும். கலைப் பொருள் முழுவதையும் அகண்டமாக வைத்துக்கொண்டு பார்த்தால், பிரம்மாண்டமான தன்மையோடு அதில் மென்மையும், கட்டுக்கோப்பில் சரியான அளவும் தென்படும். தெய்விகமான இந்தக் கலைப் பொருள்கள், பாரத நாட்டின் பண்பாட்டுக்கு உன்னதமான அடையாளங்களாக விளங்குகின்றன. 'பிண்டத்திலுள்ளது அண்டத்திலும்' என்ற தத்துவம் இங்கே நன்றாகப் பொருந்துகிறது.

முதலாளிக்குத்தான் கலையா? — இலக்கிய அரங்கேற்றத்துக்கும் சங்கீதக் கச்சேரிக்கும் சிற்பத்துக்கும் ஓவியத்துக்கும் அழியா நிலையங்களாக நம் கோயில்கள் விளங்கியபோது, அங்கே பணக்காரர்களும் ஏழைகளும் சமமாகத்தான் கலையின்பத்தை அநுபவித்தார்கள். பெரிய பெரிய பக்தப் பாடகர்கள் கங்கைக் கரையிலே வந்து பாடியபோது அவர்களுடைய அமுதப் பாடலை ஏழைகளும் பணக்காரர்களும் சமமாகவே பருகிக் களித்தார்கள். திருவிழாக்களிலும் திருமணங்களிலும் ஜாதி வேற்றுமையைப் பாராட்டி வந்தபோதிலும் ஏழை பணக்காரன் என்ற வேற்றுமை நம் நாட்டில் இருந்ததில்லை. ஆகையால் கலையின்பமும் கலைப் பயனும் கலையினால் ஏற்படும் பண்பாடும் எல்லாருக்கும் சமமாகக் கிடைத்தன. உயர்ந்த கலைஞர்களில் சிலர் துறவறம் பூண்டு, தாம் விரும்பிய இடங்களில் ஆனந்தமாக வாழ்ந்தார்கள். பணக்காரர்களின் செல்வமோ புகழ்ச்சியோ இவர்களை அடக்க முடியாது. மிகவும் ஏழையான ஒருவன் இவர்களுக்குப் பணிவிடை செய்து உயர்ந்த கலைஞனாவது சாத்தியமாக இருந்தது.

இன்று நிலைமை மாறிவிட்டது. நம்முடைய இலக்கியமும் சங்கீதமும் கலையும் இன்று முதலாளிகளின் கைக்கும் செல்வாக்குள்ளவர்களின் கைக்கும் போய்விட்டன. கோயில்களிலுள்ள கலைச் செல்வத்தைப்பற்றி முன்பெல்லாம் மக்கள் நன்றாக அறிந்திருந்தார்கள். இன்று மியூசியங்களிலும் காட்சிச்சாலைகளிலும் காண்பிக்கப்படும் கலையை ஏழை மக்களுக்கு யாரும் விளக்கிக் கூறுவதில்லை. ஜனங்கள் மிருகங்களைப்போல அங்கே சுற்றிவிட்டு, மூக்கிலே விரலை வைத்துக்கொண்டு திரும்புகிறார்கள். மின்னல் வீசியதும் மறுபடி இருள் பரவுவதுபோல, இந்தக் கலையைப் பார்த்துவிட்டு ஏழைகள் தங்கள் அறியாமையை மனத்தில் பதிய வைத்துக்கொண்டு வீடு திரும்புகிறார்கள். கலையைக் கண்டு உற்சாகமும் ஆவலும் நம்பிக்கையும் தோன்றுவதற்குப் பதிலாக, சோர்வும் ஏமாற்றமும் அமைதியின்மையும் கொண்டு இவர்கள்

திரும்புகிறார்கள். ஏழைகளின் உண்மைத் தொண்டர்கள் இன்று போல இவ்வளவு குறைவாக, இந்தப் பழம்பெரு நாட்டில் என்றுமே இருந்ததில்லை.

கைத்தொழிலில் நுண்கலை: இன்று நாம் நுண்கலையையும் கைத்தொழிலையும் வேறு வேறாகப் பிரித்துவிட்டோம். நம்முடைய பண்பாடற்ற தன்மைக்கு இதுவும் ஓர் அடையாளம். ஒரு தடவை கர்நாடகத்தில் நான் ஒரு வீட்டில் தங்கினேன்; அது பழைய காலத்துக் குடும்பம். அவர்கள் அன்றாடம் உபயோகிக்கும் ஒரு தம்ளரில் அற்புதமான சித்திர வேலைப்பாடு அமைந்திருந்தது. சமயமும் கலையும் இணைந்த அந்தப் பாத்திரம் மிகவும் தேய்ந்து போயிருந்தது. இந்த வீட்டில் கலை வாழ்க்கையோடு பிணைந்துவிட்டது. ஒரு தடவை நான் ஒரிஸாவில் ஓர் ஏழைக் கிராமத்துக்குப் போயிருந்தேன். அங்கே சில வீடுகளில் மண்பாண்டங்களின் மேலும் உள்ளும், வீட்டுச் சுவர்களிலும் பெண்கள் விதம் விதமான நிறங்களில் சித்திரங்கள் வரைந்திருந்தார்கள். நான் ஓர் ஏழைப் பெண்மணியிடம் ஒரு மண் தட்டுக் கேட்டேன். எந்த மியூசியத்திலும் வைக்கக் கூடிய அழகுப் பொருள் அது என்று நான் நினைத்தேன். அந்தப் பெண்மணி சிரித்துக்கொண்டே, "ஒன்று என்ன தம்பி, நாலு தட்டு வேண்டுமானாலும் கொடுக்கிறேன். இப்படிச் சித்திரம் வரைந்த தட்டு இங்கே வீட்டுக்கு வீடு கிடைக்குமே!" என்று சொன்னாள். கலை அந்த ஊரிலே உயிரோடு வாழ்ந்தது.

தொழிலாளி ஒரு பித்தளைத் தம்ளர் செய்கிறான். அந்தத் தம்ளரின் முனையில் கொடியும்



'இந்தத் தம்ளரில் குழந்தைகள் கறந்த பாலைக் குடிக்கும்.'

பூவும் வரைகிறான். இவ்வளவோடு அவன் திருப்தி அடைவதில்லை. 'இந்தத் தம்ளரில் குழந்தைகள் சூடான கறந்த பாலைக் குடிக்கும்' என்ற எண்ணம் தோன்றியவுடனே துள்ளிக் குதிக்கும் ஒரு கன்றுக் குட்டியை அதில் அழகாகச் செதுக்குகிறான். அவனுடைய குழந்தைகள் சுற்றுப்புறத்தில் உட்கார்ந்து அந்தக் கன்றுக்குட்டியைப் பார்த்து ஆனந்தமாகக் கூத்தாடுகின்றன. இங்கே கைத்தொழிலுக்கும் நுண்கலைக்கும் எப்படி வித்தியாசம் கண்டுபிடிப்பது?

புடைவையிலே பல விதமான மலர்களையும் அழகுக் காட்சிகளையும் அமைப்பதைப் பார்க்கிறோம். இது வெறும் கைத்தொழில்தானா? இதில் நுண்கலை இல்லையா? சாயங்கால வேளையில் ஒரு நோக்கமும் இல்லாமல் ஊர் சுற்றக் கிளம்பினால் அது 'காற்று வாங்குவதாம்'; மலையுச்சியிலுள்ள கோயிலுக்குப் போனால் அது 'காற்று வாங்குவது' ஆகாதாம்! சாரணன் என்ற முறையில் எவ்வளவு தூரம் நடந்தாலும் அது பண்பாடு; ஆனால் நம் வீட்டில் காய்த்த மாங்காயைத் தங்கைக்குக் கொடுப்பதற்காகப் பத்து மைல்

தூரம் நடந்து போனால் அது பட்டிக்காட்டு அன்பு!

பங்களாவும் வர்க்கப் போரும்: நம்முடைய நகரத்திலுள்ள பங்களாக்களைப் பாருங்கள்; அங்கே ஸ்நானபானத்துக்குத் தேவையான எல்லா வசதிகளும் இருக்கும்; கதவுகளும் ஜன்னல்களும் திண்ணைகளும் ஹால்களும் காற்றையும் வெளிச்சத்தையும் வரவேற்கும். ஆனால் நம் வாழ்க்கையோடு கலப்பதற்கு உரிமையுள்ளவர்களோ அல்லது எவர்களின் வாழ்க்கையோடு ஒன்றிவிடுவது நமது கடமையோ அப்படிப்பட்டவர்கள்



திருடன் போல் பதுங்கிவந்து......

அங்கே தென்படமாட்டார்கள். துணி வெளுப்பவர்கள், மாடு மேய்ப்பவர்கள், செருப்புத் தைப்பவர்கள் முதலிய தொழிலாளிகள் எங்கும் தென்படுவதில்லை. அப்படித் தென்பட்டாலும், நமது வாழ்க்கையிலுள்ள அதர்மத்தை விளம்பரப் படுத்தும் ஈன நிலையிலேதான் தென்படுவார்கள். பால்காரனும், தினசரிப் பத்திரிகை கொண்டு வந்து போடும் ஏழைச் சிறுவனும், பொழுது விடியுமுன்பே திருடர் போல் பதுங்கிவந்து, பாலையும் பத்திரிகையையும் வாசலில் வைத்துவிட்டுப் போவார்கள். ஏழைகளை விலக்கிவைத்து நமது வாழ்க்கையின் ஆனந்தத்தையும் நாம் விலக்கி வைத்திருக்கிறோம். நம்முடைய திருவிழாக்கள், எல்லா மக்களுக்கும் பொதுவான திருவிழாக்களாக இல்லை. நமது இலக்கியம் இன்னமும் மக்களின் இலக்கியமாகவில்லை. நமது நாட்டில் படிக்கும் இலக்கியம், பாடும் பாட்டு, கொண்டாடும் திருவிழா, தர்மோபதேசங்கள் ஆகியவற்றை ஆராய்ந்தால், பணக்காரன், ஏழை அல்லது படித்தவன், படிக்காதவன் என்று வெவ்வேறு ஜாதிகள் ஏற்பட்டிருப்பது நன்றாகத் தெரியும்.

இன்று கிராமாந்தரத்துக்குப் போகிறவர்கள் அங்குள்ள கலையைப் புதுப்பிப்பதற்குப் பதிலாக, நகரத்திலுள்ள கலையற்ற அநாகரிகத்தையும் சோம்பலையும் கிராமங்களில் பரப்பும் தொண்டை எவ்விதப் பொருளுதவியும் இல்லாமலே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

வாழ்க்கையை நிலைக்கவைப்பது தான் கலை. இது அழிந்துவிட்டால் வாழ்க்கையில் தர்மமும் ஒழுக்கமும் அழிந்துவிடும். பிறகு சமூகம் எப்போதுமே வர்க்கப் போருக்கு ஏற்றதாகிவிடுகிறது. இப்படிப்பட்ட ஒரு போரிலே வெற்றி பெற்றால் தான் என்ன, பெறாவிட்டால்தான் என்ன?

கலைமயமான சமூக வாழ்க்கை: தனி மனிதனைப் போலவே சமூகமும், தாயும் தந்தையும் ஆசானும் உடையதாக இருக்க வேண்டும். அப்போதுதான் சமூக வாழ்க்கையில் ஆரோக்கியமும் ஆற்றலும் இருக்கும்; சங்கீதம் பரவும்; வாழ்க்கைக் கலை வளம் பெறும்; நுண்கலையும் கைத்தொழில் கலையும் ஒன்றுக்கு ஒன்று உதவி செய்யும். சமூகம் தாயும் தந்தையும் ஆசானும்

உடையதாக இருந்தால், அப்போது வர்க்கப் போருக்கே இடமில்லை. நம்முடைய பழைய ஸ்தாபனங்கள் இப்படித்தான் நடந்தன; அரசன் கூடக் குலகுருவிடம் மரியாதை வைத்துத்தான் சுகபோகங்களை அநுபவித்தான், அரசாட்சியை நடத்தினான். இன்று நம் ஸ்தாபனங்கள் மேல்நாட்டு முறையில் - தலைவர், உபதலைவர், காரியதரிசி, உபகாரியதரிசி, பொக்கிஷதார், நிர்வாகக் கமிட்டி என்னும் முறையில் - நடக்கின்றன. நமது சமூக சாஸ்திரத்தில் மாறுதல் ஏற்பட்டதனால், சமூகத்தை ஒருமுகமாகக் கொண்டு செலுத்தும் வல்லமை யாருக்குமே இல்லாமல் போயிற்று. இனிமேல் இடிபட்ட பிறகு எந்த வழி ஏற்பட்டாலும் சரிதான்.

நமது சமூகம் விழிப்படைந்ததும் நாம் ஒரு குழுவை ஏற்படுத்தி நம் வாழ்க்கை மாறுதலைப்பற்றி ஒரு ஜாபிதா தயாரிக்க வேண்டும். சமூகத்தில் இன்ன இன்ன பழைய லட்சியங்கள் நிலைத்திருக்கின்றன, புதிதாக இன்ன இன்னவை புகுந்திருக்கின்றன, மாறிய நிலையில் இன்னது செய்ய வேண்டும், சமூகத்தின் உருவம் இன்னபடி இருக்க வேண்டும் என்றெல்லாம் தீர்மானிக்க வேண்டும். சமூக வாழ்க்கையைப் பற்றி இப்படி ஆராய்ச்சி நடத்தினால், வாழ்வில் கலைக்கு உள்ள இடம் இன்னது என்பது சுலபமாக நிச்சயமாகிவிடும். பிறகு நம் பங்களாவிலுள்ள ஹால்களை வெளிநாட்டுப் பொருள்களைக் கொண்டும் உள்நாட்டுப் பொருள்களைக் கொண்டும் அலங்கரிப்பதை விட்டு, நம் சமூக வாழ்க்கை முழுவதையுமே கலைமயமாக்கப் பாடுபடுவோம். நம் நாட்டுத் தச்சர்கள், குயவர்கள், தட்டார்கள், தையல்காரர்கள் முதலிய தொழிலாளிகள் எவ்வித நோக்கமுமின்றி அலைகிறார்கள். ஏதாவது ஒரு பொருள் செய்ய வேண்டுமென்றால் பழைய காலத்து மோஸ்தரிலோ, மேல்நாட்டுக் காட்லாக்குகளை வரவழைத்து அந்த மோஸ்தரிலோ செய்கிறார்கள். பழங்காலத்தில் கல்வி கற்றவர்கள் தனுர்வேதம், ஆயுர்வேதம், சங்கீதம், அசுவ வித்தை, கஜ வித்தை ஆகிய பல கலைகளில் நிபுணர்களாக இருந்தார்கள். இன்று நம்மிடையே படித்தவர்களில் யாரும் விசுவகர்மா ஆவதில்லை; பரதாசாரியர் ஆவதில்லை; அசுவினீகுமாரர்கள் ஆவதைப்பற்றியோ பேச்சே வேண்டாம். வாழ்க்கையைச் சீர்திருத்தி, சமூக சேவையை முறைப்படுத்தும் வாழ்க்கைக் கலைஞர்கள் தோன்றினால்தான் நம் சமூகம் வாழும்; இத்தகைய முறை ஏற்பட வேண்டும் என்று சமூகம் ஆசையோடு முயன்றாலொழிய அப்படிப்பட்ட சமூகத்தலைவர்கள் தோன்றப் போவதில்லை.

வீடு கட்டும் கலை: வீடு கட்டும் கலையில் சுத்தமான காற்று, வெளிச்சம், வெயில், தெளிவான எதிரொலி, ஆரோக்கியம் முதலிய விஷயங்களைக் கவனிக்க வேண்டும். வீட்டின் வடிவத்தைப் பொறுத்த வரைக்கும், முழு வீட்டின் அலங்காரத்தில் ஒருமை இருக்கிறதா என்பதையும், நமது அத்யாத்ம வளர்ச்சிக்கு அதில் இடம் உண்டா என்பதையும் பார்க்க வேண்டும். நம்முடைய நகர அமைப்புக் கலையில் இதையெல்லாம் யாரும் கவனிப்பதில்லை. தனி ஸ்தாபனங்களின் கட்டிடங்களிலும் ஒரு முறை காணப்படுவதில்லை. பெரிய லட்சாதிபதிகள், வீடுகளைக் கலைநோக்கத்தோடும் பல வசதிகளோடும் கட்டினாலுங்கூட, கடை

சியில் பார்த்தால் அவை சின்னஞ் சிறு அழகிய அறைகளின் குவியல் களாகவே காட்சி அளிக்கின்றன. சரியான கட்டுக்கோப்பும் அள வான அமைப்பும் கொண்டவையும், வாழ்க்கையோடு ஒன்றியதால், கலை நிரம்பியவையுமான பல வீடுகள் மலைகளிலும் ஏழைக் கிராமங்களி லுங்கூட இருப்பதை நான் பார்த் திருக்கிறேன்.

எளிமை, அடக்கம், வீரம்: அறைக்குள்ளே சாமான்களைக் குவியல் குவியலாக அடுக்குவதனால் வசதியும் இருப்பதில்லை; கலையும் வளருவதில்லை. சமையலில் மசா லாவை அள்ளி அள்ளிப் போடு வதால் ருசியும் உண்டாவதில்லை; உடலுக்கும் ஆரோக்கியம் இல்லை. ஊர் ஜனங்கள் எல்லாரும் மொத்த மாகக் கூடுவதனால்மட்டும் ஒற்றுமை ஏற்பட்டுவிடாது; பரஸ்பர மதிப் பும் இராது. இருபத்துநான்கு மணி நேரமும் பாடுவதோ, ஒவ் வொரு கட்டுரையையும் கவிதையாக் கிப் படிப்பதோ, அடிக்கடி விளக்கு ஏற்றுவதோ, கண்ட நேரத்திலும் எல்லா இடத்திலும் எதையும் புகழ் வதோ கலையைக் காப்பதாகி விடாது. பம்பாயைப் போன்ற பட்டணங்களில் இரவும் பகலும் வீட்டுக்கு வீடு பாட்டின் கோலா கலந்தான். ஆனால் அதனால் அங்கே ஜனங்களுக்குச் சங்கீதச் சுவை வளர்ந்துவிட்டதாக எனக்குத் தோன்றவில்லை.

எளிமை, தூய்மை, பரப்பு, அமைதி, ஸ்திரத்தன்மை ஆகியவை இல்லாமல் கலை வள ரவே முடியாது. வாழ்க்கை முழு வதும் ஒருவன் தித்திப்புப் பண்டங் களையே அல்லது சூடான பண்டங் களையே அல்லது ஐஸ் கிரீமையே சாப்பிட்டு வாழ்ந்தால் சுவையறியும் திறன் கெட்டுப் போகும். பிறரு டைய பேச்சுக்குத் தாளம் போடு கிறவன் உண்மையான மதிப்பை அறிய முடியாது. கலைஞர்களும் ரசிகர்களும் எளிமையையும் புல னடக்கத்தையும் உயிரைப் போல ஜாக்கிரதையாகக் காக்கவேண்டும்.

நம்முடைய உடையில் கூட எளிமையும் அடக்கமும் நிரம்பி யிருக்கவேண்டும். எளிமையும் அடக்கமும் வீரமும் இல்லாத வாழ்க்கை சாரமற்றதாகவும் முறையற்றதாகவும் இருக்கும். கட லில் முத்துக் குளிப்பவர்கள் ஆழத்தில் இறங்கினால்தான் முத் துக் கிடைக்கிறது; அதுபோல் வீரத்தை வளர்த்தவர்கள் வாழ்க் கைக் கலையை மட்டுமல்ல, எந்தக் கலையின் ரகசியத்தையும் அறிய முடியும். மேலெழுந்தவாரியாக நீச்சடிப்பவர்களும் ஏதோ கொஞ் சம் ஆனந்தப்படலாம்; ஆனால் மகா சமுத்திரத்துத் திமிங்கிலங்கள் வேறு; வாய்க்கால்களில் துள்ளிக் குதிக்கும் சிறு கயல்கள் வேறு!

நகைப் பைத்தியம்: நமது நாட் டில் நகைப்பைத்தியம் அதிகமாக இருக்கிறது. இது அடிமைத்தனத் துக்கு அடையாளம். மூக்கையும் காதையும் துளைத்துக்கொள்வது காட்டுமிராண்டித்தனம். கல்வி கற்றுப் பண்பட்ட நம் சகோதரி கள் சமூகத்தில் தலைமை தாங்க விரும்பும் இந்தக் காலத்தில் இதைப்பற்றிப் புது முறையில் சிந்திக்க வேண்டும்.

சமரச வாழ்க்கையே கலை: பொன் வண்டின் சிறகுகள், கடல் மீன்கள், செடி கொடிகளின் எழில், வெவ்வேறு தேசத்துப் பறவைகள், விலங்குகள், சுரங்கத்திலிருந்து எடுத்த ரத்தினங்கள், உருகியோடும் பனிக்கட்டிகள், கடலில் காணும் சங்



வெவ்வேறு தேசத்துப் பறவை...

குகள், ஆகாயத்து வானவில், மேகங்கள் ஆகியவை எல்லாம் நமக்குப் புதுப் புது நிறங்களையும் வடிவங்களையும் கற்றுக் கொடுக்கின்றன. குஜராத்திலுள்ள நாட்டுப் பாடல், தென்னிந்தியாவிலுள்ள கர்நாடக சங்கீதம், வங்காளத்தில் காணும் இனிய கீதம், வட இந்தியாவில் உலவும் ஆர்ய-ஈரானி சங்கீதம் ஆகிய பல வகைகள் நமக்குப் பரம்பரைச் சொத்தாகக் கிடைத்திருக்கின்றன. இந்த முறைகளை எல்லாம் ஒன்றுபடுத்தி ஒரு சங்கீத பத்ததியைத் தோற்றுவிக்கும் காயனாசாரியர் எவரும் இன்று நம்மிடையே இல்லை. கல்வியறிவற்றவன் வெறும் மரியாதையோடு ஓலைச் சுவடிகளை வீட்டில் கட்டிவைப்பது போல,



கடல் மீன்கள்

நம் பணக்காரர்களும் கனவான்களும் தங்கள் வீட்டில் சங்கீதத்துக்கு இடம் கொடுக்கிறார்கள். ஆகையால் அதில் உயிர் இருப்பதில்லை. வாழ்க்கை வளம் பெறாவிட்டால் செல்வ வளத்துக்குப் பயன் இல்லை. பாரதப்போர், புத்த பகவான் மனைவியையும் குழந்தையையும் விட்டுப் பிரிவது, ஹரிச்சந்திரனுடைய பிரதிக்ஞை, சீதை காட்டுக்குப் போவது, தமயந்தியின் சுயம்வரம், சாவித்திரிக்கும் யமனுக்கும் சம்பாஷணை, சிவாஜியின் மகன் ராஜாராமன் நாடு கடத்தப்படுவது, தாண்டி யாத்திரை, ஹரிஜனங்களுக்காக மகாத்மாவின் உபவாசம்

விசித்திர விலங்கு......

ஆகிய சம்பவங்களை விளக்குவதற்கு உன்னதமான அழகிய பல புதிய ராகங்களும் சந்தங்களும் தோன்ற வேண்டும்.

பாரதநாட்டில் சேதுவிலிருந்து இமாசலம் வரைக்கும் எண்ணற்ற கோயில்களும் மூர்த்திகளும் இருக்கின்றன. நாட்டியமாடும் அப்ஸரசுகளின் மூர்த்திகள் எங்கே பார்த்தாலும் இருக்கின்றன. இவற்றிலுள்ள நாட்டிய வகை, முத்திரை, லாஸ்யம், தாண்டவம் முதலிய பல மாதிரிகளைச் சேகரித்து ஒரு சித்திரக் களஞ்சியம் தயாரித்தால் நாட்

டியக் கலைக்கு மிகவும் பயன்படும். நாட்டிய சாஸ்திரத்தில் சொன்ன லட்சணப்படி பல மூர்த்திகளை, நேபாளம், ஒரிஸா, ஹம்பி, பேலூர், இலங்கை, காஷ்மீர், பர்மா ஆகிய பல இடங்களில் நான் பார்த்திருக்கிறேன். அற்புதமான அழகு வாய்ந்த கோவா நாட்டியத்தை நாம் பாதுகாக்கவேண்டும். கேரளத்துக் கதகளி நாட்டியம் இப்போது மக்களின் கவனத்தைக் கவர்ந்திருக்கிறது. நம் முன்னோர்கள் நாட்டியத்தைப் பக்திக்கு அங்கமாகக் கருதினார்கள். சமூகத்தில் இந்தக் கலையை வளர்க்கும்போது பல ஆபத்துக்களை எதிர்க்க வேண்டியிருப்பதால், இதை ஜாக்கிரதையாகப் பயன்படுத்த வேண்டும். தீமைக்குப் பயந்து கலையையே விட்டுவிடத் தேவையில்லை.

கலையை உபாசிப்பதில் வகுப்பு வாதத்துக்கு இடமே இல்லை. ஆதலால் ஹிந்து, முஸ்லிம், பார்ஸி, கிறிஸ்தவர், கோஜா, மேமண் முதலிய பல மதங்களையும் சம்பிரதாயங்களையும் சேர்ந்தவர்கள் அனைவரும் கலையை வழிபடுவதில் ஒன்றுபட்டு, 'எங்கள் மனம் ஒன்று; எங்கள் உள்ளம் ஒன்று' என்பதை நிரூபித்துக் காட்டவேண்டும்.

வீட்டுக்கு அலங்காரம்!

ஹாலிவுட்டைச் சேர்ந்த இரண்டு எழுத்தாளர்கள் ஒரு வீட்டை ஒரு வருஷத்துக்கு வாடகை எடுத்துக்கொண்டார்கள். அவர்கள் இஷ்டப்படி வீட்டுக்கு வர்ணம் பூசித் தருவதாக வீட்டுக்காரர் ஒப்புக்கொண்டிருந்தார். ஆனால் சொன்னபடி செய்யவில்லை. கடைசியில் அந்த எழுத்தாளர்கள் இருவரும் தங்கள் செலவிலேயே அதைச் செய்துகொள்வதாகச் சொன்னார்கள். வீட்டுக்காரர் உடனே அதற்குச் சம்மதித்துவிட்டார். அவருக்குச் செலவில்லை அல்லவா? ஒரு வக்கீலிடம் போய் ஒப்பந்தப் பத்திரம் தயார் செய்து வீட்டுக்காரரிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள் எழுத்தாளர்கள்.

வீட்டைவிட்டுப் புறப்பட இரண்டு நாளைக்குமுன் அவர்கள் வீட்டுக்குத் தங்கள் இஷ்டப்படி வர்ணம் பூசிவிட்டார்கள். வீடு முழுதும் ஒரே கறுப்பு வர்ணம்!

—ஆண்ட்ரு பி. ஹெக்ட்

தம்பதிகள் குஸ்தி

சமோவா தீவில் விவாகச் சடங்கு முடிந்தவுடன் தம்பதிகள் கோயிலுக்குப் பின்னால் இருக்கும் வயல்வெளியில் போய்க் குஸ்தி போடுவது வழக்கம். அதில் புருஷன் ஜயித்தால் வீட்டுக்கு அவன்தான் எஜமான்; மனைவி ஜயித்தால் அவளுக்குப் புருஷன் அடிமை யாகிவிடவேண்டுமாம்!

—ஹிஸ்பானோ அமெரிக்கனோ, மெக்ஸிகோ.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS 4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

பிரபல ஆசிரியர்களின் பாராட்டு

ஆங்கிலத்திலும் உருதுவிலும் அருமையான கதைகளும் கட்டுரைகளும் எழுதிப் பிரசித்தி பெற்ற **கே. ஏ. அப்பாஸ்** அவர்களும் வங்காளத்தில் சிறந்த நாவலாசிரியரான **'வனபுல'** அவர்களும் 'மஞ்சரி'யைப் பாராட்டி எழுதியிருக்கிறார்கள். அவைகளை 'மஞ்சரி'யின் வாசகர்களும் அறியவேண்டாமா? கீழே தந்திருக்கிறோம்:

'மஞ்சரி' பெயருக்குத் தக்கபடி விளங்குகிறது. அது உண்மையில் ஓர் இலக்கிய மலர்க்கதம்பம். துரதிருஷ்டவசமாக எனக்குத் தமிழ் தெரியாது என்றாலும், அதிலுள்ள விஷயங்களை ஓரளவு அறிந்துகொண்டேன். இந்தியாவிலேயே பத்திரிகைப் பிரசுரத்தில் 'மஞ்சரி' ஓர் இணையற்ற முயற்சி ஆகும். பிற மாகாண மக்களின் வாழ்க்கையையும் பிற இந்திய பாஷைகளிலுள்ள இலக்கியத்தையும்பற்றி 'மஞ்சரி'யின் தமிழ் வாசகர்கள் அறிந்து வருவதைக் கண்டு, முக்கியமாய் நான் மகிழ்கிறேன். இந்தியக் கலைப்பண்பின் ஒற்றுமைக்கு மாகாணங்கள் பரஸ்பரம் இலக்கியத்தை இந்தமாதிரி பரிமாறிக்கொள்வது மிகவும் அவசிய மாகும். ஒரு நாள் நாங்களும் இதேபோல ஒரு பத்திரிகையை வெளியிடலாம் என்றும், தமிழிலும் பிற தென்னிந்திய பாஷைகளிலும் வெளியாகும் இலக்கியத்தை வட இந்திய மக்கள் அறிவதற்கு அதன் மூலம் ஒரு சந்தர்ப்பம் ஏற்படும் என்றும் நம்புகிறேன்.

'மஞ்சரி' இப்படி மலர்க்கதம்பமாக இருந்து வருவதோடுகூட, சமயம் நேரும்போதெல்லாம் வாழ்க்கையின் முட்களையும் - கசப்பான உண்மைகளையும் - வெளியிட்டு, உறங்கும் நம் சமூக மனச்சாட்சியைக் குத்தி எழுப்பவேண்டும் என்பது என் ஆசை.

—கே. ஏ. அப்பாஸ்

★

தங்கள் இலக்கியக் கதம்பமான 'மஞ்சரி' என்ற தமிழ்ப் பத்திரிகை வரப்பெற்றேன். என் தமிழ் நண்பர் ஒருவர் அதன் சிறப்புக்களை வெகுவாகப் பாராட்டினார்.

—'வனபுல'